வருடாந்த அறிக்கை
2023



கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

இலக்கம் 117, சுபத்ராராம வீதி, கங்கொடவில,
நுகேகொட.

பொருளடக்கம்

- தலைவரின் செய்தி 170
- நிறுவனத்தின் நோக்கு மற்றும் அரும்பணி பற்றிய கூற்று 172
- ணிப்பாளர் சை 173
- நிறுவனத்தின் தாபனக் கட்டமைப்பு 174
- முன்னுரை 175

பிரிவுகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர்களின் அறிக்கைகள்

- நெறிப்படுத்தல் பிரிவு 178
- காப்புறுதிப் பிரிவு 184
  - கமத்தொழில் காப்புறுதி அலுவல்களும் கால்நடைக் காப்புறுதி அலுவல்களும்
- ஓய்வூதியப் பிரிவு 188
  - கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் மற்றும்
  - கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
- நிருவாக மற்றும் மனித வளப் பிரிவு 199
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 205
- திட்டமிடல் பிரிவு 208
- தகவல் தொழில்நுட் ˙ பிரிவு 215
- நிதிப் பிரிவு 220

கணக்குகள்

- முந்திய ஐந்து வருடங்களின் நிதிசார் தகவல்கள் 222
- ஒட்டுமொத்த செயற்றிட்டங்களுக்கான ஒருங்கிணைந்த கணக்குக் கூற்றுகள்
  கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம் 226
- கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 257
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய , சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 278

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைள் 298

- கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம்
- கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளுக்கான பதில்கள் 325

- கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம்
- கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்பரித்திட்டம்

கௌரவ தலைவரின் செய்தி

கடந்த வருடத்தில் கமக்காரர் மற்றும் கடற்றொழிலாளர்களின் காப்புறுதி மற்றும் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட செயற்பாங்கு 2023 ஆம் ஆண்டிலும் மிகவும் உயர்வான மட்டத்தில் நெறிப்படுத்தப்பட்டமை ஊடாக ஏனைய காப்புறுதி நிறுவனங்களுடன் போட்டித்தன்மையை ஏற்படுத்தியதால் சபையின் பெயரை உயர்ந்த இடத்திற்கு கொண்டு வருவதற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களையும் திட்டங்களையும் அமுலாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்'படி 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சட்டம், 1978 இன் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம் மற்றும் 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம் மூலமாக வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க தொடர்ந்தும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தப்பட்டது.

மேற்படி அலுவல்களை முறைப்படி அமுலாக்குவதற்காக புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக சபையின் நடவடிக்கைகளை டிஜிட்டல்மயமாக்க வேண்டியதன் அவசியம் பற்றி முதன்மைக் கவனஞ் செலுத்தப்பட்டு பல வருடங்களாக மேற்படி அவசியப்பாட்டினை பூர்த்திசெய்து கொள்வதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் பெறுபேறாக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் GIZ ஜேர்மனிய அமைப்பினால் வழங்கப்பட்ட நிதிசார் பங்களிப்பு மூலமாக அந்த நடவடிக்கைகளை ஆரம்பிக்க இயலுமானதாக அமைந்ததோடு அது சபை பெற்ற பாரிய வெற்றியென எடுத்துக்காட்டப்படலாம்.

சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற காப்புறுதிச் செயற்றிட்டங்களை மிகவும் வசதியாக கமக்காரர்களுக்கு வழங்கும்பொருட்டு மூன்றாந் தரப்பு காப்புறுதி வசதிகள் பிரதேச செயலாளர் அலுவலகங்கள் ஊடாக நடைமுறைப்படுத்துகின்ற அலுவல்கள் மிகவும் விரிவானதாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளல் மற்றும் தொடர்ந்தும் அதுபற்றி கவனஞ் செலுத்தி அஞ்சல் அலுவலகங்கள் மூலமாகவும் மூன்றாந் தரப்புக் காப்புறுதி வசதிகளை வழங்குதல் 2023 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. மேலும், வாழ்க்கை காப்பீட்டு திட்டத்தை தொடங்குவதற்குத் தேவையான அடிப்படை தேவைகளை நிறைவு செய்யும் நடவடிக்கைகள் இந்த ஆண்டில் எடுக்கப்பட்டுள்ளன.

பணியாட்டொகுதி பயிற்சித் தேவைகளை இனங்கண்டு கடந்த வருடத்தில் தயாரிக்கப்பட்ட பயிற்சிக் காலஅட்டவணைக்கிணங்க அனைத்து சேவைத் தொகுதிகளுடனும் தொடர்புடைய பணியாட்டொகுதியினருக்கான பயிற்சிநிகழச்சிகளை அமுலாக்குதலை 2023 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஆயுட் காப்புறுதி செயற்றிட்டமொன்றை ஆரம்பித்தல் சம்பந்தமான அடிப்படை அவசியப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.

கமக்காரர் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கான ஓய்வூதியம் செலுத்துதல் சம்பந்தமாக எடுத்துக்கொண்டால் 1987 இல் அமுலாக்கப்பட்ட கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின்கீழ் 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் 175,006 ஓய்வூதியம் பெறுனர்களுக்காக ரூ. 4,375,215,623/- பணத்தொகை ஓய்வூதியமாக செலுத்தப்பட்டது. 2022.10.31 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 2023.12.31 ஆந் திகதியளவில் 2166 கமக்காரர்கள் உறுப்பாண்மை பெற்றுள்ளதோடு அவர்கள் தவணைப்பணமாக செலுத்தியுள்ள தொகை ரூ 20,730,787 /- ஆகும்.

அதனைத் தவிர, அமைப்பு செயல்படுத்தும் மூன்றாம் பக்க காப்பீடு திட்டம் உட்பட மற்ற காப்பீட்டு திட்டங்களின் மூலம், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 29% வளர்ச்சி, அதாவது ரூ. மில்லியன் 502 ஐ 2023 ஆம் ஆண்டில் சம்பாதிக்க அமைப்பிற்கு முடியவிருந்தது. அதனடிப்படையில், அமைப்பு ஊதியம் மற்றும் தவணைகள், நிர்வாக செலவுகள் போன்ற நடவடிக்கைகள் மேற்கொண்டு மேலும் சுய நிதி அடிப்படையில் தொடர்ந்தும் செயற்படுத்தி வருகிறது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினால் 2023 ஆம் ஆண்டில் கமத்தொழில் காப்புறுதிச் செயற்றிட்டங்கள் மூலமாக ரூ. 769 மில்லியன் தேறிய இலாபம் ஈட்டியுள்ளதோடு, இந்த ஆண்டில் ஈட்டியுள்ள தொழிற்பாட்டு இலாபம் ரூ.1,268 மில்லியன் ஆகும். 2021/22 பெரும்போகம் , 2022 சிறுபோகத்திலும் 2023 பெரும்போகத்திலும் இடம்பெற்ற பயிர்ச்சேதத்திற்காக 2023 ஆம் ஆண்டில் பயிர்க் காப்புறுதி இழப்பீடாக ரூ2,116/- பணத்தொகை கமக்காரர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு பற்றிக் கவனஞ் செலுத்துகையில் முந்திய வருடங்களைப் பார்க்கிலும் சபையின் நடவடிக்கைகளில் கணிசமான வளர்ச்சியைப் பெற்றுக்கொள்ள இயலுமான மற்றும் புதிய தொழில்நுட்பத்திற்கிணங்க செயலாற்றுவதற்கான மூலாரம்பத்தை மேற்கொள்ள இயலுமான வெற்றிகரமான வருடமெனக் குறிப்பிடலாம்.

டபிள்யூ.எம்.எம்.பி. வீரசேகரா
தலைவர்,
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை.

<u>கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை</u>

நோக்கு

உள்நாட்டு விவசாயத்தின் உன்னதமான பாதுகாவலனாக மாறுவதன் மூலமாக தெற்காசியாவின் மிகச்சிறந்த முன்னுதாமாரணமாகத் திகழும் காப்புறுதி நிறுவனமாதல்.

அரும்பணி

கமத்தொழில் காப்புறுதி மற்றும் பாதுகாப்பினை வழங்குவதற்கான கூட்டு முயற்சிகள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை இணைப்பாக்கம் செய்வதன் ஊடாக சர்வதேசரீதியாக எற்றுக்கொள்ளக்கூடிய தலைசிறந்த சேவையை வழங்குதல்.

• • • •

பணிப்பாளர் சபை- 2023

	பெயர்	பதவி
01	திரு. டப்ளிவ். எம்.எம். பீ. வீரசேகர தலைவர் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை	தலைவர்
02	பி. மாலதி பணிப்பாளர் நாயகம் விவசாயத் திணைக்களம்	அங்கத்தவர்
03	ஆர். எம். டீ. கே. ஜீ. என். டீ. ரணதுங்க மேலதிக பணிப்பாளர் நாயகம் (ACTG) திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம்	அங்கத்தவர்
04	பேராசிரியர் திரு. சீ. என். எஸ். கமகே பணிப்பாளர் (காலநடை வளங்கள் திணைக்களம்) (இராஜாங்க அமைச்சு), கால்நடை வளங்கள் இராஜாங்க அமைச்சு, விலங்கு வேளாண்மை மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள்	அங்கத்தவர்
05	திரு. ஏ. எச். எம். எல். அபேரத்ன ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தி திணைக்களம்.	அங்கத்தவர்
06	திரு. ஆர். ஏ. டீ. எஸ். ரணதுங்க, பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) கடற்றொழில் மற்றும் நீரகவளத்துறை அமைச்சு, புதிய செயலகம்	அங்கத்தவர்
07	திரு. ஜீ.ஜீ. தனஞ்சய நந்தசிறி உதவி உப தலைவர் கிளை முகாமையாளர் மாத்தறை கிளை இலங்கை வங்கியின் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம	அங்கத்தவர்
08	திருமதி நிலகூஷி என். குணசேகர மேலதிக செயலாளர் (நிருவாகம் மற்றும் மனித வளம்) கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு. திரு. கே.சீ. நிரோஷன், மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) உரப் பிரிவு கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.	அங்கத்தவர்
09	எஸ். எம். ஜீ. சமரக்கோன் 120, ஹுருள்மீகஹபிட்டிய, மெகொடவெவ, அநுராதபுரம்.	அங்கத்தவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

தாபனக் கட்டமைப்பு



முன்னுரை

விவசாயத்தின் நிலைபெறுதகு அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற தேசிய வேலைத்திட்டத்தில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை பிரமாண்டமான செயற்பொறுப்பினை ஈடேற்றி வருகின்றது.

அதன் முதன்மைப் பணியாக அபாயநேர்வு முகாமைத்துவத்தில் விவசாயிக்காக நடுநிலையான தரப்பினரொருவராக தொடர்புபடுதல் சிறப்பு முக்கியத்துவம் வகிக்கின்றது. அதன்போது விவசாயியின் பயிர்களின் அபாயநேர்வினை ஏற்றுக்கொள்ளலுக்கு மேலதிகமாக விவசாயிகளின் வாகனங்கள், உபகரணங்கள் மற்றும் களஞ்சியங்களுக்காகவும் பாதுகாப்பினை வழங்கி விவசாயியின் சமூகப் பாதுகாப்பிற்காக செயலாற்றி வருவதும் தனித்துவமானதாகும்.

விவசாயியைப் போன்றே விவசாயத்தினதும் நிலைபெறுதகு மேம்பாட்டுக்காக நாட்டின் உணவு உற்பத்திச் செயற்பாங்கினை மிகவும் உறுதியாகவும் துரிதப்படுத்தும் நோக்கத்துடனும் கமத்தொழில் அமைச்சினை முதன்மையாகக்கொண்டு அரசாங்கத்தினால் விவசாயிகளுக்காக அமுலாக்கிய உரமானியம் போன்ற கமக்காரர்களுக்கான வசதிகளை ஊக்குவித்தலின்கீழ் தீவில் செய்கைபண்ணப்படுகின்ற 06 பிரதான பயிர்வகைகளுக்காக 2018 சிறுபோகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலவசமாக வழங்கிய கட்டாயக் காப்புறுதித் திட்டம் 2023 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

வருடாந்த தவணைப்பண வருமானம் 2019 தொடக்கம் 2023 வரை

காப்புறுதித் திட்டம்	2019 (ரூ. மி.)	2020 (ரூ. மி.)	2021 (ரூ. மி.)	2022 (ரூ. மி.)	2023 (ரூ. மி.)
பயிர்க் காப்புறுதி செயற்றிட்டம்	61.11	45.89	74.24	55.71	100. 70
கால்நடைக் காப்புறுதி செயற்றிட்டம்	7.87	5.78	11.07	5.25	15.59
களஞ்சிய/ விவசாய உபகரணங்கள் மற்றும் மூன்றாந்தரப்பு காப்பறுதி செயற்றிட்டங்கள்	220.15	278.94	296.50	311.04	353.44
சுவசெத மற்றும் திடீர் விபத்து காப்புறுதி செயற்றிட்டம்	9.42	13.78	9.04	18.55	32.30
கூட்டுத்தொகை	298.55	344. 39	390.85	390.55	502.03

வருடாந்த தேறிய இலாபம் 2019 தொடக்கம் 2023 வரை

விவசாய மற்றும் விவசாய காப்புறுதி வாரியம் (குழு)					
	2019 (ரூ. மி.)	**2020 (ரூ. மி.)**	**2021 (ரூ. மி.)**	**2022 (ரூ. மி.)**	**2023 (ரூ. மி.)**
மொத்த வருமானம்	3,603.98	3,724.63	3,655.16	3,676.44	**3,848.42**
தொழிற்பாட்டுச் செலவு	(5,825.46)	(6,800.28)	(5,550.40)	(9,493.46)	**(11,775.60)**
தொழிற்பாட்டு மிகைநிலை	(2,221.49)	(3,075.65	(1,895.24)	(5,817.01)	**(7,927.18)**
அரச கொடையும் பிற வருமானமும்	3,215.52	4,661.08	4,011.14	4,167.82	**4,619.45**
மொத்தச் செலவு (ஒதுக்கீடுகளும் உள்ளிட்டதாக)	(4,499.33)	(4,667.95)	(4,816.70)	(694.02)	**(682.12)**
வருடாந்த தேறிய இலாபம் / நட்டம்	(3,505.30	(3,083.72)	(2,700.79)	(2,343.21)	**(3,989.87)**

கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம்					
	2019 (ரூ.மில்)	**2020 (ரூ.மில்)**	**2021 (ரூ.மில்)**	**2022 (ரூ.மில்)**	**2023 (ரூ.மில்)**
மொத்த வருமானம்	3,365.07	3,530.41	3,456.90	3,432.32	**3,488.25**
தொழிற்பாட்டுச் செலவுகள்	(2,487.01)	(2,129.08)	(1,704.90)	(769.18)	**(2,220.02)**
தொழிற்பாட்டு மிகைநிலை	878.06	1,401.34	1,752.00	2,663.14	**1,268.23**
அரச கொடையும் பிற வருமானமும்	9.14	8.30	8.16	6.75	**14.35**
மொத்த செலவுகள் (ஒதுக்கீடுகளையும் உள்ளிட்டதாக)	(234.86)	(255.96)	(265.81)	(462.08)	**(405.30)**
வருடாந்த தேறிய இலாபம்/ நட்டம்	652.34	1,153.68	1,494.36	2,207.80	**877.28**

2023 ஆம் ஆண்டில் சபையின் வருமானத்தில் முனைப்பாகத் தெரிகின்ற முன்னேற்றத்தை அடைவதில் அனைத்துக் காப்புறுதித் திட்டங்களும் வெற்றிகண்டன. 2022 ஆம் ஆண்டில் 390.55 மில்லியன் ரூபாவாக அமைந்த வருமானத்தை 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 502.03 மில்லியன் ரூபா வரை அதிகரித்துக் கொண்டமை இவ்வாண்டின் தனித்தன்மையாகும். மாவட்ட மட்டத்தில் பரவலான சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியதன் மூலமாக அனைத்து செயற்றிட்டங்களும் தொடர்பிலான நம்பிக்கையை விவசாயிகள் மத்தியில் ஏற்படுத்தியதன் பெறுபேறாக இந்த முன்னேற்றத்தை அடைய இயலுமாயிற்று. இதன் மூலமாக ஈட்டிக்கொண்ட வருமானம் சபையின் நிதிசார் உறுதிநிலையினை வளர்த்தெடுக்க பெரிதும் உறுதுணையாக அமைந்தது.

GIZ (Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit) நிறுவனத்தின் நிதியுதவியின்கீழ் சபையின் உள்ளக நிருவாகம் மற்றும் தொழிற்பாட்டு செயற்பாங்கினை டிஜிட்டல்மயமாக்குவதற்காக முறைமையை ERP (Enterprise Resource Planning) அமுலாக்க அவசியமான தொழில்நுட்ப செயற்பாங்கினை மேற்கொள்ளலும் திட்டமிடலும் மேற்கொள்ளப்பட்டது.

தகவல் தொழில்நுட்ப பிரிவு நிறுவப்பட்டதனால் சபையின் பிரச்சார நடவடிக்கைகளையும் விழிப்புணர்வூட்டல் நடவடிக்கைகளையும்

மேற்கொள்வதற்காக e - SMS சேவையொன்றினை அதாவது குறுஞ்செய்தி சேவையை ஆரம்பித்ததோடு அதன் மூலமாக அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் தலைமை அலுவலகத்திலும் இடம்பெறுகின்ற வாடிக்கையாளர் விழிப்புணர்வூட்டல் மற்றும் ஏனைய மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த குறுஞ்செய்தி சேவையூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதி சபையினால் அமுலாக்கப்படுகின்ற பிரதானமான சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டமான கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின்கீழ் 2023 ஆண்டின் இறுதியில் புதிய திட்டத்தில் பங்களிப்புச் செய்துள்ள மொத்த உதவுதொகை செலுத்துனர்களின் எண்ணிக்கை 2,166 ஆக அமைந்ததோடு, இவ்வாண்டில் இந்த செயற்றிட்டத்தின்கீழ் நன்மைகள் வழங்கப்படுகின்ற கமக்காரர்களின் எண்ணிக்கை 175,006 ஆகும்.

இதற்கு மேலதிகமாக மீனவர் சமுதாயத்தின் நன்மை கருதி நடைமுறைப்படுத்தப்படுகின்ற கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின்கீழ் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 69,049 மீனவர்கள் அங்கத்துவம் வகிப்பதோடு 5,839 கடற்றொழிலாளர் ஓய்வூதியம் பெறுனர்களுக்கு மாதாந்தம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

நாட்டில் நிலவிய ஸ்திரமற்ற பொருளாதார நிலையிலும்கூட தேசிய விவசாய, கால்நடைவள செயற்பாங்கிற்கு விரிவான பங்களிப்பினை வழங்கி அபாயநேர்வினைக் குறைப்பதற்கான சக்தியை விவசாயியை முதன்மையாகக்கொண்ட தேசிய விவசாய உற்பத்திச் செயற்பாங்கிற்கு வழங்கி நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார உற்பத்திச் செயற்பாங்கில் முதன்மைப் பங்கினை ஆற்றிவருகின்ற நிறுவனமென்றவகையில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தனது பொறுப்பினை 2023 ஆம் ஆண்டிலும் ஈடேற்றியது.

நெறிப்படுத்தல் பிரிவு

நெறிப்படுத்தல் பிரிவு

அபாயநேர்வு முகாமைத்துவ முறையியல் என்றவகையில் உள்நாட்டு விவசாயத் துறைக்கு கமத்தொழில் காப்புறுதியை அறிமுகஞ்செய்து உள்நாட்டு விவசாய உற்பத்தியை மேம்படுத்துவதையும் விவசாயியை பாதுகாப்பதையும் முதன்மை செயற்பொறுப்பாகக்கொண்டு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை இயங்கி வருகின்றது. வறட்சி, வெள்ளப்பெருக்கு, காட்டு யானைகளின் சேதம் உள்ளிட்ட இயற்கை அனர்த்த நிலைமைகளின்போது கமக்காரர்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதார சிக்கல்களுக்கு சிறந்த தீர்வு என்றவகையில் கமத்தொழில் காப்புறுதி முறையியல் முக்கியத்துவம் வகிக்கின்றது. அதைப்போலவே விவசாயப் பொருளாதார பாங்கினூடாக உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துகையில் விவசாய அபாயநேர்வு முகாமைத்துவத்தை மிகவும் நடைமுறைச் சாத்தியமானவகையில் பிரயோகித்தல் உள்நாட்டு விவசாய பொருளாதாரத்தையும் வாழ்க்கைப் போக்கினையும் உறுதியான மட்டத்திற்கு பேணிவருவதற்கான பாரிய உறுதுணையாக அமைந்துள்ளது. குறிப்பாக கமக்காரர்களுடன் மிகவும் நெருக்கமான பயிர்க் காப்புறுதித் திட்டம், கால்நடைக்காப்பறுதித் திட்டம், சுவசெத மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதி, விவசாய உபகரணக் காப்பறுதி, களஞ்சியக் காப்புறுதி மற்றும் மூன்றாந் தரப்பு மோட்டார் வாகனக் காப்புறுதி போன்ற அதிக நன்மைகளைக்கொண்ட பல காப்பறுதிச் செயற்றிட்டங்கள் கமக்காரர்களுக்காக சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் சேவைகளை கமக்காரர் மத்தியில் விரிவாக்குகையில் மிகவும் முக்கியமான செயற்பொறுப்பினை ஈடேற்றுதல் நெறிப்படுத்தல் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சபையினால் அமுலாக்கப்பட எதிர்பார்த்துள்ள எதிர்கால வேலைத்திட்டத்தை உள்ளிட்ட கூட்டுத் திட்டத்திற்கு அமைவாக அனைத்துவிதமான தாபனஞ்சார் திட்டங்களைத் தயாரித்தல், அந்த திட்டங்களை அமுலாக்கச் செய்விப்பதற்காக நாடளாவியரீதியில் பரந்துள்ள மாவட்ட அலுவலகங்களை நெறிப்படுத்துதல், அதற்கான மனித மற்றும் பௌதீக அவசியப்பாடுகளை நிறைவுசெய்தலை உள்ளிட்ட தனித்துவமான செயற்பொறுப்பினை நெறிப்படுத்தல் பிரிவு ஈடேற்றி வருகின்றது.

- விவசாயத்துறையில் காப்புறுதிச் சேவைகளை வழங்கிவருகின்ற பிரதான அரச நிறுவனம் என்றவகையில் உள்நாட்டு விவசாயத்தை மேம்படுத்துதல் மற்றும் விவசாயியின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துதல் தொடர்பில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பினை உச்ச அளவில் ஈடேற்றுவதை நோக்கமாகக்கொண்டு 2023 ஆம் ஆண்டிலும் பல காப்புறுதிச் செயற்றிட்டங்களை நாடளாவியரீதியில் அமுலாக்க நெறிப்படுத்தல் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.
    1. பயிர்க் காப்புறுதிச் செயற்றிட்டம்
        - நெற் பயிர்க் காப்பறுதித் திட்டம்
        - சோளச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
        - பெரிய வெங்காயச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
        - உருளைக் கிழங்குச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
        - மிளகாய் செய்கைக் காப்புறுதித் திட்டம்
        - சோயா செய்கைக் காப்புறுதித் திட்டம்

- மேலதிக பயிர்ச்செய்கை காப்புறுதித் திட்டம் (எள்ளு, குரக்கன், கொள்ளு, பயறு, கவ்பி, உழுந்து)
- கரும்புச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- ஏற்றுமதிப் பயிர்ச் செய்கைக் காப்புறுதித் திட்டம் (மிளகு, கறுவா)
- பெருந்தோட்டச் செய்கைக் காப்புறுதித் திட்டம் (தேயிலை)
- தெங்குச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- மலர்ச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- இஞ்சி செய்கைக் காப்புறுதித் திட்டம்
- மரக்கறிச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- வாழைச் செய்கைக் காப்புறுதித் திட்டம்
- பழச் செய்கைக் காப்புறுதித் திட்டம்

2. களஞ்சியக் காப்புறுதித் திட்டம்
3. விவசாய உபகரணக் காப்புறுதித் திட்டம்
4. கால்நடைக் காப்புறுதித் திட்டம்
    - மாடுகள்
    - ஆடுகள்
5. திடீர் விபத்து காப்புறுதித் திட்டம்
6. சுவசெத சுகாதாரக் காப்பறுதித் திட்டம்
7. மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டம்
8. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்
    - கமக்காரர் ஒய்வூதியத் திட்டம்
    - கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்

வறட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டு யானைகளின் அட்டகாசம் காரணமாக இடம்பெறுகின்ற அனர்த்தங்களிலிருந்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு ஏற்படக்கூடிய சேதங்கள் காரணமாக கமக்காரர் சமுதாயம் எதிர்நோக்க நேரிடுகின்ற சிரமங்களுக்கான தீர்வாக நெல், சோளம், உருளைக்கிழங்கு, சோயா மற்றும் மிளகாய் செய்கைகளுக்காக கமக்காரர்களினதும் அரசாங்கத்தினதும் பங்களிப்பினைக்கொண்ட கட்டாயக் காப்புறுதித் திட்டத்திற்கு கமக்காரர்களை சேர்த்துக்கொள்ளல் இடம்பெற்றதோடு 2018 சிறு போகத்தில் இருந்து கமக்காரர்களிடமிருந்து தவணைப்பணம் அறவிடாமல் அரசாங்கத்தின் கொள்கைரீதியான தீர்மானத்தின்பேரில் ஏக்கரொன்றுக்காக உச்ச அளவில் ரூ. 40,000/- இற்கு கட்டுப்பட்டதாக காப்புறுதிக் காப்பீட்டினை வழங்க அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. கமத்தொழில் அமைச்சு, கமநல சேவைகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, அரச மற்றும் அரச சார்பற்ற வங்கிகளை உள்ளிட்ட ஏற்புடைய அனைத்து நிறுவனங்களினதும் இணைப்பாக்கத்துடன் இந்த காப்புறுதிச் செயற்றிட்டம் 2018 சிறு போகத்தில் இருந்து சபையினால் நாடளாவியரீதியில் அமுலாக்கப்படுகின்றது.

நெறிப்படுத்தல் பிரிவினால் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் :

- கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையின் அனைத்து அலுவலகங்களையும் ஒரே மாதிரியின்கீழ் கொண்டுவருவதை அடிப்படை நோக்கமாகக்கொண்டு ஒரே மாதிரிக்கமைய பெயர்ப்பலகைகளை தயாரித்துப் பொருத்தியமை.

- 2023 ஆண்டின் புத்தரிசி விழா அதிமேதகு சனாதிபதியின் தலைமையில் 2022.04.01 மற்றும் 02 ஆகிய திகதிகளில் அநுராதபுரம் ஜயஸ்ரீ மகா போதியின் அருகில் நடாத்தப்பட்ட பெருவிழாவிற்கு அனுசரணை காட்டுதலும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளல்.

- நாட்டில் நிலவிய கடும் வறட்சி நிலைமை காரணமாக கொழும்பு, அபயாராமய விகாரையில் நடாத்திய மழைக்கான பிரித் பாராயண புண்ணிய கருமத்திற்கான உபசரிப்பு மற்றும் பிரிகர வழங்குதல் ஆகியவற்றுக்கான அனுசரணை வழங்கப்பட்டது.

- 2023.04.20 ஆந் திகதி தேசிய மரநடுகை தினம் சம்பந்தமாக அச்சு ஊடகங்கள் வாயிலாக முன்கூட்டிய பிரச்சாரங்களை மேற்கொள்ளலும் அதற்கு இணையாக மாவட்ட அலுவலகங்களில் மரநடுகை நிகழ்ச்சிகளை அமுலாக்குதல்.

- இலங்கை அஞ்சல் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்ததால் (2023.09.27) இரண்டாந்தரப்பு மோட்டார் வாகன காப்புறுதி அலுவல்கள் அஞ்சல் நிலையங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுதல்.

- அனைத்துப் பிரதேச செயலகங்கள் ஊடாகவும் மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் சம்பந்தமான பூர்வாங்க நடவடிக்கைகளை ஒருசில மாவட்டங்களை மையமாகக்கொண்டு மேற்கொள்ளல்.

- மூன்றாந் தரப்பு மோட்டார் வாகனக் காப்புறுதி செயற்றிட்டம் சம்பந்தமாக 02/2003 சுற்றறிக்கையை தயாரித்தமை.

- சபையின் காப்புறுதி செயற்றிட்டங்கள் பற்றி விழிப்புணர்வூட்டுவதற்காக கேகாலை மாவட்டத்தில் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிகழ்ச்சியை நடாத்தியமையும் அந்த திகதிகளில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மூலமாக அது பற்றிய பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டமையும்.

- கம்பஹா மாவட்ட விவசாய அமைப்புக் கிளையின் பிரதிநிதிகளுடன் காப்புறுதி முறையியல்கள், இழப்பீடு செலுத்துதல் முறையியல் பற்றிய விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சியை நடாத்தியமை.

- நுவரெலியா, இரத்தினபுரி, குருநாகல், கம்பஹா, கிளிநொச்சி, மாகோ, தம்புத்தேகம, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நடவடிக்கைகளை இற்றைப்படுத்துவதற்காக பெனர் மற்றும் துண்டுப்பிரசுரங்களை மாவட்ட அவசியப்பாட்டுக்கிணங்க அச்சிட்டுக்கொள்ள அவசியமான ஏற்பாடுகளையும் அச்சிடல் மாதிரிகளையும் வழங்குதலும் அறிவுறுத்தல்களை வழங்குதலும்.

- சந்தை சாத்தியவளத்திற்கு ஏற்றவகையில் வாடிக்கையாளர்களின் வசதியை உள்ளிட்ட விடயங்களை கவனத்திலெடுத்து அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, மாகோ, கண்டி, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட அலுவலகங்களை புதிய கட்டிடங்களில் நிறுவியமை.

- மாவட்ட அலுவலக கட்டிடங்கள் மற்றும் சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ குடிமனைகளை தேவைக்கேற்றவாறு திருத்தியமைத்தலும் வாடிக்கையாளர்களை கவரத்தக்கவகையில் அமைத்தலும் (அநுராதபுரம், குருநாகல், மாத்தறை, யாழ்ப்பாணம், மாகோ, கண்டி, அம்பாந்தோட்டை, காலி, பொலநறுவை, பதுளை, நுவரெலியா, மன்னார், களுத்துறை, தம்புத்தேகம)

- சபையின் மாவட்ட அலுவலகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதற்காக குறைபாடுகள் நிலவிய தளபாடங்களை வழங்குதல்.(கொழும்பு, யாழ்ப்பாணம், கம்பஹா, கேகாலை, கண்டி, கிளிநொச்சி, அம்பாறை, இரத்தினபுரி, எம்பிலிபிட்டிய, முல்லைத்தீவு, மன்னார், காலி, புத்தளம்)

- கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்கான ஆவணக் காப்பகமொன்றையும் பயிற்சி நிலையமொன்றையும் பெற்றுக்கொள்ளல். (2023.03.14)

- சபையின் காப்புறுதி சந்தைப்படுத்தல் அலுவல்களை ஒழுங்குறுத்துவதற்காக 969 புதிய வெளிவாரி முகவர்களை ஆட்சேர்ப்பு செய்தலும் காப்புறுதி முறையில்கள் பற்றி நாடளாவிய விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்தியமையும்.

- கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையின் வெளிவாரி சந்தைப்படுத்தல் முகவர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்ட முகவர்களுடனான ஒன்றுகூடலை நடாத்தியமை.(கேகாலை, மொணறாகல, பதுளை, அம்பாறை, மாகோ, மாத்தறை, மன்னம்பிட்டி, களுத்துறை, கொழும்பு, கேகாலை, மட்டக்களப்பு, கண்டி)

- காலி மாவட்டத்தில் லபுதூவ விவசாயப்பண்ணை வளாகத்தை மையமாகக்கொண்டு நடாத்திய "தக்ஷிண க்ருஷி நவோதய" வர்த்தக கண்காட்சியில் கண்காட்சிக் கூடமொன்றை பேணிவந்தமை.

- கண்டி மாவட்டத்தில் குண்டசாலை, இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் 75 வது ஆண்டுநிறைவுக்கு இணையாக நடைபெற்ற கண்காட்சியில் கண்காட்சிக் கூடமொன்றை பேணிவந்தமை.

- சபையின் காப்புறுதி செயற்றிட்டங்கள் பற்றி விழிப்புணர்வூட்டுவதற்காக இரத்தினபுரி மாவட்டத்தில் பிரதானமாக பொதுச்சந்தை, இரத்தினக்கல் சந்தை, பிரதான பஸ்தரிப்பு நிலையம், உள்ளிட்ட வளாகங்களில் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தமையும் விழிப்புணர்வூட்டுதல் மூலமாக சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தியமையும்.

- நீர்ப்பாசன அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட CRIWM கருத்திட்டம் சார்ந்ததாக நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டுவதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வடமேல் மற்றும் வட மாகாண மாவட்ட அலுவலகமொன்றிலிருந்து ஓர் உத்தியோகத்தர் வீதம் பங்கேற்கச் செய்வித்தமை.

- கொழும்பு பல்கலைக்கழக பழைய மாணவர்கள் சங்கத்தின் 31 வது வருடாந்த மகாசபைக் கூட்டம் மற்றும் ஒன்றுகூடல் தருணத்தின் கண்காட்சிக்காக சபையின் காப்புறுதிச் செயற்றிட்டங்கள் தொடர்பான பெனரை வழங்கியமையும் அனுசரணை வழங்கியமையும்.

- கம்பஹா மாவட்டத்தின் கமநல அபிவிருத்தி திணைக்களம் மூலமாக ஏற்பாடுசெய்த "கொவிஜன வங்கி அபிமன்" மேம்பாட்டு நிகழ்ச்சிக்கு சபை அனுசரணை வழங்கியமை.

- கமத்தொழில் அமைச்சரை உள்ளிட்ட அரச பிரிவின் உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் பயிர்ச்சேத இழப்பீட்டுக் காசோலைகளை வழங்குகின்ற வைபவங்களை நடாத்தியமை (2022 சிறுபோகம், 2022 23 மகாபோகம் - காலி, எம்பிலிபிட்டிய, தம்புத்தேகம, மொணறாகல, மாகோ, மட்டக்களப்பு - 2023 சிறுபோகம் - எம்பிலிபிட்டிய, மாகோ, அம்பாந்தோட்டை)

- 2023 சிறுபோகத்தில் பாரியளவில் பயிர்ச்சேதம் ஏற்பட்ட எம்பிலிபிட்டிய, அம்பாந்தோட்டை மாவட்டங்களின் பயிர்ச்சேதங்களை பரிசோதிக்கும் நடவடிக்கைகள் கட்டுகுருந்த விமானப் படை முகாமின் உத்தியோகத்தர்களுடனான இணைப்பாக்கத்துடன் ட்றோன கெமறா தொழில்நுட்பப் பாவனை மூலமாக மேற்கொள்ளப்பட்டமை.

- அம்பாந்தோட்டை மாவட்டத்தின் 18 கிராமங்களை முதன்மையாகக்கொண்டு இளம் விவசாயத் தொழில்முயற்சியாண்மை கிராமங்களை நிறுவுவதற்கான முன்னோடிக் கருத்திட்டங்களை மேற்கொண்டமை.

காப்புறுதிப் பிரிவு

கமத்தொழில் காப்புறுதித் திட்டமும்
கால்நடை வளக் காப்புறுதித் திட்டமும்

காப்புறுதிப் பிரிவு

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் காப்புறுதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான பணியாக அமைவது காப்புறுதிச் செயற்றிட்டங்களை தயாரித்தல், அவை பற்றிய விழிப்புணர்வூட்டல் மற்றும் அமுலாக்கப்படுகின்ற காப்புறுதிச் செயற்றிட்டங்களின்கீழ் எழுகின்ற உரிமைகோரல்களுக்கான இழப்பீட்டுத் தொகைகளை விடுவித்தலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பவையாகும். அதன்படி பிரிவின் கடமைகள் கீழே குறிப்பிட்டவாறு மேற்கொள்ளப்பட்டன. அதாவது, முந்திய வருடங்களில் போன்றே பயிர்ச்சேதங்களுக்காக இழப்பீட்டுதொகைகளை விடுவிக்கின்ற பணிகளுக்கு முதன்மைத்தானம் வழங்கி கடமைகள் புரியப்பட்டன.

அதைப்போலவே 2023 ஆம் ஆண்டில் 06 வகையான பயிர்களுக்கு அமுலாக்கப்பட்ட காப்புறுதிச் செயற்றிட்டங்கள் இற்றைப்படுத்தப்பட்டன.

அதற்கு மேலதிகமாக பிரிவுகளுடன் தொடர்புபட்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதும் கணக்காய்வு அலுவல்களுக்காக சம்பந்தப்பட்ட பதில்களை வழங்கி கிடைக்கின்ற அறிவுறுத்தல்களின்படி முறையியல்களை தயாரித்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டமையும் ஈடேற்றப்பட்டது.

2023 ஆம் ஆண்டில் கட்டாயப் பயிர் வளர்ப்பு காப்புறுதிக்கு மேலதிகமாக 20 வகையான பயிர்கள் தொடர்பில் நிலவிய காப்புறுதி செயற்றிட்டங்களை இற்றைப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதைப்போலவே காளான் வளர்ப்பு காப்புறுதியை இற்றைப்படுத்தி சாத்தியவளம் நிலவுகின்ற மாவட்டங்களுக்கு அதனை சந்தைப்படுத்துவதற்காக வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தெங்கு வளர்ப்பு மற்றும் கொடித்தோடை வளர்ப்பிற்காக காப்புறுதிச் செயற்றிட்டங்கள் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதோடு எதிர்வரும் வருடங்களில் சந்தைப்படுத்துவதற்காக மாவட்டங்களுக்கு ஆற்றுப்படுத்துவதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

அதைப்போலவே பயிர்க் காப்புறுதி செயற்பாடுகளுக்கான புதிய ஊக்குவிப்புப்படி முறையியலொன்று தயாரிக்கப்பட்டு அதற்கான பணிப்பாளர்சபை அங்கீகாரம் பெறப்பட்டதோடு 2023 இறுதிக் காலாண்டில் இருந்து அதனை அமுலாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் கால்நடைவளக் காப்புறுதி செயற்றிட்டத்தின்கீழ் ஆடுகள் தொடர்பில் நிலவிய காப்புறுதியை இற்றைப்படுத்துகின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு ஊக்குவிப்புப் படி செலுத்துதலும் திருத்தியமைக்கப்பட்டது.

மேலும் 2022/ 23 பெரும்போகத்தில் தோன்றிய பயிர்ச்சேத நிலைமையை பரிசீலிப்பதற்காக அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கத்தக்கதாக பயிர்ச் சேதங்களை பரிசீலனை செய்வதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று 09 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்காக ஏறக்குறைய 3 மில்லியன் ரூபா தொழிற்பாட்டுச் செலவினை உற நேரிட்டது.

அதைப்போலவே நிறுவனத்தில் உள்ள ஏனைய பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுவதும் மாவட்ட அலுவலகங்களுக்காக அவசியமான அறிவுறுத்தல்களை வழங்கி காப்புறுதி நடவடிக்கைகளை நெறிப்படுத்தவும் காப்புறுதிப் பிரிவு மூலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2023 ஆம் ஆண்டில் காப்புறுதிப் பிரிவு மூலமாக 2020 சிறுபோகம், 2020/21 பெரும்போகம், 2021 சிறுபோகம் 2021/22 பெரும்போகம், 2022 சிறுபோகம், 2022/23 பெரும்போகம் போன்றே 2023 சிறு போகத்தில் பயிர்சேதத்திற்காக மாவட்டங்கள் மூலமாக விதந்துரைத்து சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களுக்காக இழப்பீட்டுத் தொகைகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன்படி 2023 ஆம் ஆண்டில் கீழேயுள்ளவாறு இழப்பீட்டுதொகைகளை விடுவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

போகம்	**கமக்காரர் எண்ணிக்கை**	**ஏக்கரளவு**	**இழப்பீட்டுத்தொகை (ரூ.)**
2022 சிறுபோகம்	04	10	152,100.00
2020/21 பெரும்போகம்	22	32	433,900.00
2021 சிறுபோகம்	333	348	4,625, 091.00
2021/22 பெரும்போகம்	1,211	1,747	27,602,297.00
2022 சிறுபோகம்	6,813	6,665	131,683,423.00
2022/23 பெரும்போகம்	38,264	60,172	896,113,956.00
2023 சிறுபோகம்	12,023	15,690	398,862,142.00

2022/23 பெரும்போகத்தில் இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்கும் பணிகளுக்கான நடமாடும் நிகழ்ச்சித்திட்டமொன்றும் அமுலாக்கப்பட்டது.

அதன்படி 2023 ஆம் ஆண்டில் காப்புறுதிப்பிரிவின் பிரதான பணியான காப்புறுதிச் செயற்றிட்டங்களின்கீழ் இழப்பீடு செலுத்துதல் பற்றிய ஒட்டுமொத்த பொழிப்பு பின்வருமாறு அமையும்.

கமக்காரர் எண்ணிக்கை	ஏக்கரளவு	இழப்பீட்டுத் தொகை (ரூ.)
58,670	84,664	1,459,427,909.00

அதைப்போலவே 2022 சிறுபோகம் மற்றும் 2022 /23 பெரும்போகம் தொடர்பிலான மேன்முறையீட்டினை பரிசீலனை செய்யும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.
மேலும் மூன்றாந்தரப்பு காப்புறுதியின்கீழ் வழங்கப்பட்ட திடீர் விபத்து காப்புறுதி ஒப்பந்தப் பத்திரம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டது.
மேலும் 2024 ஆம் ஆண்டில் அமுலாக்கக் திட்டமிடப்படுகின்ற காப்புறுதிச் செயற்றிட்டங்களை தயாரிக்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
அதைப்போலவே கால்நடைவளக் காப்புறுதி, திடீர் விபத்துக் காப்புறுதி, சுவசெத காப்புறுதி முதலிய பொதுக் காப்புறுதியின்கீழ் ஏறக்குறைய 6 மல்லியன் ரூபா இழப்பீட்டுத் தொகையை விடுவிக்க 2023 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2023 அம் ஆண்டில் கால்நடை வளக் காப்புறுதி வருமானம் மற்றும் இழப்பீடு செலுத்துதல் பின்வருமாறு அமைந்தது.

	தொகை (ரூ.)	விலங்குகள் எண்ணிக்கை
கால்நடைக் காப்புறுதி தவணைப்பண வருமானம்	14,303,167.01	5,317
கால்நடைக் காப்புறுதி இழப்பீடு செலுத்துதல்	5,040,508.75	87

ஓய்வூதியப் பிரிவு

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் மற்றும்

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

கமக்காரர் ஓய்வூதியப் பிரிவு

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துகின்ற கமக்காரரின் செயற்பொறுப்பினை இனங்கண்டு அந்த செயற்பாங்கினுள்ளே அவர்களின் அந்திமப் பொழுதினை பலப்படுத்தும் நோக்கத்துடன் 1987 இல் அமுலாக்கப்பட்ட கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் அடிப்படை குறிக்கோளை நிறைவேற்றி 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் 175,006 கமக்காரர் ஓய்வூதியம் பெறுனர்களுக்காக ரூ. 4,375,215,623 பணத்தொகை அவர்களின் வாழ்க்கையின் பாதுகாப்பு கருதி ஓய்வூதியமாக செலுத்தப்பட்டது.

2010 ஆண்டில் யூலை மாத இறுதியளவில் கமக்காரர் ஓய்வூதிய நிதியம் பூச்சியநிலையடைந்தமையால் தோன்றிய நிதி நெருக்கடிக்கான நிரந்தர தீர்வினை வழங்கி செயற்றிட்டத்தை செயலிழக்காமல் பேணிவருவதற்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் அறிவுறுத்தலின்பேரில் செயற்றிட்டத்தை மறுசீரமைத்து 2014 ஆம் ஆண்டில் கட்டியழுப்பப்பட்ட புதிய கமக்காரர் ஓய்வூதியத்திட்டம் 2022 ஒற்றோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி புதிய ஒய்வூதியத் திட்டத்திற்கு 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் 2166 உதவுதொகை செலுத்துனர்கள் பங்களிப்புச் செய்துள்ளனர்.

கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச்செய்து ஓய்வூதியம் பெறுவதற்கு முன்னர் திடீர் விபத்துகளுக்கு இலக்காகியமை மற்றும் எதிர்பாராத நோய்களுக்கு இலக்காகியமை காரணமாக வாழ்க்கையிலிருந்து விடைபெற்ற 294 கமக்காரர் ஓய்வூதிய உதவுதொகை செலுத்துனர்களின் பின்னுரித்தாளிகளுக்கும் குடும்பங்களுக்கும் செலுத்திய நன்மைத் தொகை ரூ. 6,415,581 ஆகும்.

ஏலாமை நன்மைக் கொடுப்பனவுகள்

கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்திருந்து பூரண ஏலாமை நிலைக்குள்ளாகிய 110 உதவுதொகை செலுத்துனர் சார்பாக பூரணமான ஏலாமை நிலையுற்ற நாளில் இருந்து வாழ்க்கையின் இறுதிவரை செலுத்துகின்ற கொடுப்பனவாக 2023 ஆம் ஆண்டில் ரூ. 1,109,329.00 செலுத்தப்பட்டது.

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துதல்

2023 சனவரி - திசெம்பர்

தொடர் இலக்கம்	மாவட்ட அலுவலகம்	ஓய்வூதியம் பெறுகின்ற உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை	செலுத்திய தொகை (ரூ.)
1	அம்பாறை	4,445	104,846,710
2	அநுராதபுரம்	8,962	200,215,224
3	பதுளை	7,879	189,366,544
4	மட்டக்களப்பு	1,351	30,526,934
5	கொழும்பு	5,781	160,487,968
6	காலி	15,060	417,215,706
7	கம்பஹா	12,230	314,739,253
8	அம்பாந்தோட்டை	9,770	229,476,919
9	யாழ்ப்பாணம்	2,747	66,747,214
10	களுத்துறை	9,101	265,600,890
11	கண்டி	17,654	454,104,582
12	கேகாலை	10,743	263,968,187
13	குருநாகல்	21,432	506,633,352
14	மன்னார்	112	2,222,030
15	மாத்தளை	5,600	130,112,109
16	மாத்தறை	10,450	275,144,002
17	மொணறாகல	6,144	142,566,404
18	முல்லைத்தீவு	145	3,931,774
19	நுவரெலியா	3,473	84,793,527
20	பொலநறுவை	5,888	140,579,289
21	புத்தளம்	6,021	142,445,232
22	இரத்தினபுரி	8,352	211,107,152
23	திருகோணமலை	999	23,764,264
24	வவுனியா	667	14,620,357
	கூட்டுத்தொகை	**175,006**	**4,375,215,623**

- கிளிநொச்சி மாவட்டத்துடன் தொடர்புடைய ஓய்வூதியம் செலுத்துதல் வவுனியா மாவட்டம் ஊடாக இடம்பெறுகின்றது.

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்
இறப்புப் பணிக்கொடைசெலுத்துதல்
2023 சனவரி - திசெம்பர்

தொடர் இலக்கம்	மாவட்டம்	இறப்புப் பணிக்கொடை செலுத்தப்பட்ட உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை	2023 இல் செலுத்திய தொகை (ரூ.)
1	காலி	20	408,876.00
2	மாத்தறை	12	237,968.00
3	அம்பாந்தோட்டை	19	427,342.00
4	மொணறாகல	17	412,275.00
5	கம்பஹா	35	709,728.00
6	பதுளை	19	430,603.00
7	இரத்தினபுரி	26	559,979.00
8	களுத்துறை	8	174,188.00
9	அம்பாறை	4	76,276.00
10	கொழும்பு	6	141,880.00
11	எம்பிலிபிட்டிய	1	27,809.00
12	மன்னம்பிட்டி	1	21,726.00
13	கேகாலை	16	344,155.00
14	கண்டி	15	310,647.00
15	குருநாகல்	10	186,542.00
16	மாகோ	16	361,118.00
17	அநுராதபுரம்	19	439,015.00
18	பொலநறுவை	7	145,295.00
19	புத்தளம்	13	319,483.00
20	தம்புத்தேகம	2	54,836.00
21	நுவரெலியா	6	148,470.00
22	யாழ்ப்பாணம்	5	96,050.00
23	திருகோணமலை	4	92,782.00
24	மாத்தளை	8	183,544.00
25	வவுனியா	1	17,346.00
26	மட்டக்களப்பு	1	19,598.00
27	தெஹிஅத்தகண்டிய	3	68,050.00
	கூட்டுத்தொகை	**294**	**6,415,581.00**

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

கடற்றொழில் மற்றும் நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சுடன் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின்கீழ் 2023.12.31 ஆந் திகதியளவில் 69,049 கடற்றொழிலாளர்கள் அங்கத்துவம் பெற்றிருந்தனர்.

2023 இல் 5839 கடற்றொழிலாளர்கள் மாதாந்த ஓய்வூதியத்தைப் பெற்று வந்ததோடு ரூ. 87,271,077ஓய்வூதியமாக செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி வேலைத்திட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்ட வருடத்தில் மரணமடைந்த 19 உதவுதொகை செலுத்துனர்களுக்காக ரூ. 196,000 பணத்தொகை இறப்புப் பணிக்கொடையாக செலுத்தப்பட்டிருந்தது.

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

ஓய்வூதியம் செலுத்துதல் - 2023

மாவட்ட கடற்றொழிலாளர் விரிவாக்கப் பிரிவு	ஓய்வூதியம் செலுத்துதல்	(சன - திசெ)
	உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை	பணத்தொகை (ரூ.)
களுத்துறை	136	2,056,801.00
காலி	136	2,017,906.00
மஹாவெவ	467	7,004,234.00
மாத்தறை	356	5,321,014.00
கொழும்பு	70	1,044,707.00
தங்காலை	314	4,559,795.00
புத்தளம்	74	1,108,175.00
நீர்கொழும்பு	668	9,906,866.00
மட்டக்களப்பு	581	9,174,879.00
திருகோணமலை	145	2,348,474.00
மன்னார்	580	8,634,991.00
கல்முனை	395	5,926,774.00
முல்லைத்தீவு	89	1,261,095.00
கிளிநொச்சி	456	6,831,802.00
யாழ்ப்பாணம்	**1291**	**18,809,441.00**
நன்னீர் மீன்பிடி பரப்புகள்		
நுவரெலியா	8	107,004.00
பொலநறுவை	4	72,489.00
இரத்தினபுரி	5	67,824.00
மொணறாகல	1	15,804.00
குருநாகல்	3	41,400.00
அநுராதபுரம்	3	43,248.00
மாத்தளை	7	114,686.00
கண்டி	10	209,879.00
பதுளை	7	98,604.00
வவுனியா	2	29,208.00
மட்டக்களப்பு - நன்னீர்	31	463,977.00
கூட்டுத்தொகை	**5,839**	**87,271,077.00**

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

2023.12.31 ஆந் திகதியில் சேர்த்துக்கொள்ளல்

மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகம்	வயதிற்கிணங்க உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை						2023
பிரிவு	18-29	30-35	36-45	46-50	51-54	55-59	மொத்த உறுப்பினர் ணிக்கை
களுத்துறை	1213	721	772	197	105	59	3067
காலி	1082	676	840	221	118	95	3032
மஹாவெவ	3253	1702	2036	613	256	240	8100
மாத்தறை	1750	980	1232	346	201	164	4673
கொழும்பு	576	360	478	140	63	38	1655
தங்காலை	2514	1389	1629	412	201	169	6314
புத்தளம்	2167	1156	1222	255	107	61	4968
நீர்கொழும்பு	2538	1599	2167	735	419	378	7836
மட்டக்களப்பு	2248	1390	1630	555	272	266	6361
திருகோணமலை	654	516	550	129	81	78	2008
மன்னார்	2066	1227	1343	429	222	257	5544
கல்முனை	1565	1109	1515	479	244	207	5119
முல்லைத்தீவு	88	79	141	50	27	44	429
கிளிநொச்சி	519	340	540	250	185	183	2017
யாழ்ப்பாணம்	2185	1117	1444	668	402	617	6433
நன்னீர் மீன்பிடி பரப்புகள							
நுவரேலியா	29	28	47	7	1	3	115
பொலநறுவை	45	35	27	11	2	1	121
இரத்தினபுரி	27	15	9	1	3	-	55
மொணறாகல	17	14	10	1	-	-	42
குருநாகல்	45	24	24	1	-	2	96
அநுராதபுரம்	169	81	84	17	7	5	363
மாத்தளை	31	14	23	5	2	3	78
கண்டி	13	12	25	5	3	3	61
கேகாலை	1	1	2	-	-	-	4
பதுளை	59	33	33	3	-	3	131
வவுனியா	59	33	41	15	4	-	152
மட்டக்களப்பு - நன்னீர்	84	52	67	27	20	25	275
கூட்டுத்தொகை	**24,997**	**14,703**	**17,931**	**5,572**	**2,945**	**2,901**	**69,049**

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

இறப்பு மற்றும் ஏலாமை பணிக்கொடை செலுத்துதல் - 2023

மாவட்ட மீன்பிடி விரிவாக்கப் பிரிவு	இறப்பு மற்றும் ஏலாமை பணிக்கொடை செலுத்துதல்	
	உறுப்பினர் எண்ணிக்கை	பணத்தொகை (ரூ.)
மஹாவெவ	4	32,000.00
மாத்தறை	2	23,000.00
நீர்கொழும்பு	1	15,000.00
மட்டக்களப்பு	1	10,000.00
திருகோணமலை	1	8,000.00
மன்னார்	1	8,000.00
கல்முனை	3	26,000.00
யாழ்ப்பாணம்	6	74,000.00
கூட்டுத்தொகை	**19**	**196,000.00**

நிருவாக மற்றும் மனித வளங்கள் பிரிவு

நிருவாக மற்றும் மனித வளங்கள் பிரிவு

பணியாட்டொகுதி

2023.12.31 இல் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் பணியாட்டொகுதி கீழே குறிப்பிட்டவாறு அமைந்தது.

பணியாட்டொகுதி உள்ளடக்கம்

சேவைத் தொகுதி	பதவிப் பெயர்	அங்கீகரிக்கப் பட்ட ஊழியர் எண்ணிக்கை	உள்ளோர் எண்ணிக்கை	வெற்றிடங்கள்
சிரேட்ட முகாமைத்துவம்				
HM	பணிப்பாளர் நாயகம்	1	1	-
HM	பணிப்பாளர்	5	1	4
முகாமைத்துவம்				
MM	பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்	45	39	6
கனிஷ்டமுகாமைத்துவம்				
JM	நிருவாக உத்தியோகத்தர்	2	-	2
	முறைமை நிருவாகி	1	-	1
	நிதி உத்தியோகத்தர்	1	-	1
	திட்டமிடல் உத்தியோகத்தர்	1	-	1
இணைஉத்தியோகத்தர்				
ASS.O	அபிவிருத்தி உத்தியோகத்தர்	55	47	8
	வழங்கல் உத்தியோகத்தர்	1	-	1
	உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்	1	-	1
முகாமைத்துவஉதவியாளர்(தொழில்நுட்பம்)				
MA - Tech	போக்குவரத்து உதவியாளர்	1	-	1
	செயலாளர்	1	-	1
	புத்தகம் பதியுனர்	4	1	3
	வன் பொருள் மற்றும் வலையமைப்பு வினைஞர்	1	1	-
	தொழில்நுட்ப வினைஞர் (செவிப்புல /கட்புல)	1	-	1
முகாமைத்துவஉவியாளர்(தொழில்நுட்பம் அல்லாத)				
MA - Non Tech	முகாமைத்துவ உதவியாளர்	220	192	28
ஆரம்ப(வினைஞர்)				
PL - Skilled	சாரதி	38	21	17
ஆரம்ப (வினைஞர் அல்லாத)				
PL - Non Skilled	அலுவலக உதவியாளர்	42	30	12
		421	**335**	**86**

சபையின் செயற்பொறுப்பினை இடையறாமல் பேணிவருவதற்காக உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்ளும்வரை நிலவுகின்ற வெற்றிடங்களில் அத்தியாவசியமான ஒருசில பதவிகளுக்காக தலைமையத்திற்கும் மாவட்ட

அலுவலகங்களுக்கும் கீழே குறிப்பிட்ட பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

ஒப்பந்த அடிப்படை

Ass.O	அபிவிருத்தி உத்தியோகத்தர்	4
MA - Non Teck	முகாமைத்துவ உதவியாளர் /வெளிக்கள	15
PL - Skilled	சாரதி	9
PL - Non Skilled	அலுவலக உதவியாளர்	8
	கூட்டுத்தொகை	**36**

அமய அடிப்படை

MA - Non Teck	முகாமைத்துவ உதவியாளர்	12

2023.12.31 இல் பணியாட்டொகுதி பகுப்பாய்வு

பணியாட்டொகுதியின் ஆண் பெண் பகுப்பாய்வு

ஆண் -	163
பெண் -	172
கூட்டுத்தொகை	**335**

சேவைக் காலத்திற்கிணங்க வயதுப் பகுப்பாய்வு

வருடங்கள்	**ஊழியர் எண்ணிக்கை**	**சதவீதம்**
30 இற்கு மேல்	17	5%
26 - 30	11	3%
21 - 25	9	3%
16 - 20	35	10%
15 இற்கு குறைவான	263	79%
கூட்டுத்தொகை	**335**	**100%**

வயதுப் பகுப்பாய்வு

வயதுத் தொகுதி	ஊழியர் எண்ணிக்கை	சதவீதம்
56 - 60	23	7%
51 - 55	30	9%
46 - 50	55	16%
41 - 45	53	16%
36 - 40	35	10%
31 - 35	35	10%
30 இற்கு குறைவான	104	31%
கூட்டுத்தொகை	**335**	**100%**

2023ஆம் ஆண்டில் சபையில் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களில் கீழே குறிப்பிடப்பட்ட காரணங்களின்பேரில் 22 ஊழியர்கள் சேவையிலிருந்து நீங்கிச் சென்றுள்ளார்கள்.

பதவிப் பெயர்	எண்ணிக்கை	சேவை முடிவுறுத்தப்படக் காரணம்
1.அபிவிருத்தி உத்தியோகத்தர்	01 01	இளைப்பாறல் பதவி விலகல்
2.முகாமைத்துவ உதவியாளர்	07 07 01 02	இளைப்பாறல் பதவி விலகல் பதவியை விட்டுச் செல்லல் தொழில் தடைசெய்தல்
3. அலுவலக உதவியாளர்	02	பதவி விலகல்
4. சாரதி	01	இளைப்பாறல்

<u>2023 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பும் பதவியுர்வுகளும்</u>

இவ்வாண்டில் உதவிப் பணிப்பாளர் பதவி வெற்றிடங்களுக்காக 06 உத்தியோகத்தர்களும், அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களுக்காக 19 உத்தியோகத்தர்களும், முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக 65 பேரும் ஆட்சேர்பு செய்யப்பட்டனர். மேலும் உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்காக 02 உத்தியோகத்தர்களும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்காக 05 உத்தியோகத்தர்களும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக 04 உத்தியோகத்தர்களும் பதவியுயர்வு செய்யப்பட்டனர்.

ஊழியர் பயற்சியும் கல்விச் செயற்பாடுகளும்

2023 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் உத்தியோகத்தர்களை ஆற்றுப்படுத்த இயலுமாயிற்று.

தொ. இ.	குழுப்பயிற்சி/ தனிப்பயிற்சி	நிகழ்ச்சித்திட்டம்	பதவி	உள்ளகப் பயிற்சி/ வெளிவாரிப் பயிற்சி	கால வரையறை	உத்தியோகத்தர் எண்ணிக்கை
1	குழுப்பயிற்சி	புதிய கமக்காரர் ஒய்வூதியத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி	அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர்	உள்ளகப் பயிற்சி	3	25
2	குழுப்பயிற்சி	புதிய கமக்காரர் ஒய்வூதியத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி	அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர்	உள்ளகப் பயிற்சி	2	20
3	குழுப்பயிற்சி	புதிய கமக்காரர் ஒய்வூதியத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி	அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர்	உள்ளகப் பயிற்சி	2	20
4	குழுப்பயிற்சி	புதிய கமக்காரர் ஒய்வூதியத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி	அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர்	உள்ளகப் பயிற்சி	3	35
5	குழுப்பயிற்சி	கொழும்பு மாவட்ட அலுவலகத்தின் வெளிவாரி முகவர் பயிற்சி நிகழ்ச்சி	முகவர்கள்	உள்ளகப் பயிற்சி	1	25
6	குழுப்பயிற்சி	கொழும்பு மாவட்ட அலுவலகத்தின் வெளிவாரி முகவர் பயிற்சி நிகழ்ச்சி	முகவர்கள்	உள்ளகப் பயிற்சி	1	27
7	குழுப்பயிற்சி	புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட உதவிப்பணிப்பாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அடிப்படை பயிற்சி நிகழ்ச்சி	உதவிப்பணிப்பாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்	உள்ளகப் பயிற்சி	7	26
8	குழுப்பயிற்சி	புதிய கமக்காரர் ஒய்வூதியத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு	அபிவிருத்தி உத்தியோகத்தர்,	உள்ளகப் பயிற்சி	2	48

		நிகழ்ச்சி	முகாமைத்துவ உதவியாளர்			
9	குழுப்பயிற்சி	தகவல் தொழில்நுட்பம் பற்றிய அடிப்படை பயிற்சி நிகழ்ச்சி	உதவிப்பணிப்பாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர்	உள்ளகப் பயிற்சி	2	31
10	குழுப்பயிற்சி	தொழில் வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையை சமநிலைப்படுத்துவதற்கான நிகழ்ச்சி	உதவிப்பணிப்பாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்	உள்ளகப் பயிற்சி	1	27
11	குழுப்பயிற்சி	உச்ச அளவிலான செயலாற்றுகைக்காக மனோபாவரீதியான மாற்றத்தை எற்படுத்துதல், ஒழுக்கநெறிகள், விளைவாற்றலை அதிகரித்தல், கூட்டுத் திட்டம், செயற்பாட்டு மற்றும் உபாயமார்க்க திட்டதிலாக தலைமைத்துவ அபிவிருத்தி, செயலூக்குவிப்பு மற்றும் குழுக்களை கட்டியெழுப்புதல் பற்றிய செயலமர்வு.	உதவிப்பணிப்பாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்	உள்ளகப் பயிற்சி	1	27
12	குழுப்பயிற்சி	புதிய முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சி	முகாமைத்துவ உதவியாளர்	உள்ளகப் பயிற்சி	5	30
13	குழுப்பயிற்சி	அலுவலக முறைமைகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சி	அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர்	வெளிவாரிப் பயிற்சி	1	19
14	குழுப்பயிற்சி	அலுவலக முறைமைகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சி	அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர்	வெளிவாரிப் பயிற்சி	2	20
15	குழுப்பயிற்சி	தொழில் வாழ்க்கை மற்றும்	உதவிப்பணிப்பாளர்,	உள்ளகப் பயிற்சி	1	23

		தனிப்பட்ட வாழ்க்கையை சமநிலைப்படுத்துவதற்கான நிகழ்ச்சி	அபிவிருத்தி உத்தியோகத்தர்			
16	குழுப்பயிற்சி	புதிய முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சி (இரண்டாவது குழு)	முகாமைத்துவ உதவியாளர்	உள்ளகப் பயிற்சி	4	33
17	குழுப்பயிற்சி	போக்குவரத்து முகாமைத்துவம்	உதவிப்பணிப்பாளர் (போக்குவரத்து)	வெளிவாரி (SDFL)	1	1
18	தனிப்பட்ட பயிற்சி	Advanced Certificate in Actuarial Science	பணிப்பாளர் (ஓய்வூதியம்)	வெளிவாரி (The Institute of Charted Accountants)	06 மாதங்கள்	
19	தனிப்பட்ட பயிற்சி	Advanced Certificate in Actuarial Science	பதில் பணிப்பாளர் (நிதி)	வெளிவாரி (The Institute of Charted Accountants)	06 மாதங்கள்	
20	தனிப்பட்ட பயிற்சி	Advanced Certificate in Actuarial Science	உதவிப்பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு)	வெளிவாரி (The Institute of Charted Accountants)	06 மாதங்கள்	
21	தனிப்பட்ட பயிற்சி	Advanced Certificate in Actuarial Science	உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)	வெளிவாரி (The Institute of Charted Accountants)	06 மாதங்கள்	
22	தனிப்பட்ட பயிற்சி	Advanced Certificate in Actuarial Science	உதவிப் பணிப்பாளர் (கம்பஹா மாவட்டம்)	வெளிவாரி (The Institute of Charted Accountants)	06 மாதங்கள்	
23	தனிப்பட்ட பயிற்சி	Advanced Certificate in Actuarial Science	உதவிப் பணிப்பாளர் (காப்புறுதி)	வெளிவாரி (The Institute of Charted Accountants)	06 மாதங்கள்	

ஊழியர் நலனோம்பல்

மருத்துவக் காப்புறுதி செயற்றிட்டம், மோட்டார் சைக்கிள் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் கடன் வழங்குதல் முந்திய வருடத்தைப் போல் இவ்வாண்டிலும் இடையறாமல் அமுலாக்கப்பட்டது.

பெறுகைகள் மற்றும் போக்குவரத்துத் துறை

வழங்கல் பிரிவு

சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற காப்புறுதி செயற்றிட்டங்களுடன் தொடர்புடைய கீழ்க்காணும் ஆவணங்கள் அரசாங்க பெறுகை முறையியலைக் கடைப்பிடித்து வெளிவாரியாக அச்சிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

01. மூன்றாந்தரப்பு காப்புறுதி செயற்றிட்டத்தின்கீழ் - மூன்றாந் தரப்பு விண்ணப்பப் பத்திரங்கள், மூன்றாந்தரப்பு பற்றுச்சீட்டுப் புத்தகங்கள், மூன்றாந்தரப்பு காப்பீட்டுப் புத்தகங்கள், மூன்றாந் தரப்பு அட்டைகள்

02. பயிர்க் காப்புறுதி செயற்றிட்டத்தின்கீழ் - * நெற் பயிர் காப்புறுதி விண்ணப்பப் பத்திரங்கள் (சிங்களம், தமிழ்)

* மேலதிகப் பயிர்ச்சேத விண்ணப்பப் பத்திரங்கள் (சிங்களம், தமிழ்)

* சேத அறிவித்தல் பதிவுடுகள்

* சேத அறிவித்தல் புத்தகங்கள்

03. பழைய கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தின்கீழ் - கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துவதற்கான புத்தகங்கள், கமக்காரர் ஓய்வூதியம் பெறுனரை அடையாளம் காண்பதற்கான அட்டைகள்

04. புதிய கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தின்கீழ் - *உறுதிச் சான்றிதழ் (F.P.N.3 (1))

* நிபந்தனைகள் கையேடு (F.P.N.3 (11))

* பஃயில் டொகற்

05. கடற்றொழிலாளர் ஒய்வூதியத் திட்டத்தின்கீழ் – கடற்றொழிலாளர் ஓய்வூதியம் செலுத்துதல் கையேடு, கடற்றொழிலாளர் ஓய்வூதியம் பெறுனரை அடையாளம் காண்பதற்கான அட்டைகள்

நிதிப் பிரிவினால் பாவிக்கப்படுகின்ற – பொதுப் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்

06. இதற்கு மேலதிகமாக தலைமையகத்திற்கும் மாவட்ட அலுவலகங்களுக்கும் அவசியமான பொது 35, லீவு விண்ணப்பங்கள், கால்நடைக் காப்புறுதி ஒப்பந்தச் சான்றிதழ், சுவவெத விண்ணப்பப் பத்திரங்கள், சுவசெத ஒப்பந்தச் சான்றிதழ்கள் மற்றும் போக்குவரத்துக் கடமைகளுக்கு அவசியமான ஆவணங்களை அச்சிடுதலும் மேற்கொள்ளப்பட்டன.

07. மாவட்ட அலுவலகங்களுக்கும் தலைமையகத்திற்கும் அவசியமான தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்கையில் பெறுகை முறையியலுக்கு அமைவாக செயலாற்றியதோடு மாவட்ட அலுவலகங்களுக்கான

அலுவலக சாதனங்களும் (மேசைகள், கதிரைகள், அலுமாரிகள்) கொள்வனவு செய்யப்பட்டன.

08. தலைமையகத்தின் பிரிவுகளிலிருந்து வேண்டுகோள் விடுக்கப்படுகின்ற காகிதாதிகள் பெறுகை முறையியல்களைக் கடைப்பிடித்து கொள்வனவுசெய்து களஞ்சியத்திற்கு வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அலுவலகக் கட்டிடங்கள்

சபையின் தலைமை அலுவலகம் இந்த வருடத்திலும் இலக்கம் 117, சுபத்ராராம வீதி, கங்கொடவில, நுகேகொட முகவரியிலுள்ள பிரத்தியேக கட்டிடமொன்றில் வாடகை அடிப்படையில் பேணிவரப்பட்டது. சபையினால் 30 பிராந்திய அலுவலகங்கள் பேணிவரப்படுவதோடு, இதில் சபைக்குச் சொந்தமான கட்டிடங்களின் எண்ணிக்கை 06 ஆகும். ஏனைய மாவட்ட அலுவலகங்கள் மாதாந்த வாடகை அடிப்படையில் அரச மற்றும் தனியார் கட்டிடங்களில் தொடர்ந்தும் பேணிவரப்படுகின்றது.

போக்குவரத்து ஒதுக்கம்

சபையின் செயற்பொறுப்பினை ஈடேற்றுவதற்காக தலைமையகம், மாவட்ட அலுவலகங்களிடம் 34 வாகனங்கள் இருக்கின்றன. இந்த வாகனங்கள் மத்தியில் 02 ஒதுக்கப்பட்ட வாகனங்கள் உள்ளதோடு ஏனைய வாகனங்கள் தலைமையகத்திலும் மாவட்ட அலுவலகங்களிலும் ஒதுக்கக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அவை பற்றிய விபங்கள் பின்வருமாறு.

தொடர் இலக்கம்	வாகன இலக்கம்	இனம்	பதிவுசெய்த வருடம்	ஆயுட் காலம்
01	32-1427	Mitsubishi Pajero	1985	39
02	32-4880	Toyota (Land Crusir)	1988	36
03	32-4850	Toyota (Land Crusir)	1988	36
04	32-4852	Toyota (Land Crusir)	1988	36
05	32-4938	Mitsubishi Pajero	1988	36
06	32-4920	Mitsubishi Pajero	1988	36
07	32-5210	Mitsubishi Pajero	1988	36
08	51-2423	Nissan (Cab)	1990	34
09	32-7718	Dihasthu (Jeep) (Rocky)	1990	34
10	32-7719	Dihasthu (Jeep) (Rocky)	1990	34
11	32-8016	Dihasthu (Jeep) (Rocky)	1990	34
12	53-9447	Mitsubishi (L200)	1992	32
13	53-9446	Mitsubishi (L200)	1992	32
14	58-4436	Mitsubishi (L200)	1996	28
15	58-4437	Mitsubishi (L200)	1996	28
16	HH-6105	Bolero (Jeep)	2003	21
17	KD-3476	Toyota (121)	2006	18
18	KF-2280	Mitsubishi Pajero	1992	32
19	QM-4647	Bajaj (Threewheel)	2007	17

20	KH-5041	Chevrolet (Aveo)	2008	16
21	KI-2554	Nissan (Sunny)	2008	16
22	KP-8706	Maruti (800)	2011	13
23	KP-8723	Maruti (800)	2011	13
24	KQ-0253	Maruti (800)	2011	13
25	NC-4104	Toyota (Hiace)	2015	9
26	NC-4096	Toyota (Hiace)	2015	9
27	CAL-6100	Micro(Rexton)	2015	9
28	CAL-6101	Micro(Rexton)	2015	9
29	TVS	Champ பைசிக்கிள் -480 cc	2008	16
30	32 -3295	Dual Purpose Vehicle	1987	39
31	32 -1187	Dual Purpose Vehicle	1984	40
32	KG -0356	Motor Car	2001	22
33	KJ - 3879	Dual Purpose Vehicle	2010	14
34	301 -0462	Motor Car	1998	26

உள்ளக கணக்காய்வுப் பிரிவு

உள்ளக கணக்காய்வுப் பிரிவு

2023 ஆம் ஆண்டுக்காக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையினால் அமுலாக்கப்படுகின்ற காப்புறுதி மற்றும் சமூகப் பாதுகாப்பு செயற்றிட்டங்களுக்காக ஒவ்வொரு பிரிவு மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்ட வருடாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டன.

அதற்கிணங்க உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மட்டுப்படுத்தப்பட்ட மனித வளத்தில் உதவிப் பணிப்பாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் மூவரின் சேவையைக் கொண்டதாக 2023 ஆம் ஆண்டுக்காக 33 உள்ளக கணக்காய்வு பரீட்சித்தல்களும் தலைமையகத்தில் ஒவ்வொரு பிரிவு மற்றும் புவியியல் மட்டத்தில் வியாபித்துள்ள 30 மாவட்ட அலுவலகங்களை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்காக நிலவுகின்ற அபாயநேர்வினை முகாமை செய்வதை நோக்கமாகக்கொண்டு ஒவ்வொரு பிரிவு மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பணிகளை வினைத்திறனுடனும் விளைவவாற்றல் மிக்கதாகவும் ஈடேற்றுவதற்காக அமுலாக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் அளவுசார்தன்மை, திட்பநுட்பத்தன்மை மற்றும் அவற்றின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்காக கீழே ஒவ்வொரு பிரிவின்கீழும் உள்ளக கணக்காய்வுப் பரீட்சித்தல்கள் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டது.

நிருவாகப் பிரிவினை உள்ளடக்கத்தக்கவகையில் உருப்படிக் கையிருப்பு பரீட்சித்தல், கலப்பு முற்பண பரிசீலனை, வருடாந்த சம்பளஏற்ற பரிசீலனை, கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் சபை உத்தியோகத்தர்களின் பெயர்வழிக்கோப்புகளை பரீட்சித்தல் ஆகிய துறைகளை உள்ளடக்கத்தக்கதாக கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிதிப்பிரிவின் அலுவல்களுடன் தொடர்புடையதாக சில்லறைக் காசுமீதி பரிசோதனை, மாவட்ட அலுவலக நிருவாகக் கணக்குப் பரிசோதனை, கலப்பு முற்பண பரிசோதனை, புதிய கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்திற்காக உதவுதொகை செலுத்துனர்களை சேர்த்துக்கொள்ளல், புதிய கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் தவணைப் பணத்தை அறவிடல் மற்றும் வங்கியிலிடலை பரிசோதித்தல், கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் தவணைப்பணத்தை அறவிடலையும் வங்கியிலிடலையும் பரீட்சித்தல் ஆகிய துறைகள் தொடர்பாக கணக்காய்வுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கமக்காரர் ஓய்வூதியப் பிரிவுடன் தொடர்புடையதாக புதிய கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்திற்காக உதவுதொகை செலுத்துனர்களை சேர்த்துக்கொள்ளல், பணத்தை வங்கயிலிடல், தரவு முறைமையை இற்றைப்படுத்துதல் மற்றும் ஒற்றைக் கணக்குகளை இற்றைப்படுத்துதலை பரிசீலனை செய்தல், கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டம் – தேறிய தவணைப்பணத்தையும் வட்டியையும் மீளச்செலுத்துதலை பரிசோதித்தல், கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டம் – கமக்காரர் ஒய்வூதியம் செலுத்துதலை பரிசோதனை செய்தல் ஆகிய கணக்காய்வு பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாவட்ட அலுவலக பரிசோதித்தலின்கீழ் களுத்துறை, பதுளை, மாகோ, நுவரேலியா, வவுனியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் அலுவல்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம், கமத்தொழில் அமைச்சு மற்றும் அரசாங்க பொறுப்புமுயற்சிகள் திணைக்களத்துடனான இணைப்பாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

<u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துதல்</u>

2023 ஆம் ஆண்டுடன் தொடர்புடையதாக 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதோடு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கீழே குறிப்பிட்ட மூன்று பணிப்பாளர்சபை அங்கத்தவர்களை உள்ளடக்கியதாகும்.

1. ஆர். எம்.டீ.கே. ஜீ. என். டீ.ரணதுங்க - குழுவின் தவிசாளர் – மேலதிக பணிப்பாளர் நாயகம் – திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம்
2. ஏ.எம்.எல். அபேரத்ன – குழு அங்கத்தவர் – கமநல சேவைகள் ஆணையாளர் நாயகம் – கமநல அபிவிருத்தி திணைக்களம்.
3. கே.சீ. நிரோஷன் – மேலதிக செயலாளர் (பசளை) – கமத்தொழில் அமைச்சு

வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வுப் பிரிவு மேற்கொண்டுள்ள பரிசீலனை அறிக்கைகளை மீளாய்வு செய்தல், அரசாங்க கணக்காய்வு ஐயவினாக்களை மீளாய்வு செய்தல், வருடாந்த நிதிசார் கூற்றுகளுடன் தொடர்புடைய கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்தல் என்பவை கடந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின்போது மேற்கொள்ளப்பட்டது.

திட்டமிடல்
பிரிவு

திட்டமிடல் பிரிவு

2023 ஆம் ஆண்டில் திட்டமிடல் பிரிவு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நோக்கு மற்றும் அரும்பணிக்கமைவாக இயங்கி சபையின் அனைத்துப் பிரிவுகளையும் இணைப்பாக்கம்செய்து நோக்கங்களையும் இலக்குகளையும் அடைவதற்கு அவசியமான திட்டங்களை வகுத்தல், கருத்திட்டங்களையும் செயற்றிட்டங்களையும் தயாரித்தல், தரவுகளையும் புள்ளிவிபரங்களையும் காலக்கிரமப்படி திரட்டுதல், பகுப்பாய்வு செய்தல், ஊகங்கள் மற்றும் விதப்புரைகளை சமர்ப்பித்தல், ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கான திட்டங்களை தயாரித்தல்

- **2024 ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்**

2024 ஆம் ஆண்டில் நிறுவனஞ்சார் நோக்கங்களை அடைவதற்காக ஒவ்வொரு விடயத்துறையையும் சார்ந்ததாக பிரிவுகள் மட்டத்தில் அமுலாக்க அவசியமான செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முன்மொழிவுகளும் திட்டங்களும் சேகரிக்கப்பட்டன. மேற்படி முன்மொழிவுகளும் திட்டங்களும் நிறுவனத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்கள், விடயப் பிரதானிகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் கூட்டங்களையும் சந்திப்புகளையும் நடாத்தி நிறுவனம்சார் உபாயமார்க்கங்களின்கீழ் மேலும் கலந்துரையாடி தொகுக்கப்பட்டன.

பிரிவுகளின் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளின் பங்கேற்புடன் மேற்படி செயற்பாடுகளுக்கான காலச்சட்டகம் மற்றும் வரவுசெலவினை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு அவை நிறுவனம்சார் அடிப்படை நோக்கங்களின்கீழ் தொகுக்கப்பட்டன. அதன்படி வரைவு தயாரிக்கப்படுகின்ற 2024 தாபனஞ்சார் செயற்பாட்டுத் திட்டம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின்பொருட்டு சமர்ப்பிக்கப்பட உள்ளது.

- **2024 - 2028 உபாய மார்க்க கூட்டுத் திட்டம்**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபைக்காக தயாரிக்கப்பட்டிருந்த 2023 – 2025 கூட்டுத் திட்டமானது 2024 செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணையானதாக திருத்தியமைக்கப்பட்டது. அதன்போது எதிர்வரும் 5 வருடங்களில் நிறுவனத்தினால் பிரயோகிக்கப்படுகின்ற உபாயமார்க்கங்களை உள்ளடக்கி உபாயமார்க்கத் திட்டமும் அதன் ஒவ்வொரு நோக்கம் மற்றும் குறிக்கோளுக்கான அடிப்படை செயலாற்றுகை சுட்டிகள் (KPI) தயாரிக்கப்பட்டன.

அதற்கிணங்க ஐந்தாண்டு உபாயமார்க்க கூட்டுத்திட்டமும் செயற்பாட்டுத் திட்டமும் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் அதன் பிரதிகள் கமத்தொழில் அமைச்சு, நிதி அமைச்சு உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னேற்ற மீளாய்வு

- **2023 செயற்பாட்டுத் திட்டத்தின்படி தாபனஞ்சார் முன்னேற்ற மீளாய்வு**

2023 வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைவாக பிரிவுகள் மட்டத்திலான தாபனஞ்சார் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டது. அதன்படி 2023 ஆம்

ஆண்டுக்காக அரையாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமும் காலாண்டுவாரியான எழுத்திலான முன்னேற்ற விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டன. இவ்விதமாக மேற்கொள்ளப்பட்ட முன்னேற்ற மீளாய்வின் சுருக்கமான விபரங்கள் கணக்காய்வு குழுவிடமும் சமர்ப்பிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தின் இறுதி வருட முன்னேற்ற மதிப்பாய்வு விசாரணை 2024 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அது அடுத்த கணக்காய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது.

- **மாவட்ட முன்னேற்ற மீளாய்வு**

  மாவட்ட அலுவலகங்கள் ஊடாக காலஓட்டத்தில் பெறப்படுகின்ற முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும் நோக்கத்துடன் 2023 ஆம் ஆண்டுக்காக காலாண்டுவாரியாக 04 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இதன்போது 2023 சனவரி மாதத்தில் 2022 வருடாந்த இறுதி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்பட்டதோடு இங்கு 2023 இல் அமுலாக்க எதிர்பார்த்துள்ள செயற்பாடுகள் பற்றி மாவட்ட பிரதானிகளின் கருத்துக்கள் பெறப்பட்டன.

  2023 இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளுக்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதோடு அதன்போது சம்பந்தப்பட்ட மாவட்ட இலக்குகளுடன் சார்புரீதியாக பெறப்பட்ட முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டது. 2023 ஆம் ஆண்டுக்கான இறுதி முன்னேற்ற மீளாய்வு 2024.01.08 மற்றும் 2024.01.09 ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் இறுதி முன்னேற்ற மீளாய்வு மற்றும் 2024 ஆண்டுக்கான புதிய முன்மொழிவுகளையும் திட்டங்களையும் பெற்றுக்கொள்ளலும் அதன்போது இடம்பெற்றது.

அரச நிதியேற்பாடுகளின்கீழ் அமுலாக்கப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக திட்டங்களை தயாரித்தலும் முன்னேற்றத்தை ஆராய்தலும்

அரச நிதியேற்பாடுகளின்கீழ் அமுலாக்கப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொடர்புடையதாக 2023 ஆம் ஆண்டுக்காக அமுலாக்கப்படுகின்ற திட்டங்களை தயாரிக்கும் பணிகள் திட்டமிடல் பிரிவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

அதன்கீழ் கட்டாய பயிர்க்காப்புறுதித் திட்டம், ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்பு செயற்றிட்டம் மற்றும் மூலதன அவசியப்பாடுகளுடன் தொடர்புடையதாக 2023 ஆண்டுக்கான நிதியேற்பாடுகளை ஒதுக்கிக்கொள்வதற்கான செயற்பாட்டுத் திட்டங்கள் தயாரித்து அனுப்பிவைக்கப்பட்டன.

மேலும் 2023 ஆம் ஆண்டில் மேற்படி திட்டங்களுடன் தொடர்புடைய முன்னேற்றம் மாதந்தோறும் அரையாண்டுதோறும் ஏற்புடைய மாதிரிகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு கமத்தொழில் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

பிரிவுகளுக்கிடையிலான இணைப்பாக்கம், தரவுகளையும் தகவல்களையும் சேகரித்தல் மற்றும் வெளிவாரி நிறுவனங்களுடனான இணைப்பாக்கம்

- **பிரிவுகளுக்கிடையிலான இணைப்பாக்கம், தரவுகளையும் தகவல்களையும் சேகரித்தல்**

  திட்டமிடல் பிரிவினால் 2023 வருடம் பூராவிலும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் அனைத்துப் பிரிவுகளுடனுமான சிறப்பான இணைப்பாக்கத்தைப் பேணிவந்து ஒவ்வொரு பிரிவினதும் இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளையும் புள்ளிவிபரத் தகவல்களையும் சேகரித்தல் மேற்கொள்ளப்பட்டதோடு மேற்படி புள்ளிபரப் பகுப்பாய்வு மூலமாக மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்து அவசியமான நடவடிக்கைகளுக்காக உயர் முகாமைத்துவத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

  இதனை வினைத்திறனுடனும் விளைவாற்றல்மிக்கதாகவும் மேற்கொள்வதற்காக 2024 ஆம் ஆண்டிலிருந்து தரவுகளையும் தகவல்களையும் சேகரிப்பதற்கான புதிய மாதிரிகளை அறிமுகஞ்செய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதோடு அதன் பூர்வாங்க மாதிரிகளைத் தயாரிக்கும் பணிகள் 2023 திசெம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது.

- **வெளிவாரி நிறுவனங்களுடனான இணைப்பாக்கம்**

வரிசை அமைச்சான கமத்தொழில் அமைச்சு, நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கியை உள்ளிட்ட விவசாயத்துறையுடன் சம்பந்தப்பட்ட ஏனைய அனைத்து நிறுவனங்களையும் இணைப்பாக்கம்செய்து 2023 ஆம் ஆண்டுடன் தொடர்புடையதாக மேற்படி நிறுவனங்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட அனைத்து அறிக்கைகளையும் தயாரித்து நிறுவனத் தலைவர்களுக்கு துரிதமாக அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- **செயலாற்றுகை அறிக்கைகளைத் தயாரித்தல்**

2023 ஆண்டின் தொடக்கத்தில் 2022 ஆம் ஆண்டில் இந்த சபையினால் பெறப்பட்ட முன்னேற்றம் பற்றிய தரவுகளையம் தகவல்களையும் பிரிவு மட்டத்தில் சேகரித்து அதன்படி 2022 ஆம் ஆண்டுக்காக செயலாற்றுகை அறிக்கையைத் தயாரிப்பதற்கான அடிப்படைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. மேலும் 2023 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை தயாரித்தல் தொடர்பான அடிப்படைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. அது 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிறைவுசெய்யப்பட்டு சம்பந்தப்பட்ட அமைச்சிடம் அனுப்பிவைக்கப்பட உள்ளது.

<u>கருத்திட்டங்களையும் ஆராய்ச்சிப் பணிகளையும் அமுலாக்குதல்</u>

- **விவசாயத் தகவல் முகாமைத்துவ முறைமை (AMIS) மற்றும் வெப்/நடமாடும் செயலியை (Web/ Mobile Application) வெளிக்களத்திற்கு அறிமுகஞ்செய்தல்**

உலக வங்கியுடன் இணைந்த சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப பங்களிப்பீன்கீழ் தயாரித்து நிறைவுசெய்யப்பட்ட விவசாயம்சார்ந்த தகவல் முகாமைத்துவ முறைமையை (AIMS) வெளிக்கள மட்டத்தில் அமுலாக்குவதற்காக மாவட்ட அலுவலகங்களுக்கு அறிமுகஞ்செய்வதற்கான நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

2022/23 பெரும்போகத்தின் தொடக்கத்துடன் விவசாயம்சார்ந்த தகவல் முகாமைத்துவ முறைமையை (AIMS) அநுராதபுரம் மாவட்டத்தை அடிப்படையாகக்கொண்டு தீவு பூராவிலும் மாவட்ட அலுவலகங்களுக்கு அறிமுகஞ் செய்வதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. அங்கு தவணை அறவீட்டினைக் கொண்டதாக காப்புறுதிக்குப் பங்களிப்புச் செய்கின்ற கமக்காரர்களின் தகவல்களையும் கமநிலங்களின் தகவல்களையும் இந்த முறைமைக்குள் சேர்ப்பதற்காக மாவட்ட அலுவலகங்கள் நெறிப்படுத்தப்பட்டன.

அதற்கிணங்க, 2023.10.03 ஆந் திகதி தொடக்கம் வருங்காலத்தில் பயிர்க் காப்புறுதி மற்றும் நெறிப்படுத்தல் செயற்பாங்கினை AIMS முறைமையின்கீழ் அமுலாக்குவதற்காக அனைத்து மாவட்டங்களுக்கும் அறிமுகஞ் செய்யப்பட்டதோடு அதனோடு ஏற்புடைய அறிவுறுத்தல்களும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன. மேலும் இதனோடு இணையானதாக தயாரிக்கப்பட்டிருந்த ஊக்குவிப்புப்படி முறையியலை வெளிக்கள மட்டத்தில் அறிமுகஞ் செய்தலும் இடம்பெற்றது.

- **பயிற்சி செயலமர்வுகளையும் வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்களையும் அமுலாக்குதல்**

2023 ஆம் ஆண்டில் தீவின் அனைத்து மாவட்டங்களுக்காகவும் விவசாயம்சார்ந்த தகவல் முகாமைத்துவ தரவு முறைமையில்(AIMS) தரவுகளை உள்ளீடுசெய்தல் மற்றும் அதன் நடைமுறைகள் பற்றிய பலவிதமான முறையியல்களின்கீழ் அவசியமான அறிவுறுத்தல்களும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

இதன்கீழ் மாவட்ட அலுவலகங்களில் வெளிக்களங்களுக்கு பொறுப்பாக செயலாற்றுகின்ற மாவட்டப் பணிப்பாளர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் தரவுகளை உள்ளீடு செய்கின்ற அலுவல்களுடன் தொடர்புபடுகின்ற ஏனைய உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் தொடர்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் இரண்டாவது நிகழ்ச்சி 2023.12.01 அந் திகதி கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது. இதன்போது கண்டி, நுவரேலியா, கேகாலை, பதுளை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்ட அலுவலகங்களின் 27 உத்தியோகத்தர்களுக்காக விவசாயம்சார்ந்த தகவல் முகாமைத்துவ தரவு முறைமையை (AIMS) கையாளல், தரவுகளை உள்ளீடு செய்தல், தேசப்படம் தயாரித்தல் புகைப்படங்களை பதிவேற்றம்செய்தல் போன்ற செயற்பாங்குகள் பற்றிய விபரமானதும் பிரயோகப் பயிற்சியும் வழங்கப்பட்டது.

மேலும் அநுராதபுரம் மாவட்ட உதவிப் பணிப்பாளர்களின் வேண்டுகோளின் பிரகாரம் அந்த மாவட்டத்தின் 2022/23 பெரும்போகத்தில் தவணைப்பணம் செலுத்துதலுடனான காப்புறுதியில் பங்களிப்புச் செய்துள்ள கமக்காரர்களினதும் கமநிலங்களினதும் தரவுகளையும் தகவல்களையும் AIMS தரவு முறைமையில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளுக்கு உதவி புரிவதற்காக தலைமை அலுவலகத்தின் தொழில்நுட்ப அறிவு படைத்த உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி 2023.02.06 ஆந் திகதி தொடக்கம் அநுராதபுரம் மாவட்டத்தின் வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட்டன.

2023 ஆம் ஆண்டின் இறுதியில் AIMS பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் கட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு அதற்கிணங்க மாகோ மாவவட்டத்தின் வெளிக்களங்களுக்கு பொறுப்பாக செயலாற்றுகின்ற மாவட்டப் பணிப்பாளர் , அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிகள உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்கான அலுவல்கள், தலைமை அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் வெளிக்களத்தில் ஒரு பயிற்சி

நிகழ்ச்சித்திட்டம் என்றவகையில் 2023.12.15 அந் திகதி மாகோ மாட்ட அலுவலக வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டது.

- **பயனர் கணக்குகளை தயாரித்தல்**

2023 ஆம் ஆண்டில் வழங்கவேண்டிய இடமாற்றங்களும் புதிய ஆட்சேர்ப்புகளும் இடம்பெற்றமையால் AIMS தரவு முறைமையில் தயாரித்துள்ள கணக்குகளின் திருத்தம் மற்றும் புதிய கணக்குகளை தயாரிக்கும் நிகழச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது அனைத்து உத்தியோகத்தர்களினதும் கணக்கு விபரங்களை மீண்டும் மீளாய்வுசெய்து இற்றைப்படுத்துதல் இடம்பெற்றது.

- **விவசாயம்சார்ந்த தகவல் முகாமைத்துவ முறைமையை (AMIS) மேலும் அபிவிருத்தி செய்தல்**

  இந்த முறைமை 2022/23 பெரும்போகத்தில் பரீட்சார்த்த மட்டத்தில் அநுராதபுரம் மாவட்டத்தை அடிப்படையாகக்கொண்டு வெளிக்களத்திற்கு அறிமுகஞ் செய்கையில் தோன்றிய சிக்கல்கள் மற்றும் இனங்காணப்பட்ட சிக்கல்கள்/ புதிய அவசியப்பாடுகளுக்கு அமைவாக AIMS தரவு முறைமை மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டது. இங்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைந்து அவர்களின் நிதிரீதியான பங்களிப்புடன் GeoEdge நிறுவனத்தினால் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- **விவசாயத் தகவல் முகாமைத்துவ முறைமை (AIMS) மற்றும் வெப்/நடமாடும் செயலியை (Web/ Mobile Application) வெளிக்களத்தில் அமுலாக்குவதற்கான தொழில்நுட்ப சாதனங்களை வழங்குவதற்கான புதிய வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்.**

AIMS முறைமையை வெளிக்களத்தில் மிகவும் வினைத்திறனுடன் பாவிப்பதற்காக சபையின் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணியாட்டொகுதியினரிடமும் உன்னத மட்டத்திலான தொழில்நுட்ப சாதனங்கள் (ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகள் /டெப் கருவிகள்) இருக்கவேண்டும். அதற்கிணங்க சபையின் நிதிசார் பங்களிப்புடன் உத்தியோகத்தர்களுக்கு தொழில்நுட்ப சாதனங்களை பெற்றுக்கொள்வதற்கான கடன்தொகையை வழங்குவதற்கான அடிப்படை நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டின் பின்னரைப் பாகத்தில் இருந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க சம்பந்தப்பட்ட பணிப்பாளர்சபை கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது.

<u>பயிர்ச்சேத மேற்பார்வைக்கான புதிய தொழில்நுட்ப முறையியல்களை அறிமுகஞ்செய்தல்</u>

2023 சிறுபோகத்தில் நிலவிய கடுமையான வறட்சி காரணமாக பயிர்ச்சேதம் அதிகமாக பதிவாகிய அநுராதபுரம் – உடவளவ ஆகிய பிரதேசங்களை சார்ந்ததாக பயிர்ச்சேத மதிப்பீட்டுப் பணிகளை துரிதமாக மேற்கொள்வதற்காக இலங்கை வான்படையின் ட்றோன தொழில்நுட்பக் கூறின் உதவியுடன் சபையின் தலைமை அலுவலகத்தினதும் மாவட்ட அலுவலகங்களினதும் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் ட்றோன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்விதமாக பெறப்பட்ட புகைப்படங்கள் பயிச்சேத மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக பிரயோகிக்கப்பட்டது.

மேலும் ட்றோன தொழில்நுட்ப உதவிகளை வினைத்திறன்மிக்கவகையில் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை வான் படையுடன் புரிந்துணர்வு

உடன்படிக்கையொன்றை செய்துகொள்வதற்கான பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளதோடு 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பொருத்தமான தினமொன்றில் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட உள்ளது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்கான வெப்தளமொன்றை நிர்மாணித்தல்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்காக இதுவரை நிலவிய வெப்தளத்திற்குப் பதிலாக புதிய தோற்றத்துடனான புதிய வெப் தளமொன்றை தயாரிக்கும் நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அதன்படி முறையான செயற்பாங்கொன்றின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட வெப் தள அபிவிருத்தி நிறுவனமொன்றின் ஒத்துழைப்புடன் சபைக்கான புதிய வெப்தளமொன்றை நிர்மாணிக்கும் செயற்பாடுகள் திட்டமிடல் பிரிவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. அவ்விதமாக தயாரித்து நிறைவுசெய்யப்பட்ட வெப் தளத்தை இற்றைப்படுத்தி பேணிவருவதற்காக சபையின் தகவல் தொழில்நுட்ப பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடிதத் தலைப்புகளைத் தயாரித்தல்

தற்போது தலைமை அலுவலகத்தினால் பாவிக்கப்படுகின்ற கடிதத் தலைப்பினை இற்றைப்படுத்துதல் மற்றும் 30 மாவட்ட அலுவலகங்களுக்காக புதிய மாதிரியொன்றின் கீழ் கடிதத் தலைப்புகள் தயாரிக்கப்பட்டதோடு அவை அவசியமான நடவடிக்கைகளுக்காக நிருவாகப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது.

வளங்களின் தோற்றப்பாடுகளை தயாரித்தல்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் அனைத்து அடிப்படைத் தகவல்களையும் உள்ளடக்கி வளங்களின் தோற்றப்பாடுகள் நூல் எனும் பெயரில் புத்தகமொன்று வெளியிடப்பட்டது. கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையுடன் தொடர்புடைய அடிப்படை நிருவாகம், காப்புறுதி மற்றும் தொழிற்பாட்டுத் தகவல்கள் மிகவும் சுருக்கமாக இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு மேற்படி புத்தகம் சபையுடன் நேரடியாக தொடர்புபடுகின்ற வெளிவாரி உத்தியோகத்தர்களுக்கும் சபையின் மாவட்ட மற்றும் தலைமை அலுவலகத்தின் பிரிவுகளுக்கு அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டது.

கூட்டக் கலண்டரைத் தயாரித்தல்

2024 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்திலும் மாவட்ட அலுவலகங்களிலும் நடாத்தப்படவுள்ள கூட்டங்களையும் மீளாய்வுகளையும் நடாத்த உத்தேசித்துள்ள தினங்களை உள்ளடக்கி 2024 வருடாந்த கூட்டக் கலண்டர் தயாரிக்கப்பட்டதோடு அது மாவட்ட பிரதானிகளுக்கும் பிரிவுத் தலைவர்களுக்குகும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பப் பிரிவு

தகவல் தொழில்நுட்பப் பிரிவு

2023.06.13 ஆந் திகதி எமது சபையினல் முதல்த்தடவையாக தகவல் தொழில்நுட்பத்தை முதன்மையாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நோக்கு மற்றும் அரும்பணிக்கு அமைவாகச் சென்று சபையின் தொழிற்பாட்டு செயற்பாங்கினை டிஜிட்டல்மயப்படுத்துவதன் மூலமாக மிகவும் பயனுறுதிகொண்ட சேவையை வழங்குவதற்காக அவசியமான தொழில்நுட்பத் திட்டங்களை தயாரித்தல், அதற்கு அவசியமான தகவல்களை திரட்டுதல் மற்றும் பகுப்பாய்தல், மேற்படி திட்டங்களை அமுலாக்குதல் மற்றும் நெறிப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களை வலையமைப்பாக்குதல்

- **தலைமை அலுவலக வலையமைப்பாக்கல்**

2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் தலைமை அலுவலகத்தின் வலையமைப்பாக்கல் அலுவல்களுக்காக அவசியமான நிலத் திட்டங்கள் அனைத்தும் ஒவ்வொரு பிரிவிற்கும் அமைவாக நிர்மாணித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதோடு அலுவலகத்தின் நிருவாகப் பிரிவு, நிதிப் பிரிவு, காப்புறுதிப்பிரிவு , அபிவிருத்திப் பிரிவு, திட்டமிடல் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தின் வலையமைப்பாக்கல் செயற்பாங்கு இன்றளவில் நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

- **மாவட்ட அலுவலக வலையமைப்பாக்கல்**

2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மாவட்ட அலுவலக வலையமைப்பாக்கல் செயற்பாங்கு தகவல் தொழில்நுட்ப பிரிவினை தாபித்தலுடன் மேற்படி செயற்பாங்கினை வலையமைப்பாக்கல் அலுவல்கள் தொடங்கப்பட்டன. அதன்படி 2023-08-08 ஆந் திகதி Zoom தொழில்நுட்பம் ஊடாக மாவட்ட அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் மேற்படி உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்திக்கொண்டு கூட்டமொன்று நடாத்தப்பட்டதோடு அதன்போது பெறுகை முறையியல்களுக்கு அமைவாக விலை மனுக்கள் கோருகின்ற ஆவணமொன்றைப் பெற்றுக்கொண்டு வலையமைப்பாக்க நடவடிக்கையை மேற்கொள்ளல் மற்றும் 2021 ஆம் ஆண்டில் வலையமைப்பாக்கல் மேற்கொள்ளப்பட்டு நிறைவுசெய்யப்பட்ட மாவட்ட அலுவலகங்களில் ஏதேனும் குறைபாடு நிலவுமாயின் மேற்படி திருத்தவேலைகளையும் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.

அதன்படி மாவட்ட அலுவலகங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்களை கோருவதற்கான ஆவணங்களில் நிலவுகின்ற விலைமட்டங்கள் நிகழ்கால சந்தை விலை மட்டங்களுடன் ஒப்பிட்டு அதற்கு அவசியமான தொழில்நுட்ப ஒத்துழைப்பு தகவல் தொழில்நுட்ப பிரிவினால் வழங்கப்பட்டு இன்றளவில் 23 மாவட்ட அலுவலகங்களால் வலையமைப்பாக்கல் செயற்பாங்கு நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

மேலும், இதற்கு இணையானதாக ERP முறைமையின் HRM மொடியூலுடன் தொடர்புடையதாக மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்களின் வருகைதரல் மற்றும் வெளியேறிச்செல்லல் நேரக்குறிப்புகளின் தரவுகளைப் பெற்றுக்கொள்ளும்

செயற்பாங்கிற்காக மாவட்ட அலுவலகங்களில் நிலவுகின்ற கைவிரல் அடையாள கருவிகளை பிரதான வலையமைப்புடன் தொடர்புபடுத்துவதற்கான அலுவல்கள் துரிதமாக ஆரம்பிக்கப்பட்டதோடு 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் 22 மாவட்ட அலுவலகங்களில் இந்த செயற்பாங்கு மேற்கொண்டு நிறைவுசெய்யப்பட்டது.

சபையின் மேம்பாட்டு அலுவல்களுக்காக தொழில்நுட்ப முறையியல்களை பிரயோகித்தல்

- e –SMS சேவையை அறிமுகஞ் செய்தல்

தகவல் தொழில்நுட்பப் பிரிவு தாபிக்கப்பட்டதும் சபையின் பிரச்சார அலுவல்கள் மற்றும் விழிப்புணர்வூட்டல் அலுவல்களை மேற்கொள்வதற்காக e –SMS சேவை அதாவது குறுந்தகவல் சேவையொன்று தொடங்கப்பட்டதோடு அதன்மூலமாக அனைத்து மாவட்ட அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகங்களில் இடம்பெறுகின்ற வாடிக்கையாளர்களை விழிப்புணர்வூட்டுதல் மற்றும் ஏனைய மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த குறுஞ்செய்தி சேவையூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும், கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்துடன் தொடர்புடைய உதவுதொகை செலுத்துனர்களை செயற்றிட்டத்தில் முனைப்பாக தடுத்துவைப்பதற்கான மாதாந்த குறுந்தகவல் சேவை ஊடாக அவர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் மற்றும் மூன்றாந் தரப்பு காப்புறுதி செயற்றிட்டத்துடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்படுகின்ற செலுத்துதல் சம்பந்தமாகவும் வாடிக்கையாளர்களை விழிப்புணர்வூட்டுதல் இந்த குறுந்தகவல் சேவை ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

- **சபையின் பிரதான வெப் தளத்தை பேணிவருதல்**

தகவல் தொழில்நுட்பப் பிரிவு நிறுவப்பட்ட பின்னர் சபையிடம் நிலவுகின்ற பிரதான வெப் தளத்தின் தகவல்களை இற்றைப்படுத்துதல், பேணிவருதல் போன்றே வெப் தளத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைப்பாக்கம்செய்தல் ஆகிய செயற்பாங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

பிரிவுகள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கிடையில் இணைப்பாக்கத்தை மேற்கொள்ளலும் வெளிவாரி நிறுவனங்களுடனான இணைப்பாக்கமும்

- **பிரிவுகள் மாவட்ட அலுவலகங்களுக்கிடையிலான இணைப்பாக்கம்**

மாவட்ட அலுவலகங்களிலும் தலைமை அலுவலகத்திலும் நிலவுகின்ற வன்பொருள் மற்றும் வலையமைப்பாக்கல்சார்ந்த சிக்கல்களை தீர்த்துக்கொள்வதற்காக தகவல் தொழில்நுட்பப் பிரிவின் உத்தியோகத்தர்களால் தொலைத் தொடர்பாடல் முறைகள் ஊடாக தொழில்நுட்ப உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்படுவதோடு அவசியமான வேளைகளில் மேற்படி மாவட்ட அலுவலகங்களுக்குச் சென்று அங்கு தோன்றியுள்ள சிக்கல்களுக்கு அவசியமான தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- **வெளிவாரி நிறுவனங்களுடனான இணைப்பாக்கம்**

கமத்தொழில் அமைச்சினாலும் மேற்படி அமைச்சின்கீழ் நடாத்தப்பட்டு வருகின்ற கருத்திட்டங்களுடனும் (IDAT) தொடர்புடைய கூட்டங்களிலும் பயிற்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றல், அதனோடு தொடர்புடையதாக கோரிக்கை விடுத்த

தொழில்நுட்ப அறிக்கைளை தயாரித்தல் மற்றும் மேற்படி அறிக்கைகளை நிறுவனத் தலைவர்கள் ஊடாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு துரிதமாக அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

<u>பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்</u>

தகவல் தொழில்நுட்ப பிரிவு மூலமாக சபை உத்தியோகத்தர்களின் தொழில்நுட்ப எழுத்தறிவினை மேலும் விருத்திசெய்வதை நோக்கமாகக்கொண்டு பயிற்சி நிகழ்ச்சித் தொடரொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்கீழ் 2023.08.05 ஆந் திகதியும் 2023.08.06 ஆந் திகதியும் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்ட அலுவலகங்களை முதன்மையாகக்கொண்டு அதன் அனைத்து உத்தியோகத்தர்களுக்காகவும் அலுவலகத்தில் பாவிக்கப்படுகின்ற அடிப்படைத் தொழில்நுட்ப முறையியல்கள், வன்பொருள்கள் மற்றும் வலையமைப்பாக்கல் நடைமுறைகள் பற்றிய நடைமுறை செயற்பாடுகளை உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுத் தொடரொன்று நடாத்தப்பட்டது.

<u>கருத்திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை அமுலாக்குதல்</u>

- **ERP முறைமையை நடைமுறைப்படுத்துதல்**

GIZ (Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit) நிறுவனத்தின் நிதியுதவியின்கீழ் சபையின் உள்ளக நிருவாகம் மற்றும் தொழிற்பாட்டுச் செயற்பாங்கினை டிஜிட்டல்மயமாக்குவதற்காக ERP (Enterprise Resource Planning) முறைமையை நடைமுறைப்படுத்த அவசியமான தொழில்நுட்ப செயற்பாங்குகளை மேற்கொள்ளலும் திட்டங்களை தயாரித்தலும்.

அதன்கீழ் உள்ளக நிருவாக அலுவல்களை மேற்கொள்வதற்காக HRM மொடியூலுடன் தொடர்புடையதாக தயாரிக்கப்பட்ட வெப் மற்றும் நடமாடும் செயலி இன்றளவில் சபையின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளதோடு அதற்கு அவசியமான பயிற்சித் தொடர்களும் நடாத்தப்பட்டுள்ளன.

மேலும், மூன்றாந் தரப்பு காப்புறுதிச் செயற்றிட்டத்துடன் தொடர்புடையதாக தயாரிக்கப்பட்டுள்ள வெப் செயலி ஊடாக மேல் மாகாணத்தில் இயங்கிவருகின்ற மாவட்ட அலுவலகங்களை முதன்மையாகக்கொண்ட காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடங்கப்பட்டுள்ளதோடு அதற்கு அவசியமான ஒத்துழைப்பு தகவல் தொழில்நுட்ப பிரிவு மூலமாக வழங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- **<u>ஓய்வூதிய செயற்றிட்டத்துடன் தொடர்புடைய வெப் செயலியை பேணிவருதல்</u>**

புதிய கமக்காரர் ஓய்வுதியத் திட்டத்தை ஆரம்பித்ததும் எமது மாவட்ட அலுவலக வலையமைப்புடன் தொடர்புபட்டு திட்டத்தில் பங்கேற்கச் செய்விக்கின்ற கமக்காரர்களின் தகவல்களை தலைமை அலுவலகத்திற்கு பெற்றுக்கொள்வதற்கான முறையியலொன்று இருக்கவில்லை என்பதோடு இந்த சிக்கலைத் தீர்த்துக்கொள்வதற்காக மாவட்ட அலுவலகங்கள் மூலமாக சேர்த்துக்கொள்ளப்படுகின்ற கமக்காரர்களின் அனைத்து தகவல்களையும் அந்த

நேரத்திலேயே தலைமை அலுவலகத்திற்கு பெற்றுக்கொள்ள இயலுமானவகையில் Web Base முறைமையை எமது சபை உருவாக்கிக்கொடுப்பதில் வெற்றிபெற்றது. அதன்படி 2022 ஆம் ஆண்டில் இந்த பணிகள் தொடங்கப்பட்டதோடு 2023 ஆம் ஆண்டளவில் அதன் பல்வேறு விருத்திசெய்தல்களுடன் அந்தப் பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. முறைமையின் பாவனையின்போது தோன்றுகின்ற சிக்கல்கள் சம்பந்தமாக அவசியமான அனைத்துவிதமான தொழில்நுட்ப உதவித் தகவல்களும் தொழில்நுட்ப பிரிவினால் அடிக்கடி வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் நிலவுகின்ற கமக்காரர் ஒய்வூதிய மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய செயற்றிட்டத்துடன் தொடர்புடையதாக கணினி செயலிகளை (Desktop Applications) பேணிவருதல் மற்றும் அந்த செயலியை ERP முறைமையுடன் தொடர்புபடுத்துவதற்காக அவசியமான நடவடிக்கைகள் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிதிப் பிரிவு

நிதிசார் பொழிப்பு

2023 ஆம் ஆண்டில் சபையின் கமத்தொழில் காப்ப தி செயற்றிட்டம் 877 மில்லியன் ரூபா தேறிய இலாபத்தை ஈட்டியதோடு இவ்வாண்டில் ஈட்டிய தொழிற்பாட்டுஇலாபம் 1,268 மில்லியன் ரூபாவாகும்.

2018 வரவுசெலவு முன்மொழிவின் பிரகாரம் கட்டாய காப்புறுதித் திட்டம் மேற்படி ஆறுவகையான பயிர்களுக்காகவும் இவ்வ ாண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு அதனூடாக நெல், சோளம், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, சோயா, மிளகாய் போன்ற பயிர்களுக்காக ஏக்கருக்கு ரூ. 40,000/- உச்சவரம்பிற்கு கட்டுப்பட்டதாக காப்பீட்டினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இடையறாமல் நிலவிய வானிலை மற்றும் காலநிலை மாற்றங்களினால் நேர்ந்த தாக்கங்களை கருத்திற்கொண்டு ஆண்டுக்குள் கமக்காரர்களிடமிருந்து அறிவிடப்படுகின்ற தவணைப்பணத்தை அவர்களிடமிருந்து அறவிடாமல் அரசாங்கத்தினால் வழங்க தீர்மானிக்கப்பட்டதோடு மேற்படி பணத்தொகை 1,000 மில்லியன் ரூபாவாகும்.

அதற்கு மேலதிகமாக 2023 ஆம் ஆண்டில் மேலதிக காப்புறுதி தவணைப்பணம் அறவிடுவதன் மூலமாக பயிர்களுக்கு ஏற்படுகின்ற ஏனைய அனைத்து அபாயநேர்வுகளையும் உள்ளடக்கத்தக்கவகையில் குறைந்த பட்ச தவணைப்பணம் ரூ. 600/- இற்கு கட்டுப்பட்டதாக, ரூ. 100,000/- ஏக்கரொன்றுக்கு வழங்குகின்ற இழப்பீட்டுத் தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியின் கீழும் 2023 ஆம் ஆண்டில் சபையின் ஏனைய காப்ப தி செயற்றிட்டங்களில் முந்திய வருடத்துடன் சார்புரீதியாக 21.06 % வளர்ச்சி பெறப்பட்டுள்ளது

2023 ஆம் ஆண்டில் சபையின் கட்டாய பயிர்க் காப்ப தி இழப்பீட்டுப் பொறுப்பு ஏறக்குறைய 2,116 மில்லியன் ரூபாவாக அமைந்துள்ளது

2023 ஆம் ஆண்டில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் மூலமாக 175,006 கமக்காரர்களுக்காக 4,488 மில்லியன் ரூபா தேறிய பணத்தொகை ஓய்வூதியமாக செலுத்தப்பட்டதோடு கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் 5,839 கடற்றொழிலாளர்களுக்கு 83.9 மில்லியன் ரூபா ஓய்வூதியமாக செலுத்தப்பட்டது.

கடந்த ஐந்து வருடங்களின் நிதிசார் தகவல்கள்

இலாபத்தன்மை

- **கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம்**



	1 2019	2 2020	3 2021	4 2022	5 2023
தொழிற்பாட்டு இலாபம் (ரூ.மி.)	878	1,401.3	1,752	2,663	1,268.2
தேறிய இலாபம்(ரூ.மி.)	652.3	1,153.7	1,494.4	2,208	877.0

2023 ஆம் ஆண்டில் கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம் 877.0 மில்லியன் ரூபா தேறிய இலாபத்தை ஈட்டியதோடு, அது 2022 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக 60.3% அதிகரிப்பினை சுட்டிக்காட்டுகின்றது.

- **<u>கமக்காரர் ஓய்வூதியத் திட்டம்</u>**



	1 2019	2 2020	3 2021	4 2022	5 2023
வருமானம்(ரூ.மி.)	233.4	209.8	224	276.9	225.9
தொழிற்பாட்டுச் செலவு(ரூ.மி.)	3,271	4,555	3,766	3,967.9	4,539.6

2023 ஆம் ஆண் டில் 175,006 கமக்காரர்களுக்கு 4,488 மில்லியன் ரூபா தேயிய ஓய்வூதியமாக செலுத்தப்பட்டது இவ்வருடத்தில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் மொத்த தொழிற்பாட்டுச் செலவு 4,539.6 மில்லியன் ரூபாவாக அமைந்ததோடு முந்திய வருடத்தைப் போலவே இவ்வருடத்திலும் பொது திறைசேரியினால் ஓய்வூதியம் செலுத்துவதற்கான நிதியேற்பாடாக 4,395 மில்லியன் ரூபாவை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

➢ கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்



	1 2019	2 2020	3 2021	4 2022	5 2023
வருமானம்(ரூ.மி.)	53	29.6	35.2	102.5	130.7
தொழிற்பாட்டுச் செலவு(ரூ.மி.)	67.2	115.4	78.7	81.7	87.2

2023 ஆம் ஆண்டில் 83.9 மில்லியன் ரூபா ஓய்வூதியம் கடற்றொழிலாளர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளதோடு அதற்காக சபைக்குச் சொந்தமான நிதியங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

ஒட்டுமொத்த செயற்றிட்டங்களுக்குமான ஒருங்கிணைந்த கணக்குக் கூற்றுகளும்

2023

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
ஒருங்கிணைந்த வருமானக் கூற்று
நிதிநிலைமை பற்றிய கூற்று

	குறிப்பு	கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை (குழுமம்)		கமத்தொழில் காப்புறுதித் திட்டம்	
		31.12.2023	31.12.2022	31.12.2023	31.12.2022
		ரூ.	ரூ.	ரூ.	ரூ.
சொத்துக்கள்					
நடைமுறையல்லா சொத்துக்கள்					
ஆதனம், சாதனம், பொறித்தொகுதி	1	234,540,729	58,734,565	226,825,080	53,958,365
தொட்டுணர முடியாத சொத்து : WIP ERP முறைமை		72,002,970		72,002,970	
		306,543,699	58,734,565	298,828,050	53,958,365
நிதிசார் சாதனங்கள்					
திறைசேரி முறிகள்		3,352,820,995	1,562,157,095	1,851,357,619	522,795,607
		3,352,820,995	1,562,157,095	1,851,357,619	522,795,607
நடைமுறை சொத்துக்கள்					
கையிருப்புகள்	2.1	38,538,139	35,479,124	33,271,478	31,718,050
வருமதிகள்	2.2	463,394,978	176,995,439	1,266,364,206	959,808,916
வருமதியான கட்டுப்பணம்	2.3	1,288,180	4,254,814,019	371,734	4,252,903,299
வைப்புக்களும் முற்கொடுப்பனவுகளும்	2.4	30,537,026	6,075,139	30,537,026	6,075,139
முற்பணங்கள்	2.5	669,348	668,883	669,348	668,883
பருவமுதிர்வுவரை தடுத்துவைத்த நிதிச் சாதனங்கள்	2.6	5,557,963,798	5,170,060,617	4,250,427,003	4,092,320,982
காசு மற்றும் காசுக்கு இணையானவை	2.7	38,520,272	88,918,257	32,364,702	84,816,800
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		6,130,911,740	9,733,011,477	5,614,005,497	9,428,312,070
மொத்த சொத்துக்கள்		**9,790,276,434**	**11,353,903,138**	**7,764,191,166**	**10,005,066,042**
உரிமைப்பங்குகளும் பொறுப்புகளும்					
மூலதனமும் ஒதுக்கங்களும்					
திறைசேரியால் வழங்கப்பட்ட தொடக்க மூலதனப் பங்களிப்பு		50,000,000	50,000,000	50,000,000	50,000,000
க.க.கா.ச. திரண்ட நிதியம்	3	(90,041,219,155)	(84,791,312,860)	3,237,653,337	6,796,467,767
கமக்காரர் இறப்புப் பணிக்கொடை நிதியம்	4	17,330,189	12,128,064	17,330,189	12,128,064
க.க.கா.ச. ஒதுக்க நிதியம்	5	498,536,253	435,124,725	498,536,253	435,124,725
கமக்காரர் இறப்புப் பணிக்கொடை நிதியம்	6	1,427,193,842	1,292,310,847	1,391,994,627	1,258,775,352
பணியாளர் மருத்துவக் காப்புறுதி நிதியம்		27,313,478	18,812,989	27,313,478	18,812,989
கெத்தட்ட அருண கட்டாய காப்புறுதி நிதியம்		706,503,600	706,503,600	706,503,600	706,503,600
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		172,530,347	60,979,167	165,680,347	58,129,167
உற்பத்தி மேற்பாட்டு மற்றும் ஊக்குவிப்பு நிதியம்		30,686,023	31,660,458	30,686,023	31,660,458
கமக்காரர் ஒய்வூதியத்திற்கான அரசாங்கக் கொடை		1,081,488,000	1,081,488,000	-	-
மூலதனக் கொண்டை - GIZ		65,792,100	65,792,100	65,792,100	65,792,100
		(85,963,845,323)	(81,036,512,911)	6,191,489,954	9,433,394,222
நடைமுறையல்லாப் பொறுப்புகள்					
பணிக்கொடைக்கான ஏற்பாடு		55,462,953	61,124,642	22,103,553	24,842,727
ஓய்வூதியப் பொறுப்பு		92,430,794,402	87,503,204,014	-	-
		92,486,257,355	87,564,328,656	22,103,553	24,842,727
நடைமுறைப் பொறுப்புகள்					
அச்சிடலுக்கான ஏற்பாடு		1,922,699	1,742,199	600,000	500,000
கிடைத்த முற்கொடுப்பனவு	7.1	115,686,318	45,942,713	115,686,318	45,942,713
பிற சென்மதிகள்	7.2	2,137,472,315	4,464,350,957	425,556,787	188,859,992
அட்டுறு செலவினங்கள்	7.3	39,414,416	16,784,421	35,385,901	14,259,286
இழப்பீட்டுக்கான ஏற்பாடு	7.4	973,368,653	297,267,103	973,368,653	297,267,103
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		3,267,864,401	4,826,087,393	1,550,597,659	546,829,093
மொத்த உரிமைப்பங்குகளும் பொறுப்புகளும்		**9,790,276,434**	**11,353,903,138**	**7,764,191,166**	**10,005,066,042**

இந்த நிதிக் கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.

....
நிதிப் பிரதானீ நிதிப் பிரதானீ

இந்த நிதிக்கூற்றுகளின் தயாரிப்பிற்கும் சமர்ப்பணத்திற்கும் பணிப்பாளர்சபை பொறுப்புக் கூறுகின்றது.
சபையின் சார்பாகவும் சபைக்காகவும் கையொப்பமிட்டது.

....
பணிப்பாளர்சபை உறுப்பினர் பணிப்பாளர்சபை உறுப்பினர்
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை மத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
ஒருங்கிணைந்த வருமானக் கூற்று
விரிவான வருமானம் பற்றிய கூற்று

		கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை (குழுமம்)		கமத்தொழில் காப்புறுதித் திட்டம்	
		31.12.2023	31.12.2022	31.12.2023	31.12.2022
வருவாய்	*குறிப்பு*	**ரூ.**	**ரூ.**	**ரூ.**	**ரூ.**
கட்டுப்பணமும் பங்களிப்புத் தொகையும்	8.1	502,154,945	390,675,454	502,033,477	390,559,060
காப்புறுதிக் கட்டு ` பணம் – திறைசேரி பங்களிப்பு		1,000,000,000	1,950,000,000	1,000,000,000	1,950,000,000
இழப்பீட்டுக்கான கொடை – NITF பயிர் அறவீடு		975,718,383	378,504,692	975,718,383	378,504,692
வட்டி வருமானம்	8.2	1,370,543,232	957,261,905	1,010,497,440	713,257,270
மொத்த வருவாய்		**3,848,416,560**	**3,676,442,051**	**3,488,249,300**	**3,432,321,022**
தொழிற்பாட்டு செலவினங்கள்					
இழப்பீடு	9.1	(2,138,394,861)	(712,325,511)	(2,138,394,861)	(712,325,511)
தொழிற்பாட்டு செலவுகள்	9.2	(98,281,615)	(72,516,884)	(81,623,872)	(56,858,637)
ஓய்வுதியக் கொடுப்பனவு		(4,572,552,593)	(3,997,234,231)	-	-
தேறிய வட்டியினதும் உதவுதொகையினதும் மீளளிப்பு		(19,370,863)	(17,025,847)	-	-
குழுமக் காப்புறுதிக் கட்டுப்பணம்		(18,322,800)	(18,946,560)	-	-
ஏலாமைப் பணிக்கொடை கொடுப்பனவு		(1,081,350)	(1,153,363)	-	-
ஓய்வூதியப் பொறுப்பு அதிகரிப்பு		(4,927,590,388)	(4,674,254,455)	-	-
		(11,775,594,470)	**(9,493,456,851)**	**(2,220,018,733)**	**(769,184,148)**
தொழிற்பாட்டு மிகைநிலை/ (பற்றாக்குறை)		**(7,927,177,910)**	**(5,817,014,801)**	**1,268,230,567**	**2,663,136,873**
ஓய்வூதியக் கொடுப்பனவிற்கான அரசாங்கக் கொடை		4,395,000,000	3,968,000,000	-	-
நிருவாகச் செலவுகளுக்கான அரசாங்கக் கொடை		206,225,000	190,000,000	-	-
பிற வருமானம்	10	18,223,887	9,820,858	14,348,633	6,745,479
		4,619,448,887	**4,167,820,858**	**14,348,633**	**6,745,479**
		(3,307,729,023)	**(1,649,193,943)**	**1,282,579,200**	**2,669,882,353**
செலவுகள்					
நிருவாகச் செலவுகள்	11	(513,935,624)	(417,450,417)	(299,864,500)	(229,100,720)
நிதி மற்றும் பிற செலவுகள்.	12	(62,884,014)	(69,324,491)	(214,664)	(100,879)
மொத்த செலவுகள்		**(576,819,639)**	**(486,774,908)**	**(300,079,164)**	**(229,201,599)**
தேறிய மிகைநிலை/ (பற்றாக்குறை)		**(3,884,548,662)**	**(2,135,968,851)**	**982,500,036**	**2,440,680,754**
வருமான வரிச் செலவுகள்		(150,084,498)	(111,214,555)	(150,084,498)	(111,214,555)
வரிக்குப் பிந்திய இலாபம்		**(4,034,633,160)**	**(2,247,183,406)**	**832,415,538**	**2,329,466,199**
க.க.கா.ச. ஒதுக்க நிதியத்திற்கான ஏற்பாடு		(63,411,528)	(133,156,844)	(63,411,528)	(133,156,844)
ஏற்பாடுகளுக்குப் பின்னரான தேறிய மிகைநிலை/ (பற்றாக்குறை)		**(4,098,044,688)**	**(2,380,340,250)**	**769,004,009**	**2,196,309,355**
பிற விரிவான வருமானம்					
பணிக்கொடை ஆதாயம் /(இழப்பு)		(3,372,120)	37,127,258	725,417	11,488,992
		(3,372,120)	37,127,258	725,417	11,488,992
ஆதனம், சாதனம், பொறித்தொகுதியின் மீள்மதிப்பீட்டு மிகைநிலை		111,551,180	-	107,551,180	-
பிற விரிவான வருமானத்திற்குப் பின்னரான தேறிய மிகைநிலை/ (பற்றாக்குறை)		**(3,989,865,628)**	**(2,343,212,992)**	**877,280,606**	**2,207,798,347**

1.கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று

குழுமம்

விபரம்	திறைசேரியால் பங்களிக்கப்பட்ட தொடக்க மூலதனம் ரூ ரூ.	திரண்ட மிகைநிலை /(பற்றாக்குறை) ரூ.	மூலதனத்திற்கான அரசாங்கக்கொடை ரூ.	க.க.கா.ச. ஒதுக்க நிதியம் ரூ.	கமக்காரர் இறப்புப் பணிக்கொடை நிதியம் ரூ.	பணியாளர் மருத்துவக் காப்புறுதி நிதியம் ரூ.	கெதட்ட அருண கட்டாயக் காப்புறுதி நிதியம் ரூ.	மீள்கணிப்பீட்டு ஒதுக்கம் ரூ.	உற்பத்தி மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பு நிதியம் ரூ.	திறைசேரி முறி மீதான அரசாங்கக் கொடை ரூ.	மூலதனக்கொடை - GIZ ரூ.	கூட்டுத்தொகை ரூ.
2022 சனவரி 01 இல் மீதி	**50,000,000**	**(82,567,401,019)**	**17,915,567**	**301,967,881**	**1,178,731,261**	**13,572,359**	**706,503,600**	**60,979,167**	**24,545,950**	**1,081,488,000**	**-**	**(79,131,697,234)**
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்		6,741,310										6,741,310
ஆண்டில் சேர்த்தவை	-	112,559,841	-	133,156,844	18,946,560	5,503,200	-	-	15,552,007	-	65,792,100	351,510,551
வட்டி வருமானம்	-				95,985,651	1,821,998	-	-	-	-		97,807,649
அரசாங்க கொடை இலதாக்கல்	-	-	(5,787,503)	-	-	-	-	-	-	-		(5,787,503)
செலுத்திய நன்மைகள்	-				(1,352,625)	(2,084,568)	-	-	(8,437,499)			(11,874,692)
தேறிய மிகைநிலை/ (பற்றாக்குறை)	-	(2,343,212,992)	-	-	-			-	-	-		(2,343,212,992)
2022 திசெம்பர் 31 இல் மீதி	**50,000,000**	**(84,791,312,860)**	**12,128,064**	**435,124,725**	**1,292,310,847**	**18,812,989**	**706,503,600**	**60,979,167**	**31,660,458**	**1,081,488,000**	**65,792,100**	**(81,036,512,911)**
ஆண்டில் சேர்த்தவை	-	133,810,610	17,800,000	63,411,528	18,322,800	5,503,200		-	7,740,142	-	-	246,588,280
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்		(1,282,300,096)										(1,282,300,096)
வட்டி வருமானம்					118,209,835	5,402,615						123,612,450
அரசாங்க கொடை இலதாக்கல் கமக்காரர் ஓய்வூதி	-	-	(12,597,874)	-	-	-		-				(12,597,874)
செலுத்திய நன்மைகள்					(1,649,640)	(2,405,326)			(8,714,577)			(12,769,543)
தேறிய மிகைநிலை/ (பற்றாக்குறை)	-	(4,101,416,809)	-	-	-	-		111,551,180				(3,989,865,628)
2023 திசெம்பர் 31 இல் மீதி	**50,000,000**	**(90,041,219,155)**	**17,330,189**	**498,536,253**	**1,427,193,842**	**27,313,478**	**706,503,600**	**172,530,347**	**30,686,023**	**1,081,488,000**	**65,792,100**	**(85,963,845,323)**

உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று

கமத்தொழில் காப்புறுதித் திட்டம்

விபரம்	திறைசேரியால் பங்களிக்கப்பட்ட தொடக்க மூலதனம் ரூ ரூ.	திரண்ட மிகைநிலை /(பற்றாக்குறை) ரூ.	மூலதனத்திற்கான அரசாங்கக்கொடை ரூ.	க.க.கா.ச. ஒதுக்க நிதியம் ரூ.	கமக்காரர் இறப்புப் பணிக்கொடை நிதியம் ரூ.	பணியாளர் மருத்துவக் காப்புறுதி நிதியம் ரூ.	கெதட்ட அருண கட்டாயக் காப்புறுதி நிதியம் ரூ.	மீள்கணிப்பீட்டு ஒதுக்கம் ரூ.	உற்பத்தி மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பு நிதியம் ரூ.	திறைசேரி முறி மீதான அரசாங்கக் கொடை ரூ.	மூலதனக்கொடை - GIZ ரூ.	கூட்டுத்தொகை ரூ.
2022 சனவரி 01 இல் மீதி	**50,000,000**	**4,588,669,420**	**17,915,567**	**301,967,881**	**1,146,766,066**	**13,572,359**	**706,503,600**	**58,129,167**	**24,545,950**		**-**	**6,908,070,010**
ஆண்டில் சேர்த்தவை	-			133,156,844	17,197,260	5,503,200	-	-	15,552,007	-	65,792,100	237,201,410
வட்டி வருமானம்	-				95,985,651	1,821,998	-	-	-	-	-	97,807,649
அரசாங்க கொடை இலதாக்கல்	-	-	(5,787,503)	-	-	-	-	-	-	-	-	(5,787,503)
செலுத்திய நன்மைகள்	-				(1,173,625)	(2,084,568)	-	-	(8,437,499)	-	-	(11,695,692)
தேறிய மிகைநிலை/ (பற்றாக்குறை)	-	2,207,798,347	-	-	-			-	-	-	-	2,207,798,347
2022 திசெம்பர் 31 இல் மீதி	**50,000,000**	**6,796,467,767**	**12,128,064**	**435,124,725**	**1,258,775,352**	**18,812,989**	**706,503,600**	**58,129,167**	**31,660,458**	**-**	**65,792,100**	**9,433,394,222**
ஆண்டில் சேர்த்தவை	-	-	17,800,000	63,411,528	16,576,080	5,279,700		-	7,740,142	-		110,807,450
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்		(4,328,543,856)										(4,328,543,856)
வட்டி வருமானம்					118,209,835	5,402,615				-		123,612,450
அரசாங்க கொடை இலதாக்கல் கமக்காரர் ஓய்வூதி	-	-	(12,597,874)	-	-	-		-		-		(12,597,874)
செலுத்திய நன்மைகள்					(1,566,640)	(2,181,826)			(8,714,577)	-	-	(12,463,043)
தேறிய மிகைநிலை/ (பற்றாக்குறை)	-	769,729,426	-	-	-	-		107,551,180		-		877,280,606
2023 திசெம்பர் 31 இல் மீதி	**50,000,000**	**3,237,653,337**	**17,330,189**	**498,536,253**	**1,391,994,627**	**27,313,478**	**706,503,600**	**165,680,347**	**30,686,023**	**-**	**65,792,100**	**6,191,489,954**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

காசுப்பாய்வுக் கூற்று

	கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை (குழுமம்)		கமத்தொழில் காப்புறுதித் திட்டம்	
	31.12.2023	31.12.2022	31.12.2023	31.12.2022
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலான காசுப் பாய்வு				
தேறிய மிகைநிலை /பற்றாக்குறை	(4,034,633,160)	(2,247,183,406)	832,415,538	2,329,466,199
சீராக்கல்கள்				
தேய்மானம்	27,335,936	20,284,691	25,683,272	19,098,611
அரசாங்க கொடை இலதாக்கல்	(13,662,896)	(5,787,503)	(12,597,874)	(5,787,503)
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்	111,116,357	17,000	111,214,357	-
ஒய்வூதிய பொறுப்பிலான அதிகரிப்பு	4,927,590,388	4,674,254,455	-	-
அட்டுறு / இழப்பீட்டுக்கான ஏற்பாடு	882,188,483	256,165,108	882,188,483	256,165,108
வருமான வரிக்கான ஏற்பாடு	150,084,498	111,214,555	150,084,498	111,214,555
பணியாளர் ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டு நிதியம்	7,740,142	15,552,007	7,740,142	15,552,007
இறப்புப் பணிக்கொடை கட்டுப்பணம்	(1,746,720)	(1,749,300)	-	-
	6,090,646,188	**5,069,951,013**	**1,164,312,877**	**396,242,778**
ஆதனம், சாதனம், பொறித்தொகுதி விற்றொழித்தலிலான இலாபம்/ நட்டம்	(256,473)	-	(205,913)	-
இளைப்பாற்று பணிக்கொடைக்கான ஏற்பாடு	8,700,946	14,280,737	4,059,133	5,543,927
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முற்பட்ட தொழிற்பாட்டு இலாபம்	**2,064,457,500**	**2,837,048,344**	**2,000,581,635**	**2,731,252,904**
சரக்குத்தொக்குகளிலான (ஏற்றம்) /இறக்கம்	(3,059,015)	(25,034,696)	(1,553,427)	(22,731,247)
வருமதிகளிலான (ஏற்றம்) /இறக்கம்	(285,929,219)	595,088,237	(306,555,290)	640,882,473
வருமதியான கட்டுப்பணத்திலான (ஏற்றம்) /இறக்கம்	3,906,687	(1,350,541,389)	2,912,413	(1,350,454,452)
வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளிலான (ஏற்றம்) /இறக்கம்	(24,461,887)	(766,853)	(24,461,887)	(766,853)
முற்பணங்களில் (ஏற்றம்) /இறக்கம்	(465)	74,036	(465)	74,036
இழப்பீடு எற்பாடுகளின் ஏற்றம் /(இறக்கம்)	(206,086,932)	(1,117,883,393)	(206,086,932)	(1,117,883,393)
அச்சிடல் ஏற்பாடுகளின் ஏற்றம் /(இறக்கம்)	180,500	(892,548)	100,000	(616,615)
முற்கட்டுப்பண முற்பணங்களிலான ஏற்றம் /(இறக்கம்)	69,743,604	20,111,350	69,743,604	21,811,701
பிற சென்மதிகளின் ஏற்றம் /(இறக்கம்)	379,239,560	105,768,423	(103,526,763)	(97,796,357)
அட்டுறு செலவினங்களிலான ஏற்றம் /(இறக்கம்)	22,629,995	(1,760,108)	21,126,615	(2,613,353)
	(43,837,172)	**(1,775,836,941)**	**(548,302,133)**	**(1,930,094,061)**
தொழிற்பாடுகளிலிருந்து பிறப்பித்த காசு	**2,020,620,329**	**1,061,211,403**	**1,452,279,502**	**801,158,843**
இளைப்பாற்றுப் பணிக்கொடை - செலுத்தியவை	(17,734,755)	(340,755)	(6,072,890)	-
தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்து தேறிய காசுப் பாய்வு	**2,002,885,574**	**1,060,870,648**	**1,446,206,612**	**801,158,843**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்வு				
மருத்துவ நிதியம்	8,500,488	5,240,630	8,500,488	5,240,630
கமக்காரர் இறப்புப் பணிக்கொடை நிதியம்	136,629,715	115,328,886	133,219,275	112,009,286
பணியாளர் ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டு நிதியம்	(8,714,577)	(8,437,499)	(8,714,577)	(8,437,499)
ஆண்டில் முதலீடுகள்	(2,178,567,081)	(1,272,411,519)	(1,486,668,033)	(881,605,059)
ஆதனம், சாதனம், பொறித்தொகுதி கொள்வனவு	(145,298,124)	(26,678,403)	(145,298,124)	(23,355,603)
ஆதனம், சாதனம், பொறித்தொகுதி கொள்வனவின் தொடர்ச்சிகள்	355,410	-	302,260	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்வு	**(2,187,094,168)**	**(1,186,957,905)**	**(1,498,658,710)**	**(796,148,246)**
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்வு				
மூலதனச் செலவுகளுக்கான அரசாங்கக்கொடை		-		-
மூலதனச் செலவுகளுக்கான கொடை	-	65,792,100	-	65,792,100
புதிய ஒய்வூதியத் திட்ட நிதியம்	20,730,787	6,741,310	-	-
பழைய ஒய்வூதியத் திட்ட நிதியம்	113,079,824	112,559,841	-	-
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்வு	**133,810,610**	**185,093,251**	**-**	**65,792,100**
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்வு	**(50,397,985)**	**59,005,993**	**(52,452,098)**	**70,802,697**
ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு இணையானவை	**88,918,257**	**29,912,264**	**84,816,800**	**14,014,103**
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு இணையாவை	**38,520,272**	**88,918,257**	**32,364,702**	**84,816,800**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்
முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

1. பொதுவான கொள்கைகள்

1.1 அறிக்கையிடல் அமைப்பாண்மை

இலங்கை கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1999 இன் 20 ஆம் இலக்க சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டதோடு நுகேகொட, கங்கொடவில, சுபத்ராராம வீதி, இலக்கம் 117 இல் அமைந்துள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

கமத்தொழில் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள், மூலிகைச் செடிகள், பண்ணை விலங்குகள், மீன்பிடிக் கைத்தொழில், காடு வளர்ப்பு, கமத்தொழிற் சாதனங்களும் கருவிகளும், கமத்தொழில் மற்றும் தோட்டக்கலை உற்பத்திகள், மூலிகைச் செடிகளின் உற்பத்திகள், மீன்பிடி மற்றும் காடுகளுடன் தொடர்புபட்ட உற்பத்திகள் என்பவற்றைக் களஞ்சியப்படுத்தல், பாதுகாத்துவைத்தல் உள்ளிட்டதாக கமத்தொழில் காப்புறுதியில் சபை பிரதானமாக ஈடுபட்டு வருகின்றது. அத்துடன் கமத்தொழில் புரிபவர்களுக்கு மருத்துவ நலன்களையும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களையும் விவசாயிகளுக்கான உரக் காப்புறுதித் திட்டங்களையும் விவசாயிகளுக்குச் சொந்தமான வாகனங்களுக்கான மூன்றாந்தரப்பு காப்பறுதியை வழங்கும் நடவடிக்கைகளிலும் சபை ஈடுபட்டு வருகின்றது. மீளாய்வு செய்யப்படுகின்ற நிதியாண்டில் சபையின் பிரதான செயற்பாடுகளின் தன்மையில் மாற்றமேதும் ஏற்படவில்லை.

1.3 தயாரித்தலுக்கான அடிப்படை

(அ) இசைவுக் கூற்று

இந்த நிதிக்கூற்றுகள் நிதிநிலைமை பற்றிய கூற்று, விபரமான வருமானக் கூற்று, நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்வுக் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இந்த கணக்குக் கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (இ.நி.அ.நி. / இ.க.நி.) பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) மதிப்பீட்டுக்கான அடிப்படை

சம்பந்தப்பட்ட குறிப்புகளின் கீழ் நியாயமான பெறுமதி தொடர்பாக பொருத்தமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் தவிர்ந்ததாக நிதிக்கூற்றுகள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(இ) ஒப்பீட்டுரீதியான தகவல்கள்

நடப்புக் காலஎல்லையில் நிதிக்கூற்றுகளை விளங்கிக்கொள்வதை மேம்படுத்துவதற்காகவும் இடைக்கால ஒப்பீட்டுரீதியான தன்மையை முன்னேற்றும் பொருட்டும் நிதிக்கூற்றுகளில் அறிக்கை செய்யப்பட்டுள்ள அனைத்துவிதமான பணத்தொகைகளுக்காகவும் முந்திய காலப்பகுதியுடன் தொடர்புடையதாக அளவுசார்ரீதியான, தொடர்உரைசார்ந்த மற்றும் விபரமானதை உள்ளிட்ட ஒப்பீட்டுரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுகளில் வகையினங்களை சமர்ப்பித்தல் அல்லது வகைப்படுத்தல் திருத்தப்பட்டுள்ளவிடத்து மிகச்சிறந்த சமர்ப்பித்தலை வழங்கும் பொருட்டு நடப்பு வருடத்துடன் அமைந்தொழுகத்தக்கதாக ஒப்பீட்டுரீதியான பண அளவுகள் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) நடைமுறைசார்ந்த மற்றும் சமர்ப்பிக்கப்படுகின்ற புழக்கத்திலுள்ள பண அலகு

இந்த நிதிக்கூற்றுகள் சபையின் நடைமுறைசார்ந்ததும் புழக்கத்தில் உள்ளதுமான பண அலகான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(உ) மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் பாவனை

இ.நி.அ.நி./இ.க.நி. க்கு அமைவாக நிதிக்கூற்றுகளைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும், கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அறிக்கை செய்யப்பட்ட சொத்துக்கள்,பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவின அளவுகளின் பாவனை மீது தாக்கமேற்படுத்துகின்ற தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்ள முகாமைத்துவத்தை பணிக்கின்றன. ஈடுபடுத்தப்பட்ட இந்த மதிப்பீடுகளும் தீர்மானங்களும் உண்மையான பெறுபேறுகளைவிட மாறக்கூடும்.

மதிப்பீடுகளும் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட எடுகோள்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வுசெய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளை திருத்தியமைத்தல் சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்குள் மாத்திரம் தாக்கமேற்படுத்துமாயின் அந்த மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் ஏற்பிசைவுசெய்யப்படுவதோடு நடப்பு மற்றும் ஏதேனும் எதிர்கால காலவரையறைகளுக்கு அத்தகைய திருத்தியமைத்தல் தாக்கமேற்படுத்துமாயின் திருத்தியமைத்த காலவரையறைக்கும் எதிர்கால காலவரையறைகளுக்கும் ஏற்பிசைவுசெய்யப்படும்.

நிதிக்கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ள அளவுகள்மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளை பாவிக்கையில் மதிப்பீடுகள், நிச்சயமற்றதன்மை மற்றும் தீர்வுக்கட்டமான தீர்மானங்கள் பற்றி கணிசமானதுறைகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ஊ) நடப்புத் தொழில்முயற்சி (இடையறா வழியுரிமை)

நடப்புத் தொழில்முயற்சி என்ற வகையில் இடையறா வழியுரிமை கொண்டதாக இயங்க சபைக்குள்ள ஆற்றல் பற்றி முகாமைத்துவம் மதிப்பீடொன்றைச் செய்துள்ளது. எனவே நடப்புத் தொழில்முயற்சி என்ற அடிப்படையில் நிதிக்கூற்றுகள் தொடர்ச்சியாக தயாரிக்கப்படுகின்றன.

2. சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படையும்

2.1 ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி

(அ) ஏற்பிசைவு செய்தலும் கணிப்பீடுசெய்தலும்

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி வகையினங்கள் சேர்க்கப்பட்ட தேய்மானம் மற்றும் சேதங்களும் நட்டங்களும் கழிக்கப்பட்டு கிரயத்தில் அல்லது மதிப்பீட்டுக்கிணங்கவே வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பெயரிடப்பட்ட பெறுதிக் கருவிகள் ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும்.
தனது நிதிசார் சொத்துக்களின் அடிப்படை ஏற்பிசைவு செய்தலின்பேரில் பணிப்பாளர் சபையானது அவற்றின் வகைப்படுத்தலை தீர்மானிக்கின்றது.

நிதிசார் சொத்துக்கள் அனைத்தும் தொடக்கத்தில் நியாயமான பெறுமதி நேர்க்கணியமாகவும் இலாபம் அல்லது நட்டம் மூலமாகசொத்துக்கள் நியாயமான பெறுமதியாக அமையாத சந்தர்ப்பங்களில் நேரடி உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் கிரயத்திற்கும் தொடக்கத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

கடன் மற்றும் வருமதிகளும் வைப்புக்களும் அவை தொடங்கப்பட்ட தினத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய நிதிசார்சொத்துக்கள் அனைத்தும் (இலாபம் மற்றும் நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு குறிப்பிட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ள சொத்துக்களை உள்ளிட்டதாக) அளிப்புப் பத்திரத்தின் உடன்படிக்கை ஏற்பாடுகளுக்கு சபை ஒரு தரப்பினராக அமைந்த வர்த்தக தினத்திற்கே தொடக்கத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

ஏதேனும் சொத்தொன்றிலிருந்து காசுப்பாய்வுகள் மீதுள்ள உடன்படிக்கை செய்யப்பட்ட உரிமை நிறைவடைகையில் அல்லது நிதிசார் சொத்தின் உரித்துவத்தின் அனைத்துவிதமான அபாயநேர்வுகளும் வெகுமதிகளும் கணிசமான அளவில் கையளிக்கப்பட்டவிடத்து கொடுக்கல் வாங்கலொன்றின் நிதிசார் சொத்துக்களின் மீது உடன்படிக்கை செய்யப்பட்ட காசுப்பாய்வினை பெற்றுக்கொள்வதற்குரிய உரிமையானது அது கையளிக்கப்படுகின்ற வேளையில் சபையின் நிதிசார் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுதலை நீக்கும். கையளிக்கப்பட்ட நிதிசார் சொத்தொன்றில் சபையினால் உருவாக்கப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட ஏதேனும் கடப்பாடு தனிவேறான சொத்தாக அல்லது பொறுப்பாக ஏற்பிசைவுசெய்யப்படும்.

நிதிசார்சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதோடு நிதி அளவினை எதிரீடுசெய்ய சபைக்கு சட்டமுறையான உரிமை உள்ளவிடத்தும் தேறிய அடிப்படையில் செலவு மீளளிப்பு செய்ய அல்லது சொத்துக்களை தேறவைத்து பொறுப்பினை சமாந்தரமாக செலுத்தித்தீர்க்க கருதப்படின் மாத்திரம் தேறிய பணஅளவு நிதிநிலைமை பற்றிய கூற்றில் சமர்ப்பிக்கப்படும்.

சபையின் நிதிசார் சொத்துக்களில் காசு மற்றும் குறுங்கால முதலீடுகளும் வர்த்தக மற்றும் பிற வருமதிகளும் உள்ளடங்கும்.

(அ) இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமானபெறுமதிக்கு நிதிசார்சொத்துக்களில் வர்த்தகத்திற்காக தடுத்துவைக்கப்படுகின்ற நிதிசார்சொத்துக்களும் இலாபம் அல்லது

நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு ஆரம்ப ஏற்பிசைவு செய்தலின்பேரில் பெயர் குறிக்கப்பட்ட நிதிசார் சொத்துக்களும் உள்ளடக்கப்படும். நிதிசார் சொத்துக்கள் கிட்டிய நடப்பு விற்பனை அல்லது மீள்கொள்வனவுப் பணிக்காகக் கொள்ளப்பட்டிருப்பின் அவை வர்த்தகத்திற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளவையாக வகைப்படுத்தப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்கள் விபரமான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் அல்லது நிதிசார் செலவில் ஏற்பிசைவு செய்யப்பட்ட நியாயமான பெறுமதியின் மாற்றங்களைக் கொண்டதாக நியாயமான பெறுமதியில் நிதிசார் நிலைமை பற்றிய கூற்றில் காட்டப்படுகின்றன.

(ஆ) கடனும் வருமதியானவையும்

கடனும் வருமதியானவையும் முனைப்பான சந்தையொன்றில் விலை மட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிராத நிலையான மற்றும் திட்டவட்டமான செலுத்துதல்களைக்கொண்ட பெறுதிகளற்ற நிதிசார்பொறுப்புக்களாகும். ஆரம்பக் கணிப்பீட்டின் பின்னர் அத்தகைய நிதிசார்சொத்துக்கள் சேதம் கழிக்கப்பட்டு அடுத்தடுத்ததாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்திற்கிணங்க கணிப்பீடு செய்யப்படும். கொள்ளப்பட்ட வேளையில் ஏதேனும் தள்ளுபடி அல்லது மதிப்பிறக்கம் செய்யப்பட்ட மற்றும் பயனுறுதிமிக்க வட்டிவழிமுறையின் உள்ளடங்கிய பகுதியான கட்டணம் அல்லது கிரயத்தைக் கருத்திற்கொண்டே மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயம் கணிப்பீடுசெய்யப்படும். பயனுறுதிமிக்க வட்டிவழிமுறை விபரமான வருமானக் கூற்றின் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேதம் காரணமாக தோன்றுகின்ற நட்டங்கள் நிதிக்கிரயத்தின் விபரமான வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

வர்த்தக வருமதிகள், ஊழியர் கடன், வைப்புகள், முற்பணங்கள், பிற வருமதிகள் மற்றும் காசு மற்றும் காசுக்குச் சமமானவை என்பவற்றையே கடனும் வருமதிகளும் உள்ளடக்குகின்றன.

(இ) பருவ முதிர்வுவரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகள்

நிலையான மற்றும் திட்டவட்டமான கொடுப்பனவுகளைக்கொண்ட பெறுதிகளற்ற நிதிசார்சொத்துக்களும் நிலையான முதிர்ச்சியடைதல்களும் பருவ முதிர்வுவரை தடுத்துவைத்துக் கொள்வதற்கான ஆக்கமுறையான நோக்கமும் ஆற்றலும் சபைக்கு உள்ளவிடத்து அவை பருவ முதிர்வுவரை தடுத்துவைக்கப்பட்டவையாக கருதப்படும். ஆரம்பக் கணிப்பீட்டின் பின்னர் பருவ முதிர்வுவரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகள் சேதம் கழிக்கப்பட்டு பயனுறுதிமிக்க வட்டி வழிமுறை பயன்படுத்தப்பட்டு அடுத்தடுத்ததாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்திற்கிணங்க கணிக்கப்படும். பயனுறுதிமிக்க வட்டிவழிமுறை மதிப்பிறக்கம் செய்தல் விபரமான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேதம் காரணமாகத் தோன்றுகின்ற நட்டங்கள் நிதிசார் கிரயத்தில் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

அரசாங்க பிணையங்களிலும் நிலையான வைப்புக்களிலுமான முதலீடுகள் பருவ முதிர்வுவரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகளின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடுகள்

விற்பனைக்காக உள்ள நிதிசார் சொத்துக்கள் என்பது விற்பனைக்காக உள்ளவையென பெயர்குறிக்கப்பட்டுள்ள அல்லது மேலே குறிப்பிட்ட ஏதேனும் நிதிசார் சொத்துக்கள் பிரிவில் வகைப்படுத்தப்பட்டிராத பெறுதிகளற்ற நிதிசார்சொத்துக்களாகும். ஆரம்ப ஏற்றுக்காள்ளலின் பின்னர் அவை நியாயமான பெறுமதிக்கு கணிப்பிடப்படுவதோடு சேதநட்டங்கள் தவிர்ந்த அதன் வித்தியாசங்கள் ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதோடு நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நியாயமான பெறுமதியில் சமர்ப்பிக்கப்படும். விற்பனைக்காக உள்ள கடன் பிணையங்கள் மீதான வட்டி வருமானம் பயனுறுதிமிக்க வட்டி வழிமுறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுவதோடு இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். முதலீடொன்றினை ஏற்பிசைவு செய்வதை நீக்கியவிடத்து நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டத்தில் மீள்வகைப்படுத்தப்படும்.

ஆரம்ப ஏற்பிசைவு செய்தலின்பேரில் விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடாக சபையானது எந்தவொரு நிதிசார் சொத்தையும் பெயர்குறிக்கவில்லை.

2.5 நிதிச்சொத்துக்களின் சேதங்கள்

ஒவ்வோர் அறிக்கையிடும் திகதியிலும் நிதிசார் சொத்துக்கள் அல்லது நிதிசார் சொத்துக்களின் குழுமம் சேதமடைந்தமைக்கான புலனால் உணரக்கூடிய சான்றுகள் உள்ளனவாவென கம்பெனி மதிப்பீடு செய்வதோடு அத்தகைய சேதம் இடம்பெற்றிருப்பின் சொத்தின் எடுத்துச்செல்லும் பெறுமதி மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வின் பெறுமதிக்கிடையிலான வித்தியாசத்தைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக சேதத்தின் அளவு கணிப்பீடு செய்யப்படும்.

3.பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

கேள்வியின்பேரில் அல்லது அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட உள்ளவையே நிதி நிலைமை பற்றிய கூற்றின்பேரில் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட உள்ள சொத்துக்களாக அமையும். அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டியுள்ள மீதிகளே நடைமுறையல்லாப் பொறுப்புக்களாக அமைகின்றன.

இந்த நிதியறிக்கைகளைத் தயாரிக்கையில் அறிந்த எல்லாப் பொறுப்புக்களுக்காகவும் காரணங்கள் காட்டப்பட்டுள்ளன. இறந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சபைக்கு சட்டரீதியான அல்லது உடன்பாடு ரீதியான கடப்பாடு உள்ளவிடத்தும் கடப்பாட்டினைத்

தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகள் வெளியே பாய்ந்துசெல்வதை அவசியப்படுத்த இடமுள்ளவிடத்தும் ஏற்பாடுகளும் பொறுப்புக்களும் ஏற்பிசைவு செய்யப்படும்.

3.1 ஓய்வூதிய நன்மைகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 19 – " இளைப்பாற்று நன்மைக் கிரயம்" மற்றும் 1983 இன் 12 ஆம் இலக்கமுடைய பணிக்கொடை செலுத்துதல் சட்டத்துடன் அமைந்தொழுகக்கூடிய வகையில் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்காக சேவையின் முதலாவது வருடம் நிறைவடைந்ததில் இருந்து இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் 1983 இன் 12 ஆம் இலக்கமுடைய பணிக்கொடை செலுத்துதல் சட்டத்துடன் ஊழியரொருவருக்கான பொறுப்பு ஐந்து வருட தொடர்ச்சியான சேவைக் காலம் நிறைவடைவதிலிருந்து மாத்திரமே தொடங்குகின்றது. பொறுப்புக்களுக்காக வெளிவாரி நிதியங்கள் வழங்கப்படுவதில்லை.

3.2 மூலதன ஒதுக்கீடுகளும் எதிர்பாராத பொறுப்புகளும்

பொருளாதார நன்மைகளை சாட்டுதல்செய்ய வாய்ப்பற்ற அல்லது நம்பகத்தன்மையை அளவிட இயலாத நிச்சயமற்ற எதிர்கால சம்பவங்கள் அல்லது நிகழ்கால கடப்பாடுகள் மூலமாக மாத்திரம் வழியுரிமையை உறுதிப்படுத்துகின்ற உள்ளார்ந்த கடப்பாடுகளாகும்.
சபையின் மூலதன ஒதுக்கீடுகளும் எதிர்பாரா பொறுப்புக்களும் நிதிக்கூற்றுகளில் ஏற்புடைய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

3.3 கடற்றொழிலாளர் ஓய்வூதிய நிதியத்தின் பொறுப்புகள்

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் நிதியத்தின் பொறுப்புகள் 2007 இல் மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பு மதிப்பீட்டின் பேரில் நிகழ்கால பெறுமதிகளை அடிப்படையாகக்கொண்டு நிதிக்கூற்றுகளில் கணக்குப் பதியப்பட்டுள்ளது.

இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 4 இல் 15 வது பந்தியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு காப்புறுதி உடன்படிக்கைகளில் காப்புறுதிக் கம்பெனி ஒவ்வோர் அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலும் தனது காப்புறுதி உடன்படிக்கையின்கீழ் எதிர்கால காசுப்பாய்வுகளின் நடப்பு மதிப்பீடுகளைப் பாவித்து தனது இனங்காணப்பட்ட காப்புறுதிப் பொறுப்புகள் பொதுமானதா என்பதை மதிப்பீடுசெய்ய வேண்டும். எதிர்கால காசுப்பாய்வுகளை கவனத்திற்கொண்டவிடத்து தனது காப்புறுதிப் பொறுப்புகளின் கொண்டுசெல்லல் பெறுமானம் (சார்ந்த பிற்போடப்பட்ட கையகப்படுத்தல் கிரயம் மற்றும் சார்ந்த அருவச் சொத்துக்களைக் கழித்து) போதுமானதாக அமையமாட்டாதென மேற்படி மதிப்பீட்டில் சுட்டிக்காட்டப்படுமாயின் ஒட்டுமொத்த பற்றாக்குறையினை இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காண வேண்டும்.

சந்தை வட்டி வீதங்களின் மாற்றங்களை கருத்திற்கொண்டு ஓய்வூதியப் பொறுப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு இலாப நட்டக் கூற்றுகளில் பிற விரிவான வருமானத்திலும் நிதிக் கூற்றுகளில் பிற விரிவான வருமானத்தினதும் பற்றாக்குறை இனங்காணப்பட்டுள்ளது.

அதனால் பிற விரிவான வருமானங்களின் கீழ் கடற்றொழிலாளர் ஓய்வூதிய பொறுப்பின் மேற்சொன்ன அதிகரிப்பு மேற்படி தரத்தின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.

4. விபரமான வருமானக் கூற்று

4.1 வருமானம்

அ) சபையின் வருமானம் காப்புறுதி தவணைப்பணம், திறைசேரி உண்டில்கள் மற்றும் ஊழியர் கடனுக்கான வட்டி வருமானம் மற்றும் பிற வருமானங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

ஆ) தவணைகளைச் சேகரித்ததன் மூலமாக கிடைத்த அனைத்து வருமானமும் காசு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

4.2 வருமானத்தை ஏற்பிசைவு செய்தல்

அ) ஓய்வூதிய தவணை வருமானம் சேர்த்துக்கொள்ளப்பட்ட காலத்திற்காக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

ஆ)மேற்படி வருமானம் காசு அடிப்படையில் அமைவதோடு ஏற்புடைய செலவுகளுடன் சீராக்கப்படுகின்றது.

இ) வட்டி வருமானம் கால அடிப்படையில் அட்டுறு நிலையடையும்.

4.3 அரசாங்கக் கொடைகளுக்கான கணக்குப் பதிவுகள்

உறப்பட்ட செலவினங்களுக்காக சபைக்குச் செலுத்தப்படுகின்ற கொடைகள் அச்செலவுகள் ஏற்பிசைவு செய்யப்பட்ட காலவரையறையில் வருமானமாக விரிவான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். சொத்தொன்றின் கிரயத்திற்காக சபைக்குச் செலுத்தப்படுகின்ற கொடைகள் சார்ந்த சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் பூராவிலும் ஒழுங்குமுறையான அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

4.4 செலவுகள்

கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் செயற்பாடுகளை அமுலாக்குகையிலும் சொத்துக்களை வினைத்திறன்கொண்டதாக பேணிவருகையிலும் உறப்பட்ட அனைத்துச் செலவுகளும் ஆண்டுக்கான மிகைநிலை அல்லது பற்றாக்குறையினை தீர்மானிக்கையில் அட்டுறு அடிப்படையில் வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

401/4 ஆம் இலக்கமும் 2008.10.15 திகதியும்கொண்ட அமைச்சரவைப் பத்திரம் மூலமாக கீழே காட்டப்பட்ட வீதத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட சபையின் நேரில் செலவுகள் பின்வருமாறு

செலவினம்	வீதம்
வாடகை, தொலைபேசி	5%
தபால், நீர்க்கட்டணம்	5%
மின்சாரம்	5%
தலைமை அலுவலக உபகரணம்	5%
கட்டடப் பராமரிப்பு	5%
மோட்டார் வாகனப் பராமரிப்பு	3%
எரிபொருள்	2%
காகிதாதிகள்	2%
சீருடைகள்	2%
பாதுகாப்பு	5%
கணினிச் செலவுகள்	5%

5. காசுப் பாய்வுக் கூற்று

இலங்கை கணக்கிட்டு நியமம் 07 இன் பிரகாரம் திட்டத்தின் காசுப்பாய்வுக்கூற்று **"நேரில் முறையை"**பயன்படுத்தியே தயாரிக்கப்பட்டுள்ளது.

6. அறிக்கையிடல் தேதிக்குப் பின்னரான சம்பவங்கள்

அறிக்கையிடல் தேதிக்குப் பின்னர் இடம்பெறுகின்ற சம்பவங்களின் அளவ கருத்திற் கொள்ளப்பட்டுள்ளதோடு அவசியமான இடங்களில் கணக்குகளில் பொருத்தமான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7. சார்ந்த தரப்பினர்கொடுக்கல் வாங்கல்கள்

கமத்தொழில் காப்புறுதித்திட்டமும் கமக்காரர் ஓய்வூதியத் திட்டமும் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் சார்ந்த தரப்பினர்களாக கருதப்படுவர். இந்த சார்ந்த தரப்பினருடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் நியாயமான பெறுமதியின்கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

8. முந்திய ஆண்டுக்கான சீராக்கங்கள்

திரண்ட நிதியம் 2020 ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளில் ரூ. 98,000 ஆல் மிகையாக காட்டப்பட்டுள்ளது. இந்த குறைபாடு 2023 ஆம் அண்டக்கான நிதிக்கூற்றுகளில் சரிசெய்யப்பட்டுள்ளது.

9. எதிர்பாராத சந்தர்ப்பங்கள்

9.1 வருமதியான வட்டி

1996 இல் திறைசேரி உண்டியல் மீதான முதலீட்டு வட்டியை இழந்தமை தொடர்பாக இலங்கை வங்கிக்கு எதிராக சபை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கினை தாக்கல் செய்துள்ளது.

விபரங்கள் பின்வருமாறு.

வழக்கு இலக்கம்	தொகை (ரூ.)
MR 21843	1,454,670.84
MR 21844	1,172,602.46
MR 21845	2,784,657.55

கமத்தொழில் காப்புறுதிச்சபை 1996 இல் இலங்கை வங்கயில் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்ததன் மூலமாக ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பில் அந்த வங்கிக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் மேன்முறையீட்டுக்கிணங்க மாவட்ட நீதவான் தீரப்பு அளித்துள்ளதோடு மனுக்களில் குறிப்பிடப்பட்டிராத மேலதிக மேலதிக சலுகைகள் வழங்குவதை மறுத்துள்ளார். அதனால் க.க.கா.ச. பணிப்பாளர்சபை தீர்மானம் எடுத்து மேற்முறையீடு செய்துள்ளது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

குறிப்பு -01

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி

சொத்துக்கள்	2023.01.01 இல் கிரயம்/ மதிப்பீடு கணித்தல்	கையுதிர்த்தல்	கிரயம் சேர்த்தவை	2023.12.31 இல்மீதி	2023.01.01 இல் திரண்ட தேய்மானம்	கையுதிர்த்தல்	ஆண்டுக்கான தேய்மானம்	மொத்த தேய்மானம்	2023.12.31 இல் பதிவழித்த பெறுமதி
அலுவலக உபகரணங்கள்	528,649	-	-	528,649	462,721	-	14,792	477,513	51,136
நலன்புரிச் சாதனங்கள்	1,325	-	-	1,325	1,325	-	-	1,325	-
தளபாடம் - பொருத்திகள்	77,677	-	-	77,677	71,264	-	2,850	74,114	3,563
கணினிகள்	264,945	-	-	264,945	264,945	-	-	264,945	-
	872,595	**-**	**-**	**872,595**	**800,255**	**-**	**17,642**	**817,897**	**54,698**

ஆதனம், சாதனம். பொறித்தொகுதி முழுமையாக தேய்மானம் கழிக்கப்பட்ட இன்னமும் பாவிக்கப்பட்டு வருகின்ற 2023 திசெம்பர் 31 இல் ரூ. 696,175.42 மொத்தப் பெறுமதிகொண்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றன

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

	31.12.2023	31.12.2022
குறிப்பு - 02 - கையிருப்பு	ரூ.	ரூ.
அச்சிடல் பொருட்கள்	87,430	92,219
	87,430	**92,219**
குறிப்பு - 03 - வருமதிகள்		
இறப்புப் பணிக்கொடை முற்பணம்	5,000	5,000
	5,000	**5,000**
குறிப்பு - 04		
பருவமுதிர்வு வரை தடுத்துவைத்த நிதிச்சாதனங்கள்		
திறைசேரி உண்டியல் - இலங்கை வங்கி	110,070,126	-
நிலையான வைப்பு - மக்கள் வங்கி	284,358,861	662,541,900
	394,428,987	**662,541,900**
குறிப்பு - 05 - வங்கியிலுள்ள காசு		
க/கு இலக்கம் 164790 இலங்கை வங்கி யூனியன் பிளேஸ்	332,905	118,693
க/கு இலக்கம் 164795 இலங்கை வங்கி யூனியன் பிளேஸ்	948,429	513,051
க/கு இலக்கம் 91071672 இலங்கை வங்கி நுகேகொட	25,000	
சேகரிப்பு கணக்குகள்	102,996	68,857
	1,409,330	**700,601**
குறிப்பு - 06 - கடற்றொழிலாளர் ஓய்வூதிய திரண்ட நிதியம்		
முன்கொண்டுவந்த மீதி	(4,509,752,321)	(4,103,708,674)
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்	(98,000)	17,000
	(4,509,850,321)	(4,103,691,674)
ஆண்டில் சேர்த்தவை		
ஆண்டுக்கான மிகைநிலை / (பற்றாக்குறை)	(425,104,832)	(406,060,646)
	(4,934,955,153)	**(4,509,752,321)**

. கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

	31.12.2023	31.12.2022
	ரூ.	ரூ.
குறிப்பு - 07- இறப்புப் பணிக்கொடை நிதியம்		
முன்கொண்டுவந்த மீதி	32,535,495	30,965,195
சேர்க்க:		
ஆண்டுக்கான பங்களிப்பு	1,746,720	1,749,300
கழிக்க:		
செலுத்திய இறப்புப் பணிக்கொடை	(83,000)	(179,000)
	(83,000)	(179,000)
	1,663,720	**1,570,300**
	34,199,215	**32,535,495**
குறிப்பு - 08 - சென்மதிகள்		
ஓய்வூதியக் கொடுப்பனவு	5,537,581	5,738,914
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்	67,786,327	62,893,600
மீளளிக்கத்தக்க உதவுதொகை	82,940	106,702
இறப்புப் பணிக்கொடை	167,000	159,000
உதவுதொகை மீதான வட்டியின் மீளளிப்பு	150,451	146,131
கணினிப் பராமரிப்பு	-	11,450
கமக்காரர் ஓய்வூதியத் திட்டம்	86,866,223	
	160,590,522	**69,055,797**
குறிப்பு - 09 - அட்டுறு செலவினங்கள்		
அச்சிடலுக்கான ஏற்பாடு	522,699	542,199
கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடு	327,000	264,600
	849,699	**806,799**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

	31.12.2023	31.12.2022
	ரூ.	ரூ.
குறிப்பு - 10 - நிருவாகச் செலவினங்கள்		
சம்பளமும் ஊதியமும்	2,283,133	3,352,383
ஊ.சே.நி. பங்களிப்பு	302,868	362,231
ஊ.ந.நி. பங்களிப்பு	68,543	90,558
விசேட படிகள்	557,736	497,736
பணிக்கொடை	273,031	476,365
எரிபொருள்	460,976	427,930
காகிதாதிகள்	314,066	249,691
அச்சிடல்	267,539	121,433
பணியாளர் சீருடைகள்	-	10,209
வாடகை	1,237,854	937,444
தொலைபேசி	370,852	333,026
தபால்	694,102	351,051
நீர்க் கட்டணச்சிட்டை	48,591	30,877
பாதுகாப்பு	184,530	121,813
மின்சாரம்	313,436	135,498
மோட்டார் வாகனப் பராமரிப்பு	792,711	552,388
கட்டிடப் பராமரிப்பு	491,215	35,051
அலுவலக சாதன பராமரிப்பு	96,073	56,212
கணினி செலவுகள்	331,109	182,651
தேய்மானம்	17,642	17,642
கணக்காய்வுக் கட்டணம்	324,000	239,400
	9,430,008	**8,581,590**
குறிப்பு 11 - நிதி அறவீடுகள்		
வங்கி அறவீடுகள்	6,236	400
	6,236	**400**

ஆடிட்டர் ஜெனரல் அறிக்கைகள்

எனது இலக்கம் - ARC/C/FPS/1/23/56/FA 2024 ஒற்றோபர் 08 ஆந் திகதி

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினதும் அதன் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டங்களினதும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள், பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஒப்பமிட்டது.

டபிள்யு.பி.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள் :- 1. செயலாளர் – கமத்தொழில் அமைச்சு

2. செயலாளர் – நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

எனது இலக்கம் - ARC/C/FPS/1/23/56/FA 2024 ஒற்றோபர் 08 ஆந் திகதி

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினதும் அதன் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தினதும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள், பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுகள்

1.1 அபிப்பிராயம்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ("சபை") மற்றும் அதன் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய,சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டங்களினதும் ("குழுமம்") 2023 திசெம்பர் 31 இல் நிதிநிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான விபரமான வருமானக்கூற்று, உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்வுக் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள், பொழிப்பு தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சபையினதும் குழுமத்தினதும் நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்கமுடைய நிதிச்சட்டத்தினதும் ஏற்பாடுகளின்கீழ் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

குழுமம்

மறுப்பு அபிப்பிராயம்

குழுமத்தின் நிதிக்கூற்றுகள் பற்றி நான் அபிப்பிராயமொன்றை வெளியிடப் போவதில்லை. குழுமத்தின் அபிப்பிராயம் மறுக்கப்படுவதற்கான அடிப்படை பகுதியில் (1.2) ஆராயப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுகள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்க போதியளவிலான மற்றும் உசிதமான சான்றுகளைப் பெற்றுக்கொள்ள என்னால் இயலாமல் போயிற்று.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் (1.2.1) இல் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக, சபையின் நிதிசார் கூற்றுகள் ஊடாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிநிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிசார் செயற்பாடு மற்றும் காசுப் பாய்வு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை பிரதிபலிக்கின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 குழுமத்தின் நிதிக்கூற்றுகள் பற்றிய மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட சபையின் நிதிக் கூற்றுகள் பற்றி 1.2.1 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு முனைப்பழியுள்ள அபிப்பிராயமொன்றை வெளியிடுகிறேன்.

குழுமத்தில் உள்ள கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டத்திற்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் பற்றி 1.2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு என்னால் மறுப்பு அபிப்பிராயமொன்று வெளியிடப்பட்டிருந்தது.

குழுமத்தில் உள்ள கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டத்திற்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் பற்றி 1.2.3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு என்னால் முனைப்பழியுள்ள அபிப்பிராயமொன்று வெளியிடப்பட்டிருந்தது.

1.2.1 சபையின் நிதிக்கூற்றுகள் பற்றிய முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) பரிசீலிக்கப்பட்ட 14 மாவட்ட அலுவலகங்களில் 2023 மார்ச்சு மாதத்தில் மூன்றாந்தரப்பு காப்புறுதி வருமானமாக நிதிக்கூற்றுகளின் பிரகாரம் இனங்காணப்பட்டுள்ள பெறுமானத்திற்கும் மாவட்ட அலுவலகங்களில் கணினிமயப்படுத்திய தரவுகளுக்கும் இடையில் ரூ. 8,119,818 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2018 ஆம் ஆண்டில் இருந்து 2022 ஆம் ஆண்டுவரை பயிர்க் காப்புறுதி இழப்பீடு செலுத்துவதற்காக பொது திறைசேரியிடமிருந்து வருமதியானதாக சபையின் இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்த ரூ. 4,249,619,152 வருமதியான வருமானம் 2023 ஆம் ஆண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தது. 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை சட்டத்தின்படி தொழிற்பாட்டு வருமானத்தின் நூற்றுக்கு 5 வீதம் கமநலக் காப்புறுதி நிதியத்திற்கு மாற்றப்படுவதால் மேற்படி பணத்தொகையுடன் தொடர்புடையதாக அவ்விதமாக தொழிற்பாட்டு வருமானத்திலிருந்து மாற்றப்பட்ட ரூ. 212, 480,957 பணத்தொகை கமநலக் காப்புறுதி நிதியத்திலிருந்து அகற்றப்பட்டு திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மஹியங்கனை, எம்பிலிபிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகிய நகரங்களிலுள்ள சபைக்குச் சொந்தமான 3 உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள 76.6 பர்ச்சஸ் காணியை பெறுமதி மதிப்பீடுசெய்து நிதிக்கூற்றுகளில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) காசுப் பாய்வுக் கூற்றினைத் தயாரிக்கையில் இலங்கை கணக்கீட்டு நிமம் 07 இன் 04 வது பந்திக்கு முரணாக,

(i) சம்பந்தப்பட்ட தரப்பினர்க்கிடையிலான கொடுக்கல்வாங்கல் மீதிகளுக்கிடையிலான வித்தியாசமான ரூ. 54,053,519 ஐ வருமதியான கணக்கு மீதிக்குள் சீராக்கியமை மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மைத் திட்டங்களுக்காக பேணிவரப்படுகின்ற நடைமுறைக்கணக்குகளின் உண்மையான காசு உட்பாய்ச்சலான ரூ. 206,225,000 மற்றும் உண்மையாக காசு வெளிப்பாய்ச்சலான ரூ. 205,665,309 ஐ தொழிற்பாட்டு காசுப் பாய்வில் இனங்காணப்பட்டிராமை காரணமாக தொழிற்பாட்டு காசுப் பாய்வு ரூ. 54,613,210 ஆல் குறைவாக கணிக்கப்பட்டிருந்தமை.

(ii) காசாக செலுத்தப்பட்டிருந்த ஊழியர் மருத்துவக் கட்டணக் கொடுப்பனவு ரூ. 2,181,826 காசுப் பாய்வுக் கூற்றில் சமர்ப்பித்திராமை காரணமாக அப்பெறுமதியால் தொழிற்பாட்டு காசுப்பாய்வு மிகையாக கணிக்கப்பட்டிருந்தமை.

(iii) கமக்காரர்களின் இறப்புப் பணிக்கொடை நிதியக் கணக்கில் உண்மையான காசுப்பாய்வு தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலான காசுப் பாய்வாக காட்டப்படாமல் கமக்காரர்களின் இறப்புப் பணிக்கொடை நிதியக் கணக்கு மீதி வித்தியாசமான ரூ. 133,219,275 முதலீட்டு நடவடிக்கைகளிலான காசுப்பாய்வாக அறிக்கை செய்யப்பட்டமையால் ரூ. 49,281,460 ஆல் தொழிற்பாட்டுக் காசுப் பாய்வு குறைவாக கணிக்கப்பட்டு ரூ. 133,219,275 ஆல் முதலீட்டுக் காசுப்பாய்வு மிகையாக கணிக்கப்பட்டிருந்தது.

(iv) கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் கடன் கணக்கின் ரூ. 20,000,000 கடனை செலுத்தித் தீர்த்தல் முதலீட்டுக் காசு உட்பாய்ச்சலாக குறிப்புப் பதியப்படாமையால் முதலீட்டுக் காசுப் பாய்வு மேற்படி பெறுமதியால் குறைவாக கணிக்கப்பட்டிருந்தது.

(v) ஊழியர் மருத்துவக் காப்புறுதி நிதியத்துடன் தொடர்புடையதாக ரூ. 2,430,248 உம் கமக்காரர்களின் இறப்புப் பணிக்கொடை நிதியத்துடன் தொடர்புடைய ரூ. 6,326,428 வருமதியான முதலீட்டு வட்டி வருமானக் கணக்குகளின் மீதி வித்தியாசம் முதலீட்டு நடவடிக்கைகளின்பேரிலான காசுப்பாய்வாக கருதப்பட்டமையால் முதலீட்டுக் காசுப்பாய்வு ரூ. 8,756,676 ஆல் குறைவாகக் கணிக்கப்பட்டிருந்தது.

(vi) ஊழியர் மருத்துவக் காப்புறுதி நிதியக் கணக்கு மீதி வித்தியாசமான ரூ. 8,500,488 அதிகரிப்பு முதலீட்டுக் காசுப்பாய்வில் அறிக்கை செய்யப்பட்டமையால் முதலீட்டுக் காசுப்பாய்வு அந்த அளவினால் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது.

(vii) ஊழியர் மருத்துவக் காப்புறுதி நிதியத்தின் முதலீட்டின் பேரில் கிடைத்த வட்டி ரூ. 2,972,367 முதலீட்டுக் காசுப்பாய்வில் சமர்ப்பிக்கப்பட்டிராமை காரணமாக முதலீட்டுக் காசுப்பாய்வு அந்த அளவினால் குறைவாக கணிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வுத் தரங்களுக்கு (இ.க.நி) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் தொடர்ந்தும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவை எனவும் உசிதமானவை எனவும் நான் நம்புகிறேன்.

1.2.2 கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) செயற்றிட்டத்தின் மொத்த சொத்துக்கள் ரூ. 2,202.748,150 ஆகவும் மொத்த பொறுப்புக்கள் ரூ. 89,457,327,488 ஆகவும் அமைந்தமையால் மொத்த நடைமுறைச் சொத்துக்கள் ரூ. 1,092,503,529 ஆகவும் மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் ரூ. 2,527,354,554 ஆகவும் அமைந்தமையால் நடைமுறைச் சொத்துக்களை விஞ்சிய நடைமுறை பொறுப்புக்கள் ரூ. 1,434,851,025 ஆகவும் அமைவதால் திறைசேரியின் பங்களிப்பின்றி செயற்றிட்டத்தைப் பேணிவரமுடியாத நிலைமை காணப்படுவதால் செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமை சிக்கலானதாக அமைகின்றது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 88 வது பந்திக்கு முரணாக மீளாய்வாண்டில் கமக்காரர்களிடமிருந்து கிடைத்த தவணைப்பண வருமானம் மற்றும் முதலீட்டு வட்டியை உள்ளிட்டதாக கிடைத்த ரூ. 133,810,611 பணத்தொகை காலப்பகுதிக்கான வருமானமாக கணக்குப் பதியப்படாமல் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தமையால் அந்த அளவினால் இலாபம் குறைவடைந்திருந்தது.

(இ) சபையினால் செயற்றிட்டத்துடன் தொடர்புடையதாக செலுத்தப்பட்டிருந்த ரூ. 10,585,145 பணத்தொகை காசு வெளிப்பாய்ச்சலாகவும் ரூ.3,046,341,760 முந்திய ஆண்டுக்கான சீராக்கம் தொழிற்பாட்டு மூலதனத்தின் காசு உட்பாய்ச்சலாகவும் சபைக்காக பேணிவரப்பட்டிருந்த நடைமுறைக்கணக்கில் ரூ. 470,320 வித்தியாசம் இரண்டு தடவைகளும் காசுப் பாய்விற்கு தவறாக சீராக்கப்பட்டிருந்தது. மேலும் புதிதாக நிதியத்திற்காக பங்களிப்புச்செய்த கமக்காரர்களிடமிருந்து கிடைத்த ரூ. 20,730,787 கிடைத்த பணமும் காசு உட்பாய்ச்சலாக காசுப் பாய்வுக் கூற்றில் சீராக்கப்படவில்லை என்பதோடு காசாக செலுத்தித் தீர்த்திருந்த ரூ. 20,00,000 கடன் தவணை காசுப் பாய்வில் காசு வெளிப்பாய்ச்சலாக குறிப்புப் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூ. 86,898,445,376 ஓய்வூதியப் பொறுப்பிற்கான ஆயுட்கணிப்பு மதிப்பீடு செய்யப்பட்டிராமையால் திட்பநுட்பத்தன்மை உறுதிசெய்யப்படவில்லை.

(உ) கமக்காரர்களின் சரியான உயிர்த் தரவுத் தகவல்களை இற்றைப்படுத்துவதற்கான முறையியலொன்று இராமையால் இறந்த மற்றும் வேறு காரணங்களால் உரித்துக்கோராத கமக்காரர்களின் ஓய்வூதியம் தொடர்ச்சியாக அஞ்சல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2023 ஆம் ஆண்டில் கமக்காரர்களால் பெறப்படாமையால் அஞ்சல் திணைக்களத்தினால் திருப்பி அனுப்பிவைத்த ஓய்வூதியம் ரூ. 259,373,191 ஆக அமைந்ததோடு மீளாய்வாண்டின் இறுதியில் இந்த

திணைக்களத்திடமிருந்து வருமதியான மீதி ரூ. 81,000,602 ஆக அமைந்திருந்தது. ஓய்வூதியத்தை பெற்றராத கமக்காரர்கள் பற்றிய விபரங்களை பேணிவராமையால் வருட இறுதி மீதியினதும் கிடைத்த பணத்தினதும் திட்பநுட்பத் தன்மையை உறுதிசெய்துகொள்ள முடியாமல் போயிற்று.

1.2.3 **கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்**

முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இன் 4 வது பந்திக்கு முரணாக முந்திய ஆண்டுக்கான சீராக்கம் ரூ. 98,000 கழிக்கப்படவும் இறப்புப் பணிக்கொடை நிதியத்திற்காக ஒதுக்கிய ரூ. 1,746,720 பணத்தொகை சேர்க்கப்படவும் வேண்டியிருப்பினும் குறைத்துக்காட்டியமையும் இறப்புப் பணிக்கொடை நிதியத்திலிருந்து மேற்கொண்ட ரூ. 173,000 வெளிப்படுத்தப்படாமையும், சென்மதியான இறப்புப் பணிக்கொடை மீதியின் வித்தியாசமான ரூ. 8,000 தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களில் சேர்த்தலாக உள்ளடக்கப்பட்டமையும் காரணமாக காசுப் பாய்வுக்கூற்றில் தொழிற்பாட்டு செயற்பாடுகள் ரூ. 3,410,440 ஆல் குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது. இறப்புப் பணிக்கொடை நிதியக் கணக்கு மீதியிலான வித்தியாசம் மற்றும் ஒதுக்கீடுகளின் கூட்டுத்தொகையான ரூ. 3,410,440 பணத்தொகை மூதலீட்டுச் செயற்பாடுகளில் சேர்த்தமை காரணமாக முதலீட்டுக் காசுப்பாய்வு மிகையாக கணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் ரூ. 5,532,349,026 ஆக அமைந்த ஓய்வூதியப் பொறுப்பிற்கான ஆயுட்கணிப்பு மதிப்பீடு 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஓய்வூதியப் பொறுப்பு ரூ. 5,532,349,026 ஆக அமைந்திருப்பினும் அன்றைய திகதியிலான முதலீட்டுப் பெறுமதி ரூ. 793,308,692 ஆக அமைந்தமையால் இந்த கடப்பாடுகளை செலுத்தித்தீர்க்க போதியளவிலான முதலீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலமாக பணியாட்டொகுதியொன்று அங்கீகரிக்கப்பட்டிராத நிலையில் சம்பந்தப்பட்ட பணியுடன் நேரடியாகவே தொடர்பற்ற உத்தியோகத்தர்கள் இருவருக்காக செலுத்தப்பட்ட கூட்டுத்தொகை ரூ. 1,332,218 சம்பளச் செலவாக கணக்குப்பதியப்பட்டிருந்தது.

(உ) செயற்றிட்டத்தின் மொத்த தேறிய சொத்துக்கள் தொடர்ச்சியாக எதிர்க்கணியப் பெறுமானம் அடைந்தமையின் பேரில் திட்டத்தின் மொத்தச் சொத்துக்களை தேறச்செய்விப்பதன் மூலமாக மொத்தப் பொறுப்புக்களை செலுத்தித்தீர்க்க முடியாமையாயால் செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமை கருத்துபேதத்திற்கு இலக்காகின்றது.

மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு நிதிநிலைமை பற்றிய கூற்றில், விபரமான வருமானக் கூற்றில், உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்றில் மற்றும் காசுப் பாய்வுக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட கணியரீதியான உருப்படிகளை மாற்று வழிமுறைகள் மூலமாக உறுதிசெய்யவோ அல்லது உருப்படி சரிபார்க்கவோ இயலாமல் போயிற்று. இதன் காரணமாக குழுமத்தின் நிதிநிலைமைக்கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசுப்பாய்வுக் கூற்று தயாரிக்கப்படுகின்ற

பெறுமதி அல்லது உருப்படிகளின் அறிக்கை செய்யப்பட்ட அல்லது அறிக்கை செய்யப்படாத பெறுமதி அல்லது கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக ஏதேனும் சீராக்கம்செய்ய அவசியமா என்பதை என்னால் நிச்சயித்துக்கொள்ள முடியாமல் போயிற்று.

1.3 சபையின் 2023 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கிய ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையிலுள்ள திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்க எதிர்பார்த்துள்ள சபையின் 2023 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கியுள்ள எனினும் நிதிசார் அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், எனைய தகவல்கள் என்பதன் மூலமாக கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்பு வகிக்கவேண்டும்.

நிதிக்கூற்றுகள் சம்பந்தமான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படுவதில்லை என்பதோடு நான் அது பற்றிய எந்தவிதமான உத்தரவாதத்தையோ அல்து அபிப்பிராயத்தையோ வெளிப்படுத்தப் போவதில்லை.

நிதிக்கூற்றுகள் பற்றிய எனது கணக்காய்வுடன் தொடர்புடையதாக எனது பொறுப்பாக அமைவது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெறக்கூடியதாக அமைந்தவிடத்து வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்கையில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுகளுடன் அல்லது கணக்காய்வில் வேறுவிதமாகப் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கிணங்க கணியரீதியாக பொருந்துவதில்லையா என்பதை பரிசீலித்துப் பார்ப்பதாகும்.

சபையினதும் குழுமத்தினதும் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை வாசிக்கையில் அதில் கணியரீதியான தவறாகக் காட்டப்படல் உள்ளதாக நான் ஊகிப்பேனாயின் சரிசெய்வதற்காக ஆளுந்தரப்பினருக்கு அந்த தகவல்கள் பற்றி அறிவிக்க வேண்டும். தொடர்ந்தும் சரிசெய்யாத தவறாகக் காட்டப்படல் இருக்குமாயின் அவை அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 **நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதலும் நியாயமானவகையில் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகள் இன்றி நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுவதற்கு ஏதுவாகும்பொருட்டு அவசியமான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் செயற்றிட்டத்தை இடையறாமல் பேணிவருவதற்கான இயலுமையை தீர்மானிக்க வேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் குழுமத்தை ஒழிக்கக் கருதுமாயின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்திவிட செயலாற்றினாலேயன்றி தொடர்ந்து இயங்குகின்ற அடிப்படையில் கணக்குகளை பதிதலும் செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

குழுமத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினரால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலச் செய்விக்கும் வகையில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி முறைப்படி பதிவேடுகளும் அறிக்கைகளும் பேணிவரப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு அமைவாக நடாத்தப்படுகின்ற கணக்காய்வின் அடிப்படையில் சபையினதும் குழுமத்தினதும் நிதிக்கூற்றுகள் பற்றிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக குழுமத்தின் நிதிசார் கூற்றுகள் சம்பந்தமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்க போதுமானதும் உசிதமானதுமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ள என்னால் இயலாமல் பொயிற்று.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

2.1.1 சபை பற்றிய எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கணக்காய்வுக்காக அவசியமான அனைத்து தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதோடு எனது விசாரணையில் புலனாகின்றவிதத்தில் முறையான நிதியறிக்கைகள் சபையினால் பேணிவரப்பட்டிருப்பினும் குழுமத்தின் கணக்காய்விற்கு அவசியமானவையெனக் கருதப்படுகின்ற அனைத்து தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் நான் பெற்றுக்கொள்ளவில்லை என்பதோடு முறையான கணக்கறிக்கைகளை குழுமம் பேணிவந்துள்ளதா என்பதை என்னால் தீர்மானிக்க இயலாமல் போயிற்று.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டம் சமர்ப்பித்த நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்ததாக அமைகின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் 1.2.2 (அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) ஆகிய பந்திகளில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முந்திய வருடத்தில் என்னால் செய்யப்பட்டுள்ள விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளன.

2.2 கடைப்பிடிக்கப்பட்ட செயல்வழிமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின்பேரிலும் கணியரீதியான மட்டுப்பாடுகளுக்குள்ளேயும் கீழே குறிப்பிடப்பட்ட கூற்றுக்களை வெளியிடும் அளவுக்கு எதுவுமே எனது கவனத்திற்கு இலக்காகவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டத்தின் ஆளும் சபையினது எவரேனும் அங்கத்தவருக்கு திட்டத்தில் இணைந்து ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ வேறுவிதமாகவோ பொதுவான தொழில்முயற்சி நிலைமைக்குப் புறம்பான தொடர்பு உள்ளமை.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்பு நீங்கலாக ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டத்திற்கு அல்லது திட்டத்தின் ஆளும் சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றி உள்ளமை.

சட்டதிட்டங்கள் /பணிப்புரைகளுக்கான தொடர்பு	**அவதானிப்புகள்**
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி. 381	சபையின் 45 வங்கிக் கணக்குகளை உள்ளடக்கியதாக குழுமத்தின் 57 வங்கிக் கணக்குகள் திறைசேரியின் அங்கீகாரமின்றிதொடங்கி பேணிவரப்படுகின்றது.
2022 திசெம்பர் 14 ஆந் திகதிய 2310/29 ஆம் இலக்கமுடைய நடவடிக்கை விதிமுறைகளுக்கான அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் IX அத்தியாயத்தின் பிரிவு 131	பதில்க்கடமை நியமனம் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியில் உள்ள நிரந்த அரச உத்தியோகத்தரொருவர் முறைசார்ந்த அங்கீகாரத்தைப்பெற்று ஏதேனும் காலப்பகுதிக்காக மேற்படி பதவியின் சேவையிலிருந்து விலகியுள்ள சந்தர்ப்பத்தில் அல்லது அனுமதிக்கப்பட்ட பணியாட்டொகுதி யில் உள்ள பதவியொன்றில் வெற்றிடம் நிலவுகையில் அந்த பதவிக்காக நிரந்தர நியமனம் வழங்கப்படும்வரை தற்காலிக பரிகாரமாக அமைந்தபோதிலும் 07 பதவிகளுக்காக 26 உத்தியோகத்தர்கள் 08 மாதங்களிலிருந்து 12 மாதங்கள் வரை நீண்டகாலமாக பதிற்கடமை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.
2015 மே மாதம் 25 ஆந் திகதிகொண்ட PED/1/2015 இலக்கமுடைய பகிரங்கத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 2	சுற்றிக்கைக்கு முரணாக MM 1-1 சேவைகள் தொகுதியைச் சேர்ந்த 19 உத்தியோகத்தர்களுக்காக பணிப்பாளர்சபை அங்கீகாரத்தின்பேரில் மீளாய்வாண்டில் ரூ. 1,380,533 மற்றும் மீளாய்வாண்டில் ரூ. 1,837,960 போக்குவரத்துப்படி செலுத்தப்பட்டிருந்தது.
2022 ஒற்றோபர் 06 ஆந் திகதிய 06/2022 ஆம் இலக்கமுடைய அரசாங்க பொறுப்புமுயற்சிகள் சுற்றறிக்கை	வயது 60 வருடங்களைக் கடந்து சேவையில் ஈடுபட்டுள்ள மற்றும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் வயது 60 வருடங்களை நிறைவுசெய்கின்ற அரசாங்கத்திற்குச் சொந்தமான பொறுப்புமுயற்சிகளின் ஊழியர்கள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னராகவோ கட்டாயமாக இளைப்பாற வேண்டியிருப்பினும் அத்துடன் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன்னனுமதி பெறப்படவேண்டியிருப்பினும் அன்றைய திகதியில் வயது 60 வருடங்களை நிறைவுசெய்கின்ற மற்றும் வயது 60 வருடங்களை கடந்த 5 உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தி அங்கீகாரமின்றி சம்பளம் மற்றும் படிகளாக ரூ. 4,389,535.62 செலுத்தப்பட்டிருந்தது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றியுள்ளமை.

தத்துவங்கள், கடமைகள், மற்றும் பணிகள்	**அவதானிப்புகள்**
(அ) 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தின் 7 (அ) உப பிரிவு	8,185 கமக்காரர்களுக்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்ட ரூ. 70,800,200 இழப்பீட்டுத்தொகை, கணக்கு இலக்கங்கள், கமக்காரர்களின் பெயர்கள் மற்றும் அடையாள அட்டை இலக்கங்கள் பொருந்தாமை காரணமாக வணிக வங்கிகளால் திருப்பி அனுப்பப்பட்டிருப்பினும் மேற்படி மீதியை தீர்த்துவைக்க 5 வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) 2019 செத்தெம்பர் 02 ஆந் திகதிய 07/2017 (திருத்திய) ஆம் இலக்கமுடைய கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசன மற்றும் கடற்றொழில், நீரக வளத்துறை அபிவிருத்தி அமைச்சின் சுற்றறிக்கை	தகவல்களை சமர்ப்பித்திருந்த 17 அலுவலகங்களில் 2021/2022 பெரும்போகத்துடன் தொடர்புடைய திடீர் விபத்துக் காப்புறுதிக் காப்பீட்டுக்காக 23,351 கமக்காரர்களிடமிருந்து ரூ. 9,244,450 பணத்தொகை சபையின் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தபோதிலும் அதில் 15,491 கமக்காரர்களுக்கு காப்புறுதிப் பத்திரம் கிடைத்திருக்கவில்லை என்பதோடு 7,851 கமக்காரர்களுக்கு காப்புறுதிப் பத்திரங்கள் 07 மாதங்கள் தொட்டு 10 மாதங்கள் கழிந்த பின்னரே வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டத்தின் வளங்களை சிக்கனமாகவும் பயனுறுதிமிக்கவகையிலும் விளைவாற்றல்மிக்கதாகவும் காலப்பகுதிகளுக்குள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமைவாக பெறுகைசெய்து பாவிக்கவில்லையென்பது.

ரூ. 79,000,000 பெறுமதிக்கு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட சபையின் முகாமைத்துவ தகவல்கள் முறைமைக்கான தொழில்வாண்மை வளங்கள் திட்ட முறைமையையும் (ERP) system வன்பொருளையும் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் 2023 மார்ச்சு 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆகஸ்ற் 20 ஆந் திகதியளவில் நிறைவுசெய்யப்பட்டிருக்க வேண்டியிருப்பினும் 2024 யூலை 31 ஆந் திகதியளவிலும் மேற்படி பணிகள் நிறைவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் பயிர்ச்சேதத்திற்காக 2 மாதங்களுக்குள் இழப்பீட்டுத்தொகை செலுத்தப்படவேண்டியிருப்பினும் 2023 மார்ச்சு மாதத்துடன் முடிவடைகின்ற 2022/2023 பெரும்போகத்திற்காக விதந்துரைக்கப்பட்டிருந்த 39,455 விண்ணப்பப் பத்திரங்களுக்காக ரூ. 914,574,064 பணத்தொகை 2023 யூன் மாதம் 09 ஆந் திகதி தொடங்கி 2023 செத்தெம்பர் மாதம் 02 அந் திகதி வரை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1987 இன் 12 ஆம் இலக்கமுடைய கமக்காரர் ஓய்வூதிய. சமூகப் பாதுகாப்பு நலன்புரிச் சட்டத்தின் 6(1) பிரிவின் பிரகாரம், செயற்றிட்டத்தில் பங்களிப்புச் செய்கின்ற ஓய்வூதியம் பெறுவதற்கான உரித்துள்ள வயது 60 வருடங்களை பூர்த்திசெய்த கமக்காரர்களை இனங்கண்டு ஓய்வூதியம் செலுத்தாமை, 15 (1) பிரிவின் பிரகாரம் தொடர்ச்சியாக 5 தவணைகளுக்கான பணத்தை செலுத்தத் தவறியுள்ளதாக உதவுதொகை செலுத்துநருக்கு அறிவிக்காமை மற்றும் நன்மைபெறுகின்ற தரப்பினர்களால் தொடர்ச்சியாக 5 தவணைகளுக்கான பணத்தை செலுத்தத் தவறியிருப்பினும் இடைக்கிடையே 5 தவணைகளுக்கான பணத்தை செலுத்தாத நன்மைபெறுனர்களுக்கும் காப்புறுதிப் பத்திரத்தை மீறியதாகக்கருதி ஓய்வூதிய நன்மைகள் அற்றுப்போகச் செய்யப்பட்டிருந்தது.

(இ) உதவுதொகை செலுத்துனருக்கு வழங்கப்பட்டுள்ள உறுதிச் சான்றிதழின் பிரிவு 6 இன்படி செலுத்தியுள்ள அரையாண்டு உதவுதொகைகளின் எண்ணிக்கையில் நூற்றுக்கு 75 வீதம் கிடைத்திருப்பின் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான குறித்துரைத்த ஓய்வூதியத்தைப் பார்க்கிலும் குறைக்கப்பட்ட ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை இருக்கின்றபோதிலும் அதனை மேற்கொள்ளாமல் ஓய்வூதிய நன்மைகள் முழுமையாகவே இல்லாதொழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டத்திற்குள் பதிவுசெய்துள்ள 871,425 கமக்காரர்களில் 2023 திசெம்பர் 31 இல் வயது 61 தொடக்கம் 93 வரையான வயதுமுதிர்ந்த 474,803 கமக்காரர்கள் உள்ளபோதிலும் அதில் 264,227 பேருக்கு ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 1990 இன் 23 ஆம் இலக்கமுடைய கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் 5 (1) பிரிவின்படி வயது 18 தொடக்கம் 59 வரையான கடற்றொழிலாளருக்கு இந்த செயற்றிட்டத்தில் சேர்ந்துகொள்வதற்கான உரிமை இருக்கின்றபோதிலும் 2018 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உறுப்பினர்களை சேர்த்துக்கொள்ளாமை, சட்டத்தின் 7 வது பிரிவின் பிரகாரம் செயற்றிட்டத்தில் பங்களிப்புச் செய்துள்ள கடற்றொழிலாளர்களுக்கு வயது 60 நிறைவடைகின்றபோதே ஓய்வூதியம் வழங்கப்படாமையால் 2007 சனவரி தொடக்கம் 2016 திசெம்பர் வரையான காலத்திற்காக சம்பந்தப்பட்ட 139 கடற்றொழிலாளர்களுக்கு ரூ. 1, 378,518 என்றவகையில் கூட்டுத்தொகை ரூ. 5,537, 581 நிலுவை ஓய்வூதியமாக நிதிக்கூற்றுகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும் கடற்றொழிலாளர்களுக்கு செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) செயற்றிட்டத்தில் பங்களிப்புச் செய்துள்ள கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை 64,117 ஆக அமைவதோடு கடற்றொழிலாளர்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் வயது 60 வருடங்களை விஞ்சி ஓய்வுபெறும் வயதினை அடைந்திருந்த 31,146 ஆக அமைந்த கடற்றொழில் உதவுதொகை செலுத்துனர்களில் 24,187 பேருக்கு (ஒரே தடவையில் பங்களிப்புத் தொகையை செலுத்தி உறுப்பாண்மையைப் பெற்றுக்கொண்ட 5,549 உதவுதொகை செலுத்துனர்களை உள்ளிட்டதாக) கடற்றொழிலாளர் ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சர்வதேச நிதிக் கூட்டுத்தானத்துடன் (IFC) கூட்டாக விவசாய முகாமைத்துவ தகவல் முறைமையைக் கட்டியெழுப்புவதற்காக ஐக்கிய நாடுகள் உணவு, விவசாய அமைப்பிடமிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூ. 20,391,089 பணத்தொகையை சபைக்கு வழங்கியிருந்ததோடு அவ்வருடத்தில் அதற்காக ரூ. 23,009,698 செலவிடப்பட்டிருந்தபோதிலும் 2014 ஆம் ஆண்டளவிலும் இழப்பீடு கணித்தல் மற்றும் இழப்பீடு செலுத்துதல் செயற்பாங்கிற்காக தகவல் முறைமை பாவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2017 இன் 24 ஆம் இலக்கமுடைய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் வருமான வரிக்காக பதிவுசெய்திராமை காரணமாக 2018 ஏப்பிறல் 01 தொடக்கம் 2023 திசெம்பர் 31 வரை செலுத்தவேண்டிய வரித்தொகை ரூ. 299,354,489 ஐ உரிய தினத்தில் செலுத்தியிராமை காரணமாக தாமத வட்டியாக ரூ. 40,869,072 நட்டத்தை சபையினால் ஏற்க நேரிட்டது.

(ஐ) 1990 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை சட்டத்தின் 24 வது பிரிவின் 4 வது உப பிரிவின்படி எதிர்பாராத சம்பவங்களின் காரணமாகத் தோன்றுகின்ற உரித்துக்கோரல்களுக்காக செலுத்துவதற்காக தமது தற்றுணிபின் பிரகாரம் ஈடுபடுத்தவேண்டிய ஒதுக்க நிதியமொன்று 2002 ஆம் ஆண்டிலிருந்து கட்டியெழுப்பப்பட்டிருந்ததோடு 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் அதன் மீதி ரூ. 498,536,253 ஆக விளங்கியது. அந்த நிதியம் பாவிக்கப்படவேண்டிய எதிர்பாராத சம்பவங்கள் பற்றி வரைவிலக்கணம் செய்து விதிமுறைகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை என்பதால் 2002 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரையான 21 வருட காலத்தில் இந்த நிதியம் பயன்படுத்தப்படவில்லை.

(ஒ) மூன்றாந்தரப்பு காப்புறுதி வருமானத்தில் நூற்றுக்கு 5 ஐ ஒதுக்கி மூன்றாந்தரப்பு மற்றும் ஏனைய பொதுக் காப்புறுதி அலுவல்களை மேம்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக்கொண்டு ஊக்குவிப்புப் படியைச் செலுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஊக்குவிப்புப் படி நிதியமொன்று கட்டியெழுப்பப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டில் நிதியத்திற்கான ஒதுக்கீடு ரூ. 17,672,531 ஆக அமைந்ததோடு 2023 திசெம்பர் 31 அந் திகதியில் மீதி ரூ. 30,686,023 ஆக விளங்கியது. 2022 ஆம் ஆண்டில் ரூ. 8,437,499 உம் 2023 ஆம் ஆண்டில் ரூ. 8,714, 577 உம் ஊக்குவிப்புப் படியாக செலுத்தப்பட்டிருந்ததோடு இந்த நிதியத்தை தாபிக்கவும் ஊக்குவிப்புப் படியைச் செலுத்துவதற்காகவும் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஓ) பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின்பேரில் ஊழியர்களுக்கு காப்புறுதிக் காப்பீட்டினை வழங்குவதற்காக ஊழியர் மருத்துவக் காப்புறுதி நிதியமொன்று கட்டியெழுப்பட்டதோடு 2023 ஆம் ஆண்டில் குழுமத்தின் பங்களிப்பு ரூ.3,519.800 மற்றும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதியத்தின் மீதி ரூ. 27,313,478 ஆகவும் அமைந்தது. இந்த நிதியத்தை தாபிப்பதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டி ருக்கவில்லை.

ஒப்பமிட்டது

டபிள்யு.பி.சீ.விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எனது இலக்கம் - ARC/C/FPS/1/23/41/FA 2024 யூன் 18 ஆந் திகதி

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள், பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஒப்பமிட்டது.

டபிள்யு.பி.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள் :- 1. செயலாளர் – கமத்தொழில் அமைச்சு

2. செயலாளர் – நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

எனது இலக்கம் - ARC/C/FPS/1/23/41/FA 2024 யூலை 04 ஆந் திகதி

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள், பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுகள்

1.1 மறுப்பு அபிப்பிராயம்

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் நிதிநிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான விபரமான வருமானக்கூற்று, உரிமைப் பங்குகளிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுக்கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள், பொழிப்பு தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் 1987 இன் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச்சட்டத்தினதும் 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழும் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் நிதிக்கூற்றுகள் பற்றிய எனது அபிப்பிராயத்தை தெரிவிக்கமாட்டேன். மறுப்பு அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கான அடிப்படை பகுதியில் ஆராயப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அத்திவாரத்தை வழங்க போதியளவிலானதும் உசிதமானதுமான சான்றுகளைப் பெற்றுக்கொள்ள என்னால் இயலாமல் போயிற்று.

1.2 மறுப்பு அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கான அடிப்படை

(அ) செயற்றிட்டத்தின் மொத்த சொத்துக்கள் ரூ. 2,202,748,150 மற்றும் மொத்த பொறுப்புக்கள் ரூ. 89,457,327,488 ஆக அமைந்தமையால் சொத்துக்களை விஞ்சிய பொறுப்புக்கள் ரூ. 87,254,579,339 ஆகவும், மொத்த நடைமுறை சொத்துக்கள் ரூ. 1,092,503,529 மற்றும் மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் ரூ. 2,527, 354,554 ஆகவும் அமைந்தமையால் நடைமுறை சொத்துக்களை விஞ்சிய நடைமுறை பொறுப்புக்கள் ரூ. 1,434,851,025 ஆகவும் அமைவதோடு திறைசேரியின் பங்களிப்பின்றி திட்டத்தைப் பேணிவர முடியாத நிலை காணப்படுவதால் செயற்றிட்டத்தின் இடையறாத வழிமுறை சிக்கல் நிறைந்ததாக அமைகின்றது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 88 வது பந்திக்கு முரணாக மீளாய்வாண்டில் கமக்காரர்களிடமிருந்து கிடைத்த தவணைப்பண வருமானம் மற்றும் முதலீட்டு வட்டியை உள்ளிட்டதாக கிடைத்த ரூ. 133,810,611 பணத்தொகை காலப்பகுதிக்கான வருமானமாக

கணக்குப்பதியப்படாமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்தமையால் அந்த அளவினால் இலாபம் குறைவடைந்திருந்தது.

(இ) சபையினால் திட்டம் சம்பந்தமாக செலுத்தப்பட்ட லு. 10,585,145 பணத்தொகை, காசுப் பாய்வாகவும் ரூ. 3,046,341,760 ஆக அமைந்த முந்திய ஆண்டுக்கான சீராக்கல்கள் தொழிற்பாட்டு மூலதனத்தின் காசுப் பாய்ந்து வந்தமையாகவும் சபைக்காக பேணிவரப்பட்டிருந்த நடைமுறைக் கணக்கில் ரூ. 470, 320 வித்தியாசம் இரண்டு தடவைகள் என்றவகையிலும் காசுப் பாய்வில் தவறாக சீராக்கப்பட்டிருந்தது. மேலும் புதிதாக நிதியத்தில் பங்கேற்ற கமக்காரர்களிடமிருந்து கிடைத்த ரூ. 20,730,787 கிடைத்த பணமும் காசுப் பாய்ந்து வருதலாக காசுப் பாய்வுக் கூற்றில் சீராக்கப்பட்டிராததோடு காசாக செலுத்தித்தீர்க்கப்பட்ட ரூ. 20,000,000 கடன் தவணை காசுப் பாய்வில் காசு பாய்ந்து செல்லலாக குறிப்புப் பதிந்தும் இருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிலன் இறுதியில் ரூ. 86,898,445,376 பெறுமதியான ஓய்வூதிய பொறுப்புக்கான ஆயுட்கணிப்பு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதால் திட்பநுடபத்தன்மை உறுதிசெய்யப்படவில்லை.

(உ) கமக்காரர்களின் சரியான உயிர்த் தரவுத் தகவல்களை இற்றைப்படுத்துவதற்கான முறையியலொன்று இல்லாமை காரணமாக இறந்த மற்றும் வேறு காரணங்களின்பேரில் உரிமை கோராத கமக்காரர்களின் ஓய்வூதியம் தொடர்ச்சியாக தபால் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2023 ஆம் ஆண்டில் கமக்காரர்களால் பெறப்படாததால் தபால் திணைக்களத்தினால் திருப்பி அனுப்பப்பட்டிருந்த ஓய்வூதியம் ரூ. 259,373,191 ஆக அமைந்ததோடு மீளாய்வாண்டின் இறுதியில் மேற்படி திணைக்களத்திடமிருந்து வருமதியான மீதி ரூ. 81,000,602 ஆக விளங்கியது. ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளாத கமக்காரர்கள் பற்றிய விபரங்களை பராமரித்து வந்திராததால் ஆண்டிறுதி மீதியினதும் கிடைத்த பணத்தினதும் திட்பநுட்பத்தன்மை உறுதியாகவில்லை.

மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு நிதிநிலைமை பற்றிய கூற்றில், விரிவான வருமானக் கூற்றில், உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்றில் அத்துடன் காசுப்பாய்வுக் கூற்றில் உள்ளடங்கிய கணியரீதியான உருப்படிகளளை மாற்று வழிமுறைகள் மூலமாக உறுதிசெய்யவோ உருப்படி சரிபார்க்கவோ என்னால் இயலாமல் போயிற்று. இதன் காரணமாக நிதிநிலைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று அத்துடன் காசுப்பாய்வுக் கூற்று தயாரிக்கப்படுகின்ற பெறுமதி அல்லது உருப்படிகளின் நிகழ்கால அறிக்கைசெய்யப்பட்ட அல்லது அறிக்கை செய்யப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக ஏதேனும் சீராக்கல்களை மேற்கொள்வது அவசியமா என்பதை என்னால் நிச்சயிக்க முடியாதுள்ளது.

1.3 **நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதலும் நியாயமானவகையில் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகள் இன்றி நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுவதற்கு ஏதுவாகும்பொருட்டு அவசியமான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் செயற்றிட்டத்தை இடையறாமல் பேணிவருவதற்கான இயலுமையை தீர்மானிக்க வேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் செயற்றிட்டத்தை ஒழிக்கக் கருதுமாயின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்திவிட செயலாற்றினாலேயன்றி தொடர்ந்து இயங்குகின்ற அடிப்படையில் கணக்குகளை பதிதலும் செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினரால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலச் செய்விக்கும் வகையில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி முறைப்படி பதிவேடுகளும் அறிக்கைகளும் பேணிவரப்படல் வேண்டும்.

1.4 **நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நடாத்தப்படுகின்ற கணக்காய்வினை அடிப்படையாகக்கொண்டு நிதியத்தின் நிதிக்கூற்றுகள் பற்றிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவது எனது பொறுப்பாகும். ஆயினும் மறுப்பு அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந்த நிதிக்கூற்றுகள் சம்பந்தமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அத்திவாரத்தை வழங்க போதியளவிலானதும் உசிதமானதுமான சான்றுகளைப் பெற்றுக்கொள்ள என்னால் இயலாமல் போயிற்று.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டம் சமர்ப்பித்த நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்ததாக அமைகின்றன.
- 2018 இன் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் 1.2.(இ) மற்றும் (உ) இல் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் தவிர்ந்ததாக என்னால் செய்யப்பட்ட விதப்புரைகள் சமரப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுகளில் உள்ளடங்கி இருக்கின்றன.

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் அமைந்தொழுகாமை

பின்வரும் அமைந்தொழுகாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

	சட்டதிட்டங்கள் /பணிப்புரைகளுக்கான தொடர்பு	**அவதானிப்புகள்**
(அ)	1987 இன் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம்	
	(i) உப பிரிவு 6 (i)	உதவுதொகை செலுத்துனர் தனது வயது 60 வருடங்களாகியவிடத்து ஓய்வூதியத்திற்கான உரிமையினைப் பெறவேண்டியிருப்பினும் அவ்விதமாக வயதினைப் பூர்த்திசெய்துள்ள கமக்காரர்களை இனங்கண்டு ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

	(ii) உப பிரிவு 12(இ)	செயற்றிட்டம் சம்பந்தமான உயிர்த்தரவுகளை உள்ளடக்கிய தகவல் முறைமையொன்றினை பேணிவந்திருந்தபோதிலும் இற்றைப்படுத்தி தரவுகளை உள்ளடக்கி இற்றைப்படுத்தாமையால் அவசியமான தொழிற்பாட்டு அறிக்கைகளை பெற்றுக்கொள்ள இயலாமல் போயிற்று.
	(iii) உப பிரிவு 12 (ஈ)	செயற்றிட்டம் தொடர்பான மதிப்பாய்வுகள், கணிப்பீடுகள் மற்றும் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தொழிற்பாட்டு விதிகளில் மாற்றங்களை எற்படுத்துதல் இடம்பெறவேண்டியிருப்பினும், கட்டியெழுப்பப்பட்ட சட்டம், வதிமுறை மற்றும் பிரமாணமின்றி உரித்துக்கோராத ஓய்வூதியத்தை மீளச்செலுத்துகையில் அரையாண்டுக்கு நூற்றுக்கு 3.32 வட்டி வீதம்தேறிய தவணைப் பணத்திற்கு மேலதிகமாக கணிப்பிடப்பட்டிருந்தது.
	(iv) பிரிவு 15 (1)	தொடர்ச்சியாக 5 தவணைகளை செலுத்தத் தவறியமை தொடர்பாக உதவுதொகை செலுத்துனர்களுக்கு சான்றிதழின்கீழான நன்மைகளை அற்றுப்பொகச் செய்விப்பதை உதவுதொகை செலுத்துனர்களை அறிவிப்பதற்கான அதிகாரம் சபைக்கு உள்ளபோதிலும் நன்மைபெறுகின்ற தரப்பினரால் 5 தவணைகளை செலுத்ததலை தவறவிடாவிட்டாலும் இடைக்கிடையே 5 தவணைகளுக்கான பணத்தை செலுத்தாத நன்மைபெறுனர்களும் ஒப்பந்தச் சான்றிதழை மீறியதாக கருதி ஓய்வூதிய நன்மை இழக்கச்செய்விக்கப்பட்டிருந்தது.
	(v) பிரிவு 27 (1)	விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரதும் நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரதும் இணக்கப்பாட்டின்பேரில் திட்டத்தினால் பெறப்படுகின்ற கடன் அளவு தீர்மானிக்கப்பட வேண்டியிருப்பினும் அவ்வாறான இணக்கம் பெறப்படாமல் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடமிருந்து இந்த செயற்றிட்டத்திற்கு ரூ. 290,800,755 கடன்தொகை பெறப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் சென்மதியான வட்டியையும் உள்ளிட்டதாக மொத்த கடன்மீதி ரூ. 518,782,124 ஆக விளங்கியது.
இ)	ஒப்பந்தச் சான்றிதழின் பிரிவு 6	ஒசெலுத்தவேண்டிய அரையாண்டு தவணைப்பணத்தின் நூற்றுக்கு 75 சதவீதம் கிடைத்திருப்பின் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான குறித்துரைத்த ஓய்வூதியத்தைப் பார்க்கிலும் குறைவான ஓய்வூதியத்தைப்பெற உதவுதொகை செலுத்துனருக்கு உரிமை இருக்கின்றபோதிலும் அதனைக் கவனத்திற்கொள்ளாமல் உதவுதொகை செலுத்துனர்களின் ஓய்வூதிய நன்மைகள் இல்லாதொழிக்கப்பட்டிருந்தது.

3.2 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

செயற்றிட்டத்துடன் தொடர்புடையதாக அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி கிடையாதென்பதோடு சபையின் மொத்த ஊழியர் சம்பளச் செலவிலும் ஏனைய நிருவாகச்ட செலவுகளிலும் நூற்றுக்கு 50 வீதப்படியான சதவீதம் திட்டத்திற்கான செலவாக பற்றுவைக்கப்பட்டிருந்தது. உரித்துக்கோராத ஓய்வூதியத்தை மீளஅழைப்பிக்கையில் நனமைபெறுனரிடமிருந்து கடைக்கின்ற ஒவ்வொரு தவணையிலிருந்தும் ரூ. 15 நிருவாகச் செலவாகவும் கமக்டாரர் முறைப்படி செலுத்திய ஒரு தவணைக்கு ரூ. 30 காப்புறுதிக் கட்டணமும் கமக்காரரருக்கு மீளச்செலுத்துகின்ற பணத்தில் ரூ. 150 உம் மீண்டும் காப்புறுதிக் கட்டணமாகவும் கழித்து கமக்காரருக்கு மீளச்செலுத்துகின்ற தொகை தீர்மானிக்கப்பட்டிருப்பினும் இதற்கான எந்தவிதமான விதிமுறையும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை

3.3 செயலாற்றுகை

(அ) செயற்றிட்டத்தில் பதிவுசெயதுள்ள 871,425 ஆக அமைந்த கமக்காரர்களில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் 61 வருடங்கள் முதல் 93 வருடங்கள் வரையான வயதான 474,803 கமக்காரர்கள் இருந்தபோதிலும் அதில் 264,227 பேருக்கு ஓய்வூதியம் செலுத்தப்படவில்லை. 2022 இல் 60 வருடங்களை பூர்த்திசெய்த ஓய்வூதியம் உரித்தாகவேண்டிய விண்ணப்பங்களை அனுப்பிவைத்திராத உதவுதொகை செலுத்துனர்களைத் தேடிக்கண்டுபிடித்து ஓய்வூதியத்தை வழங்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட/ உதவிப் பணிப்பாளர்களுக்கும் 2023 யூன் 23 இல் அனுப்பிவைக்கப்பட்ட 6/FPS/நிரு/2 இலக்கமுடைய கடிதம் மூலமாக அறிவித்திருந்தபோதிலும் 12 மாவட்டங்களில் மாதிரியொன்றை பரிசோதனைசெய்தபோது அதில் 06 இதன்படி செயலாற்றி இருக்கவில்லை.

(ஆ) தொடர்ச்சியாக 5 தவணைகளை தவறவிட்டுள்ளவிடத்து அது பற்றி அறிவித்து ஒப்பந்தச் சான்றிதழை முனைப்பாக்கக் கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படவில்லை என்பதால் உரிய வயது நிறைவடைந்த பின்னர் ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்த உதவுதொகை செலுத்துனர்களிடமிருந்து 2021 ஆம் ஆண்டில் 1127 பேருக்கும் 2022 இல் 226 உதவுதொகை செலுத்துனர்களுக்கும் மீளாய்வாண்டில் 715 பேருக்கும் ஓய்வூதியம் செலுத்தாமல் தேறிய தவணைப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

3.4 முகாமைத்துவ செயற்பாடுகள்.

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) தகவல் முறைமையொன்றுக்கான தரவுகளை சேகரிக்க 2017 ஆம் ஆண்டில் ரூ. 5,640,925 செலவவிட்டுள்ளபோதிலும் எதிர்பார்த்த தகவல்களை திரட்டாமையால் தகவல் முறைமை கட்டியெழுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் 2007 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலவிய குழும ஆயுட் காப்புறுதி நிதியமும் அதனோடு தொடர்புடையதாக முதலீடு செய்யப்பட்ட ரூ. 251,547,146 மீதியும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. செயற்றிட்டத்தின் பணத் தேவைக்காக 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் குழுமுக் காப்புறுதி நிதியத்திலிருந்து ரூ. 295,230,442 கடன்தொகை பெறப்பட்டிருந்ததோடு அதற்காக 2023 ஆம் ஆண்டுவரையான திரண்ட வட்டி ரூ. 422,547,571 ஆக விளங்கியது. மீளாய்வாண்டில் திட்டத்தின் நிருவாகச் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூ. 206,225,000 பணத்தொகையில் ரூ. 7,980,276 பணத்தொகையும் கமக்காரர்களிடமிருந்து கிடைத்த வருமானத்தில் ரூ. 20,000,000 பணத்தொகையையும் பிரயோகித்து கடன்தொகையில் ஒரு பகுதி செலுத்தித் தீர்க்கப்பட்டிருந்தது. இதன்படி ஆயுட் காப்புறுதி நிதியத்தின் முதலீடு கடன் தொகையாக மாற்றப்பட்டிருந்தது.

(இ) மாவிலாறு மடை மூடப்பட்டமையால் கமக்காரர்களுக்கு பயர்ச்சேத இழப்பீட்டினை செலுத்துவதற்காக 7 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட தொகை முந்திய வருடத்தில்

செலுத்தப்பட்டிருந்ததோடு இது சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு சட்டத்துறை தலைமை அதிபதியின் அறிவுறுத்தல்களுக்காக 2007 நவெம்பர் 30 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டிருந்ததோடு எந்தவிதமான தொடர்கண்காணிப்புகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆம் ஆண்டிலிருந்து உரித்துக் கோராத சென்மதியான ரூ. 4,254,932,613 மீதியிலிருந்து ரூ. 3,033,329,200 பணத்தொகை சம்பந்தப்பட்ட கமக்காரர்களுக்கு செலுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படாமல் ஓய்வூதிய நிதியத்திற்கு மாற்றப்பட்டமையால் நிதியத்தின் பாதகமான நிலைமை குறைவடைந்திருந்தது.

டபிள்யு.பி.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எனது இலக்கம் - ARC/C/FIPS/1/23/48/FA 2024 மே 27 ஆந் திகதி

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள், பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஒப்பமிட்டது.

டபிள்யு.பி.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள் :- 1. செயலாளர் – கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

2. செயலாளர் – நிதி அமைச்சு

3. செயலாளர் – நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

எனது இலக்கம்: ARI/C/FIPS/1/23/48/FA 2024 மே 27 ஆந் திகதி

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழிலாளர் ஒய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் நிதிநிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான விபரமான வருமானக்கூற்று, உரிமைப் பங்குகளிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுக்கூற்று மற்றும் கணியரீதியான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்புடைய தகவல்களையும் உள்ளிட்டதாக நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஒய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச்சட்டத்தினதும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக செயற்றிட்டத்தின் நிதிக்கூற்றுகள் ஊடாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியிலான நிதிநிலைமை, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிசார் செயற்பாடு மற்றும் காசுப்பாய்வு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 வது பந்திக்கு முரணாக முந்தி வருடத்திற்கான சீராக்கல் ரூ. 98,000 குறைத்தலையும் இறப்புப் பணிக்கொடை நிதியத்திற்காக ஒதுக்கிய ரூ. 1,746,720 பணத்தொகை சேர்த்தலையும் மேற்கொள்ள வேண்டியிருப்பினும் குறை குறைத்துக்காட்டியமையும் இறப்புப் பணிக்கொடை நிதியத்திலிருந்து மேற்கொண்ட ரூ. 173,000 வெளிப்படுத்தப்படாமையும் சென்மதியான இறப்புப் பணிக்கொடை மீதியின் வித்தியாசமான ரூ. 8,000 செயற்பாட்டு மூலதன மாற்றங்களில் சேர்த்தலாக உள்ளடக்கியமை காரணமாக காசுப் பாய்வுக் கூற்றில் தொழிற்காட்டுச் செயற்பாடுகள் ரூ. 3,410,440 ஆல் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இறப்புப் பணிக்கொடை நிதியக் கணக்கின் மீதியிலான வித்தியாசம் மற்றும் ஒதுக்கீடுகளின் கூட்டுத்தொகையான ரூ. 3,410,440 பணத்தொகை முதலீட்டுச் செயற்பாடுகளில் சேர்த்தமை காரணமாக மதலீட்டுக் காசுப்பாய்வு மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் ரூ. 5,532,349,026 அக அமைந்த ஓய்வூதியப் பொறுப்பிற்கான ஆயுட்கணிப்பு மதிப்பீடு 2007 அம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஓய்வூதியப் பொறுப்பு ரூ. 5,532,349,026 ஆக விளங்கியபோதிலும் அன்றைய தினத்திலான முதலீட்டுப் பெறுமதி ரூ. 793,308,692 அக அமைந்தமையால் இந்த கடப்பாட்டினைத் தீர்த்துவைக்க போதியளவிலான முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மூலமாக பணியாட்டொகுதி அங்கீகரிக்கப்பட்டிராத போதிலும் சம்பந்தப்பட்ட பணியுடன் நேரடியான தொடர்பற்ற இரண்ட உத்தியோகத்தர்களுக்காக செலுத்திய கூட்டத்தொகை ரூ. 1,332,218 ஆக அமைந்த சம்பளச் செலவினமாக கணக்குப்பதியப்பட்டிருந்தது.

(உ) செயற்றிட்டத்தின் மொத்த தேறிய சொத்துக்கள் தொடர்ச்சியாக எதிர்க்கணியப் பெறுமானம் பெற்றமையால் செயற்றிட்டத்தின் மொத்த சொத்துக்கள் தேறச் செய்விக்கப்பட்டும் மொத்த பொறுப்புகளை தீர்க்க முடியாமல் போனமையால் திட்டத்தின் இடையறாத வழியுரிமை கருத்துமுரண்பாட்டினை ஏற்படுத்துகின்றது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் தொடர்ந்தும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவை என்பதும் உசிதமானவை என்பதும் எனது கருத்தாகும்.

1.3 **நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதலும் நியாயமானவகையில் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகள் இன்றி நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுவதற்கு ஏதுவாகும்பொருட்டு அவசியமான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் செயற்றிட்டத்தை இடையறாமல் பேணிவருவதற்கான இயலுமையை தீர்மானிக்க வேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் செயற்றிட்டத்தை ஒழிக்கக் கருதுமாயின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்திவிட செயலாற்றினாலேயன்றி தொடர்ந்து இயங்குகின்ற அடிப்படையில் கணக்குகளை பதிதலும் செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்றிட்டத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினரால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலச் செய்விக்கும் வகையில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி முறைப்படி பதிவேடுகளும் அறிக்கைகளும் பேணிவரப்படல் வேண்டும்.

1.4 **நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்ந்த

மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதுமே கணியரீதியான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்கின்றதென்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடி அல்லது தவறு தனியாக அல்லது கூட்டாக தாக்கமேற்படுத்துவதால் கணியரீதியான பிறழ்கூற்றுக்கள் தோன்றக்கூடுமென்பதோடு அதன் கணியரீதியான தன்மை இந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்பவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானங்கள்மீது ஏற்படுகின்ற தாக்கங்களில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்பளிப்பு மற்றும் தொழில்சார் சந்தேகங்களைக் கொண்டதாக செயலாற்றப்பட்டது. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்கையில் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய கணியரீதியான பிறழ்கூற்றுகளின் அபாயநேர்வு இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உசிதமாக கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டன. தவறுதலாக காட்டப்படுதல் காரணமாக இடம்பெறுகின்ற கணியரீதியான பிறழ்கூற்றுகளினால் நேர்கின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியினால் ஏற்படக்கூடிய தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவது அவை மறைசூழ்ச்சியால், போலியாவணம் புனைதலால், கருத்தொன்றிய கைவிடல்களால் அல்லது உள்ளக கடப்பாடுகளை தவிர்த்தல் போன்ற எதுக்களால் இடம்பெறுவதாலாகும்.
- உள்ளக கட்டப்பாட்டின் விளைவாற்றல் பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடும் கருத்து இல்லாவிட்டாலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமான புரிந்துணர்வு பெறப்பட்டது.
- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக செயற்றிட்டத்தின் தொடர்ந்தியங்கும்தன்மை பற்றிய கணியரீதியான நிச்சயமற்றதன்மை நிலவுகின்றதா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும்தன்மை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதிலான ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சயமற்ற தன்மையை நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனஞ்செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அதனை வெளிப்படுத்துதல் போதியளவினதாக அமையாவிடின் எனது அபிப்பிராயம் மறுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் தொடர்ந்தியங்கும் தன்மை முற்றுப்பெற இயலும்.
- நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் உசிதமாக மற்றும் நியாயமானவகையில் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மற்றும் வெளிப்படுத்தல்களை உள்ளிட்டதாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணம் மதிப்பீடு செய்யப்பட்டது.

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கண்டுபிடித்தல்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் பிற விடயங்கள் பற்றி ஆளுந்தரப்பினர்களை விழிப்புணர்வூட்டுகிறேன்.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க திட்டம் சமர்ப்பித்த நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்ததாக அமைகின்றன.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க எனது அறிக்கையில் 1.2.(அ), (ஈ) பந்திகளில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முந்திய வருடத்தில் என்னால் செய்யப்பட்டுள்ள விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளன.

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் அமைந்தொழுகாமை

பின்வரும் அமைந்தொழுகாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

	சட்டதிட்டங்கள் /பணிப்புரைகளுக்கான தொடர்பு	**அவதானிப்புகள்**
(அ)	1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம்	
	(i) பிரிவு 5 (I)	வயது 18 வருடங்களுக்கும் வயது 59 வருடங்களுக்கும் இடைப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு சேர்ந்துகொள்வதற்கான தகைமைகள் இருந்தபோதிலும் 2018 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்திற்கு உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.
	(ii) பிரிவு 7	திட்டத்தில் பங்களிப்புச் செய்துள்ள கடற்றொழிலாளர்களுக்கு வயது 60 வருடங்கள் நிறைவடைகின்றபோதே ஓய்வூதியம் வழங்கப்படவேண்டியபோதிலும் 139 கடற்றொழிலாளர்களுக்காக ரூ. 4,159,063 மற்றும் 2022 மற்றும் 2023 ஆம்ஆண்டுகளில் ஓய்வூதியம் வழங்கப்பட்ட 45 கடற்றொழிலாளர்களுக்காக ரூ.1,378,518 என்றவகையிலான கூட்டுத்தொகை ரூ. 5,537, 581 நிலுவை ஓய்வூதியமாக நிதிக்கூற்றுகளில் எற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும் கடற்றொழிலாளர்களுக்கு செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
	(iii) பிரிவு 16	பங்களிப்புத் தொகைகளை சேகரிப்பதற்கான முறையியல் சபையினாலல் அறிமுகஞ்செய்யப்படவில்லை என்பதால் தொடர்ச்சியான பத்து தவணைகளை முறைப்படி செலுத்தாமையின் பேரில் உதவுதொகை செலத்துனரக்க நன்மைகள் அற்றுப்போதல் சம்பந்தமாக உதவுதொகை செலுத்துனர்களுக்கு விழிப்புணர்வூட்ட இயலாமல் போயிற்று.
	(iv) பிரிவு 20	செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான மதியுரைக்குழு தாபிக்கப்பட்டுள்ளபோதிலும் 2016 நவெம்பர் மாதத்தின் பின்னர் இற்றைவரை குழுக்கூட்டம் நடைபெறவில்லை.

(ஆ)	2023 சனவரி 27 ஆந் திகதிய 01/27 ஆம் இலக்கமுடைய வரவுசெலவு சுற்றறிக்கையின் (இ) (iii) பந்தி	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணியாட்டொகுதி அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைமுறையின்றி 4 உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியப் பிரிவின் பதில்க்கடமைப் படியாக ரூ. 557,736 செலுத்தப்பட்டிருந்தது.

3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

செயற்றிட்டத்தில் பங்களிப்புச் செய்துள்ள எண்ணிக்கையினர் 64,117 கடற்றொழிலாளர்களாக அமைந்துள்ளதோடு 2018 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்நவோர் உறுப்பினரும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கடற்றொழிலாளர்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் வயது 60 வருடங்களை கடந்து ஓய்வுபெறுகின்ற வயதினை அடைந்திருந்த 31,126 கடற்றொழிலாளர்களில் 24,187 பேருக்கு (ஒரே தடவையில் பங்களிப்புத் தொகையை செலுத்தி உறுப்பாண்மையைப் பெற்றுக்கொண்ட 5,549 பேரை உள்ளடக்கியதாக) ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

ஒப்பமிட்டது.

டபிள்யு.பி.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கைக ளுக்கான பதில்கள்

கமத்தொழில் காப்புறுதித் திட்டத்தின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள், பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1 நிதிக் கூற்றுகள்

1.1 அபிப்பிராயம்

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுகளுக்கான கருத்துரைகள்

1.2.1.1.1 கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

1.2.1.2 கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

1.2.2 சபையின் நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரைகள்

அ) பொது திறைசேரியால் நேரடியாக வழங்கப்படுகின்ற நிதியேற்பாடுகள் மாத்திரம் பொது திறைசேரியிடமிருந்து கிடைப்பனவாக காட்டப்பட்டுள்ளது. எனினும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய செயற்றிட்டத்திற்காக கடற்றொழில் திணைக்களத்திடமிருந்து கிடைக்கின்ற ரூ. 1,500,000 பணத்தொகை நேரடியாக சபைக்கு பொது திறைசேரியிடமிருந்து கிடைக்காமையால் பிற வருமானங்களில் காட்டப்பட்டுள்ளது.

ஆ) மஹியங்கனை, எம்பிலிபிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகிய உத்தியோகபூர்வ இல்லங்களின் காணிகளின் பெறுமதியையும் எம்பிலிபிட்டிய உத்தியோகபூர்வ இல்லத்தின் பெறுமதியை மதிப்பீடு செய்தல் சம்பந்தமாக இன்றளவில் மாவட்ட பிரதி /உதவிப் பணிப்பாளர்களுடன் கலந்துரையாடி அவசியமான அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, துரிதமாக மேற்படி பணிகளை நிறைவுசெய்து மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்குப்பதிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இ) விவசாய முகாமைத்துவ தகவல் முறைமை கமத்தொழில் அமைச்சின் தலைமையில் மேற்கொள்ளப்படுவதோடு, சம்பந்தப்பட்ட செலவுகள் கமத்தொழில் அமைச்சு ஊடாக செலவுமீளளிப்பு செய்யப்படுகின்றது. அதனோடு தொடர்புடைய அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் சரியாக கணக்குப் பதியப்பட்டுள்ளதோடு கணக்குக் குறிப்புகள் மூலமாகவும் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

ஈ) மாவட்ட அலுவலகங்களுக்கு ரூ 15,000/- பணத்தொகை ஒவ்வொரு மாவட்ட அலுவலகமும் குறைந்தபட்ச மீதியாக பேணிவரவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அலுவலகங்களில் இந்த ரூ 15,000/- பணத்தொகையை விஞ்சியுள்ள பணம் தலைமை அலுவலகத்தினால் மாவட்ட அலுவலகங்களின் செலவுகளுக்காக வழங்கப்பட்டுள்ள பணம் அல்லது மாவட்ட அலுவலகங்களால் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கவேண்டிய பணத்தின் பெறுமதியாகும்.

மாவட்ட அலுவலக வங்கிக் கணக்குகளில் நிலவுகின்ற சரியான மீதி நிதி நிலைமை பற்றிய கூற்றில் சரிவர இனங்காணப்பட்டுள்ளதென்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

உ) ஒருசில முகவர்கள் வங்கிகளில் பணத்தை வைப்புச்செய்தபோதிலும் சம்பந்தப்பட்ட வைப்பு பற்றுச்சீட்டுகள் மற்றும் தற்காலிக காப்பீட்டுப் பத்திரங்கள் தலைமை அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்படுதல் அடுத்துறும் மாதத்தின் முதலாவது அல்லது இரண்டாவது வாரத்திலேயே இடம்பெறுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட மாதத்தின் வைப்புக்களின் அளவு பற்றி மாவட்ட அலுவலகங்கள் இற்றைப்படுத்தப்படுவதில்லை. எனினும் நிதிப்பிரிவு மூலமாக மேற்படி பணம் வைப்புச்செய்த வங்கிக்கிணங்க ஒவ்வொரு மாவட்டமும் பெற்ற வருமானம் இற்றைப்படுத்தப்படும். அதன்படி, சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலகங்களும் அத்துடன் இற்றைப்படுத்தப்படுவதோடு, நிதிப் பிரிவினால் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் ஒவ்வொரு மாவட்டமும் ஈட்டிய வருமானம் காட்டப்படுவதோடு, அதற்கிணங்க தரகுத் தொகை கணிப்பிடல் இடம்பெறும்.

ஊ) மாவட்ட அலுவலகங்களால் அறவிடப்படுகின்ற தவணைப்பணம் சம்பந்தப்பட்ட மாதத்திலேயே தலைமை அலுவலக கணக்கிற்கு செயற்றிட்டத்திற்கிணங்க வைப்புச்செய்யப்பட வேண்டுமென அவசியமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அத்தகைய நிலைமைகள் தோன்றுவதை தடுக்க நடவடிக்கை எடுப்பதாக சுட்டிக்காட்டுகிறேன்.

எ)

I,II கணக்காய்வு ஐயவினாவில் காட்டப்பட்டுள்ளவாறு காசாக கிடைத்த வட்டி, கடன் மீளக் கிடைத்தமை, ஊழியர் மருத்துவ உதவி நிதியக் கணக்கு, கமக்காரர் ஓய்வூதிய செயற்றிட்டத்தின் நிருவாகக் கணக்கிற்கான காசுக் கிடைப்பனவுகள் மற்றும் ஊழியர் மருத்துவ உதவி செயற்றிட்டத்திற்கான நன்மைகளை செலுத்துதலும் நிருவாகச் செலவுகளை ஏற்றலும் சம்பந்தப்பட்ட கணக்குகள் ஊடாக சரியாக மேற்கொள்ளப்பட்டு சீராக்கல்கள் செய்யப்பட்டு அந்த கணக்குகளில் நிலவுகின்ற தேறிய மீதிகள் மாத்திரம் காசுப் பாய்வுக் கூற்றில் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளில் காட்டப்பட்டுள்ளது. வருங்காலத்தில் காசுப் பாய்வுக் கூற்றுகள் சரியாக கணக்குப் பதியப்படுகின்ற தரநியமம் 07 இன் பிரகாரம் தயாரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. சமர்ப்பித்தலின்போது தோன்றுகின்ற கோளாறுகளை எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.2 சட்ட திட்ட கட்டளைகளுக்கான தொடர்பு

அ) i. ஆட்சேர்ப்பு நடைமுறைக்கிணங்க ஒவ்வொரு பிரிவிற்காகவும் பெயர் குறிக்கப்பட்டுள்ள உதவிப் பணிப்பாளர்களை போதியளவில் ஆட்சேர்ப்புசெய்ய அங்கீகாரம் கிடைக்காமை மற்றும் வெற்றிடமாகிய பதவிகளுக்காக தகைமைகளைக்கொண்ட விண்ணப்பதாரிகள் முன்வரவில்லை. ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் தகைமைகள் மற்றும்

சம்பந்தப்பட்ட பிரிவுகளில் சேவையாற்றுவதற்காக அவர்கள் கொண்டுள்ள துறைசார்ந்த அறிவினை பரிசீலனைசெய்து குறுகிய பயிற்சியின் பின்னர் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை தலைமை அலுவலகத்தின் ஏற்புடைய பிரிவுகளுக்கு இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ii) 5.2.1 உப பிரிவு (அ)

சபைக்கு நிரந்தர பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக அங்கீகாரம் கிடைத்திராதிருந்த காலகட்டத்தில் சபையின் அலுவல்களை மேற்கொண்டு வருவதற்காக ஏற்புடைய பயிற்சியடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதோடு மேற்படி உத்தியோகத்தர்களால் சபையின் அலுவல்களை வினைத்திறன் கொண்டதாக மேற்கொள்வதற்காக பாரிய பங்களிப்பு வழங்கப்பட்டது. அமய அடிப்படையில் செயலாற்றி வருகின்ற முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் பதவிக்கு அவசியமான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துகொள்ளுமாறு ஊக்குவிக்கப்பட்டுள்ளதோடு வருங்காலத்தில் மேற்படி உத்தியோகத்தர்கள் ஏற்புடைய தகைமைகளை நிறைவுசெய்ததன் பின்னர் முகாமைத்துவ உதவியாளர் பதவியில் நிரந்தரமாக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை தயவுடன் அறிவிக்கிறேன்.

ஆ) நி.பி. 381 - சபையினால் கடமைக் கணக்குகள் ஆரம்பிக்கப்படுகையில் பணிப்பாளர் சபைக்கு சபைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அங்கீகாரம் பெறப்படுகின்றது.

நி.பி. 395 – சபையினால் பேணி வரப்படுகின்ற கணக்குகளுக்கான வங்கி இணக்கக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளவென்பதை சுட்டிக்காட்டுகின்றேன்.

இ) i) சபையில் வெற்றிடங்கள் நிலவிய பதவிகளை பூர்த்திசெய்ய இயலாமல் போனமையால் பதிற்கடமை பதவிகள் மூலமாக நாடளாவியரீதியில் இருக்கின்ற கமக்காரர்களுக்காக கடமைகளையும் பொறுப்புகளையும் ஈடேற்றுவதற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற சேவைகளை இடையறாமல் பேணிவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எதிர்காலத்தில் இந்த நிலைமையை சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ii) சபை உத்தியோகத்தர்களின் லீவு சம்பந்தமாக செயலாற்றுகையில் இடைக்கிடையே பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல் கடிதங்களுக்கிணங்க லீவு கணிக்கப்பட்டு வருவதோடு தாபனவிதிக்கோவையில் அடங்கிய அனைத்து பந்திகளும் நிபந்தனைகளும் அவ்வண்ணமே சபை உத்தியோகத்தர்களின் லீவு தொடர்பில் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படுவதில்லை.

அதன்படி அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளரால் (நிருவாகம் II) பணிப்பாளர் நாயகத்தின் இந்நாட்டில் கழித்த காலத்திற்கான லீவு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஈ) இன்றளவில் 02 பதில் கடமைகளுக்காக நிரந்தர ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு ஏனைய வெற்றிடமாகியுள்ள பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான அங்கீகாரம்

கோரப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்த பின்னர் வெற்றிடம் நிலவுகின்ற பதவிகளுக்கான ஆட்சேர்ப்பிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

உ) i) கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை 1990 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை சட்டத்தின் கீழேயே இயங்கி வருகின்றது. மேற்சொன்ன பாராளுமன்ற சட்டத்தின் பிரகாரம் சபையின் இடையறாத வழியுரிமைக்கான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான முறையான அதிகாரம் பணிப்பாளர் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதன்படி சட்டத்தின் தத்துவங்களின் பிரகாரம் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள முடிவுகளுக்கு சுற்றிக்கைகள் மூலமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயமொன்று கடைப்பிடிக்கப்படவேண்டுமென கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமையால் சம்பந்தப்பட்ட சுற்றிக்கை வெளியிடப்பட்டுள்ள நிறுவனத்திலிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 2019/05/10 ஆந் திகதிய 3/1/8/1 இலக்கமுடைய கடிதம் மூலமாக வரிசை அமைச்சின் செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதென்பதை அறிவிக்கிறேன்.

ii)) PED 1/2015 இலக்கமும் 2015.05.25 திகதியும்கொண்ட சுற்றிக்கையின் 3.9 பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு சம்பளமற்ற லீவு பெற்றுள்ள உத்தியோகத்தரொருவர் பணிப்பாளர் சபையின் விசேட அங்கீகாரமின்றி போக்குவரத்துப் படியினைப் பெற்றுக்கொள்ளல், உத்தியோகபூர்வ வாகனத்தைப் பாவித்தல் அல்லது சாரதியின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை இல்லாவிடினும் உத்தியோகத்தரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நோய் நிலைமை காரணமாக ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலமாக சம்பளமற்ற லீவு பெற்றிருக்கின்ற உத்தியோகத்தரொருவருக்கு மேற்படி வசதியைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை இருக்கின்றதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பணிப்பாளர் நாயகம் 2022.12.25 தொடக்கம் 2022.12.31 வரையான காலப்பகுதிக்காக சம்பளமற்ற லீவு பெற்று வெளிநாடு சென்றுள்ளதோடு அங்கு ஏற்பட்ட நோய் நிலைமை காரணமாக திட்டமிடப்பட்ட நாளான (2022.12.31) இல் திரும்பிவர இயலாமல் போயுள்ளதோடு 2023.01.30 வரையான காலப்பகுதிக்குள் வெளிநாட்டில் இருந்துள்ளார். அதன்படி உத்தியோகத்தரின் கட்டுப்பாட்டினை மீறி தோன்றியுள்ள இந்த நிலைமையின்பேரில் கழித்த சம்பளமற்ற லீவுக்காலமான 2022.12.31 ஆந் திகதி தொடக்கம் 2023.01.31 வரையான காலப்பகுதிக்குள் வாகனத்தையும் சாரதியையும் போக்குவரத்துப் படியையும் பெற்றுள்ளார்.

ஊ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 421 ஆக விளங்கியபோதிலும் நீண்டகாலமாக இந்த வெற்றிடங்கள் பூர்த்திசெய்யப்படாமையால் ஊழியர் பற்றாக்குறை சபையில் தோன்றியுள்ளது. அண்மைக்காலமாக சபையினால் கணிசமான எண்ணிக்கைகொண்ட கருத்திட்டங்கள் கடமைப்பணிகள் வெகுவாக அதிகரித்துள்ளன. குறிப்பாக புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்கான சேர்த்துக்கொள்ளல் தொடங்கப்பட்டு நாடளாவியரீதியில் பிரபல்யப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் சபையின் தீவிரமான அவசியப்பாடாக நிலவிய ERP முறைமை சபையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்துடன் புதிய பயிற்சி நிலையம், AIMS முறைமை, காப்புறுதி மேம்பாட்டு அலுவல்கள், 4000 இற்கு

மேற்பட்ட அஞ்சல் நிலையங்கள், அனைத்துப் பிரதேச செயலகங்கள், கால்நடைக் காப்புறுதி செயற்றிட்டத்துடன் தொடர்புடையதாக விலங்கினக் காப்புறுதிக் கருத்திட்டத்தை ஆரம்பித்தல், புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை, நடவடிக்கை முறையை தாயாரித்தல் போன்ற கருத்திட்டங்களை தயாரித்து இன்றளவில் அமுலாக்கப்பட்டு வருகின்றது.

அதனால் சம்பந்தப்பட்ட வெற்றிடங்களை பூர்த்திசெய்யும்வரை அனுபவம் வாய்ந்த இந்த உத்தியோகத்தர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்த அடிப்படையில் அபிவிருத்தி உத்தியோகதர்களும் முகாமைத்துவ உத்தியோகத்தர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக 531/18 பணிப்பாளர் சபைப் பத்திரம் மூலமாக அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இன்றளவில் புதிய ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்காக தொடர்புடைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு எதிர்காலத்தில் அங்கீகாரம் கிடைத்தபின்னர் புதிய ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். பின்னர் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் சேவையை முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறிவிக்கிறேன்.

எ) இந்த கருத்திட்டம் உள்ளடங்கிய GIZ நிறுவனத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான பிரதான உடன்படிக்கை 2019 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டுள்ளதோடு அதனை உள்ளடக்கிய SME Sector Develop இற்காக ஒதுக்கப்பட்டுள்ள 3.5 மில்லியன் யுறோ பணத்தொகை மூலமாக இந்த கருத்திட்டத்திற்காக 262,606.47 யுறோ ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஊடாக இலங்கை அரசாங்கத்திற்கும் GIZ நிறுவனத்திற்கும் இடையில் முழுமையான இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ள நிதியேற்பாடு 11 மில்லியன் யுறோவாகும். அதற்காக இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அப்போதைய நிதியமைச்சின் செயலாளரால் கையொப்பமிடப்பட்டுள்ளது.

ஏ) i) காணிப் பதிவேட்டின் தகவல்களின்படி கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களாலேயே பரிசீலிக்கப்படல் வேண்டும். சபை உத்தியோகத்தர்களால் அதனை புரிவதற்கான இயலுமை கிடையாது. அதனால் கிடைக்கின்ற தகவல்களை சரியானவையாகக் கருதி சபை எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.
ii.) பயிர்ச்சேதம் அறிவிக்கப்பட்ட வேளையிலேயே உத்தியோகபூர்வ முத்திரை பதித்து விண்ணப்பப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட வேண்டியிருப்பினும் கமநல சேவைகள் திணைக்களத்தினால் அது மேற்கொள்ளப்பட்டிராவினும் அது அந்த நிறுவனத்தின் பணியாகும். அந்த பணியில் சபை உத்தியோகத்தர்களால் இடையீடுசெய்ய முடியாவிடினும் அதனை கமக்காரனுக்கு இழப்பீட்டுத்தொகை விடுவிக்காதிருக்க காரணமாகக்கொள்ள முடியாதென்பதால் சபைக்கு கிடைக்கின்ற இழப்பீட்டுப் பதிவேடுகளுக்கான இழப்பீட்டினைக் கணித்தல் சபை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சேதத்தை அறிவித்த தினத்திலேயே சேதத்தை பரிசீலிப்பதற்காக மதிப்பீட்டுக் குழுவிடம் செல்லமுடியாது. கமக்காரர்கள் சிறிய சேதத்தின்போதும் சேதத்தை அறிவித்து நிலவுகின்ற பயிர்ச்செய்கையிலிருந்து விளைச்சலை அறுவடை செய்கின்றனர். சிறிய சேதத்திற்காக

இழப்பீடு உரித்தாகாத சந்தர்ப்பங்களில் மதிப்பீட்டுக் குழு விளைச்சல் அறுவடை செய்யப்பட்டுள்ளதெனக் குறிப்பிட்டுள்ளது. அறுவடை பெறப்பட்டிருப்பின் சேதமும் கிடையாது. மதிப்பீட்டுக் குழுவில் அரச உத்தியோகத்தர்கள் தொடர்புபடுகின்றவேளையில் ஒரே தடவையில் குழுவினை கூட்டிக்கொள்வதிலான நடைமுறைச் சிக்கல்களும் நிலவுகின்றன. பயிச்சேதத்தை அறிவிக்கையில் சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் அனைத்து தகவல்களையும் பூர்த்திசெய்யுமாறு கமக்காரர்களுக்கு சம்பந்தப்பட்ட கூட்டங்களில் வாய்மொழிரீதியாக விழிப்புணர்வூட்டப்படுவதோடு சுற்றிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கமக்காரர்களிடமிருந்து பூர்த்திசெய்யப்பட்ட பயிர்க்காப்புறுதி விண்ணப்பப் பத்திரங்களை வரவழத்துக்கொள்வது கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்களின் பொறுப்பாக அமைவதோடு எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

iii) நிலவுகின்ற நடைமுறை நிலைமைகளின்பேரிலும் உத்தியோகத்தர்களின் கடமைப்பழு காரணமாகவும் அத்தகைய தாமதங்கள் இடம்பெறுவதோடு கமநல சேவைகள் நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி சம்பந்தப்பட்ட தாமதங்களை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

iv) நிலவுகின்ற நடைமுறை நிலைமைகளின் பேரிலும் உத்தியோகத்தர்களின் கடமைப் பழு காரணமாகவும் இவ்வாறான தாமதங்கள் இடம்பெறுவதோடு கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி சம்பந்தப்பட்ட தாமதங்களை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக சுட்டிக்காட்டுகிறேன். சபையில் உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுவதாலும் வேறு காப்புறுதிகளின்கீழ் காப்புறுதிச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாலும் இவ்விதமான காலதாமதம் ஏற்பட்டுள்ளது. அதைப்போலவே எதிர்பாராதவகையில் இயற்கை அனர்த்தங்கள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளமையாலும் இழப்பீட்டுத் தொகைகளை விடுவிப்பதிலான தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. எவ்வாறாயினும் எதிர்வரும் போகங்களில் தாமதமின்றி இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

v) பயிர்ச்சேத மதிப்பீட்டுக்குழுவில் மூவர் இல்லாவிட்டால் இழப்பீட்டுத்தொகைகள் விடுவித்தல் இடம்பெறமாட்டாது. எவ்வாறாயினும் மீண்டும் மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். மதிப்பீட்டுக் குழுவில் அரச உத்தியோகத்தர்கள் தொடர்புபடுகின்ற சந்தர்ப்பங்களில் ஒரேதடவையில் குழுவைக் கூடச்செய்வதிலான நடைமுறைச் சிக்கல்கள் நிலவுகின்றன. எவ்வாறாயினும் பயிர்ச்சேத மேற்பார்வை நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் ஒன்றாக பயிர்ச்சேதங்களை பரிசீலனை செய்வதற்காக பங்கேற்றல் தொடர்பாக கமநல சேவைகள் ஆணையாளர் ஊடாக அறிவுறுத்தல்களை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

vi.) மாவட்ட அலுவலகங்களில் நிலவிய உத்தியோகத்தர் பற்றாக்குறை மற்றும் உத்தியோகத்தர்களின் கடமைப்பழு அதற்கான காரணமாக அமைந்துள்ளதோடு

எதிர்காலத்தில் வழங்கப்படுகின்ற பயிர்க் காப்புறுதிப் பத்திரத்திற்காக திடீர் விபத்து காப்புறுதிப் பத்திரத்தையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐ i) வெளிக்கள கடமைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களின் மேற்படி தினத்தில் கடமைப்பணிகளை புரிகின்ற துறைகளை குறிப்பிட்டு அலுவலகத்தின் White Board இல் பொதுமக்களின் தகவலுக்காக காட்சிப்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டது.

ii) மாவட்ட அலுவலகங்களில் உத்தியோகத்தர்களின் வெளிக்களக் கடமைகள் பற்றிய குறிப்புகளைப் பதிவதற்காக லொக் (சம்பவக் குறிப்பேடு) குறிப்புப் புத்தகமொன்று பேணிவரப்படுகின்றது.

ஐ) சபையினால் இன்றளவில் நிலவுகின்ற தகவல்கள் கொம்ன்ட்றோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதோடு அநுராதபுரம், மஹியங்கனை, எம்பிலிபிட்டிய ஆகிய மாவட்ட அலுவலகங்களின் ஏற்புடைய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு சம்பந்தப்பட்ட சரியான அறிக்கைகள் பெறப்பட்டபின்னர் ஏற்புடைய தகவல்கள் கொம்ன்ட்றோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒ) சம்பந்தப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயலாற்றுவதற்காக மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதோடு சபையின் ERP முறைமை தாபிக்கப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட அறிக்கைகளை சரியாகப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை நிலவுகின்றதென்பதை மேலும் அறிவிக்கிறேன்.

2.3.3 தத்துவங்கள், கடமைகள், பணிகள் – அவதானிப்புகள்

7 (அ) உப பிரிவு

செலுத்துதல் நிராகரிக்கப்பட்ட கமக்காரர்களுக்காக திருத்திய பதிவேடுகளை தயாரித்து அனுப்புமாறு கமநல சேவைகள் நிலையங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளதோடு அவ்விதமாக கிடைத்த திருத்திய பதிவேடுகளுக்கான கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. இழப்பீட்டுத் தொகைகளை மீளக்கோராத கமக்காரர்களின் மேற்சொன்ன ரூ. 70,800,200/- பணத்தொகை தொடர்ச்சியாக கமக்காரர்களால் உரித்துக்கோரப்படாததால் கமத்தொழில் காப்புறுதி நிதியத்திற்கு மாற்றுவதற்காக பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டதோடு, மேற்படி பணத்தொகை விவசாய தரவு முகாமைத்துவ முறைமையை உருவாக்குவதற்காக வழங்குவதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது. எனினும் மேற்படி பணம் அந்த நோக்கத்திற்காக பாவிக்கப்படாமையால் மீண்டும் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பித்து எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

2.2.4 அ.) தொழில்நுட்ப விடயங்களின்பேரில் தொழில்நுட்பக் குழுவினால் மேற்படி கேட்புவிலையை சமர்ப்பிப்பதற்கான பெறுகை செயற்பாங்கிற்கு போதுமானதல்ல என்பதை

தீர்மானித்தமையின்பேரில் மீண்டும் கேட்புவிலை கோரல் இடம்பெற்றதோடு அந்த செலவுகளை பயனற்ற செலவுகளென பொருள்விளக்கம் கொடுக்க முடியாது. பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட அனைத்து அவசியப்பாடுகளும் மேற்படி பெறுகையில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதோடு அதற்காக கேட்புவிலையைக் கொள்வனவுசெய்த நிறுவனம் கேட்புவிலையை முன்வைக்காமை அல்லது முன்வைக்கப்பட்ட கேட்புவிலைப் பதிவேடு உள்ளடங்கிய தொழில்நுட்ப நடைமுறைச்சாத்தியத்தன்மை போதுமானதாக அமையாததால் இது இடம்பெற்றுள்ளது.

ஆ.) பெறுகை அலுவல்களுக்கான விசேட ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்வதற்காக ERP முறைமையுடன் தொடர்புடைய வன்பொருட்கள் பற்றிய முந்திய கேட்புவிலை சந்திப்புக் கலந்துரையாடல்களில் விரிவாக கலந்துரையாடப்பட்டதோடு, எந்தவொரு ERP முறைமையையும் தயாரிப்பதற்கான குறைந்தபட்ச அவசியப்பாடுகள் நிலவுகின்ற வன்பொருளின்பேரில் செயலாற்ற முடியுமென்பதோடு இது Web Base ஊடாக அதற்கான அவர்களின் கேட்புவிலைகளுடன் குறைந்தபட்சம் வன்பொருள்களில் நிலவவேண்டிய அவசியப்பாடுகள் பற்றி குறிப்புப் பதியவேண்டுமென்பதே அதன்போது வருகைதந்திருந்த அனைவரதும் கருத்தாக அமைந்தது.

மேலும், சம்பந்தப்பட்ட வருடத்தில் கணினி துணைச்சாதனங்களின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகையுடன் செயலாற்ற வேண்டுமென்பதால் அதற்காக GIZ நிறுவனம் மூலமாக வன்பொருள்களுக்காக நிதியங்கள் ஒதுக்கப்படாதுள்ளமையால் இந்த அலுவல்கள் நிதியம் 02 மூலமாக பெறுகைசெய்யப்பட வேண்டுமென்பதும் அதற்காக பொருத்தமான அளவுருக்கள் சபையின் அவசியப்பாடுகளை கருத்திற்கொண்டு செயலாற்ற வாய்ப்பு வழங்கவேண்டுமென்பதால் ERP முறைமையைத் தயாரிக்கின்ற நிறுவனங்கள் ஊடாக இந்த சாதாரணமான கணினி வன்பொருள்களைக் கொள்வனவு செய்தல் தொழில்நுட்ப மற்றும் நிதிசார்ரீதியில் பாதகமானதாக அமையக்கூடுமென்பதால் பெறுகை ஆவணங்களில் மேலதிகமாக குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களாக இந்த வன்பொருளைக் கொள்வனவுசெய்தல் தனிவேறான பெறுகை நடைமுறையூடாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதால் தொழில்நுட்பக் குழுவின் விதப்புரையின் பேரில் பெறுகைக் குழுவின் அங்கீகாரத்துடன் அதனை மேற்கொள்வதற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

சபையின் பெறுகைத் தவிசாளர் 02 சந்தர்ப்பங்களில் மேற்படி பெறுகை மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதிக்குள் மாற்றமடைந்ததோடு அதற்காக மீண்டும் வரிசை அமைச்சின் செயலாளர் அல்லது பெறுகைத் தவிசாளர் பதவிக்காக உத்தியோகத்தரொருவரை பெயர்குறிக்கும்வரை இந்த பணியை முன்னெடுத்துச் செல்லத் தவறியமையின் பேரில் திணைக்களப் பெறுகையின்போது செயலாற்றக்கூடிய குறைந்தபட்ச காலப்பகுதிக்குள் இந்த பெறுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சபையின் பெறுகைத் தவிசாளர் மாற்றமடைந்ததன்பேரில் இந்த பெறுகையில் குறைந்தபட்ச காலத்தில் செயலாற்றியுள்ளார்.

இ.) இணையான தன்மைகொண்ட ERP System இற்காக புள்ளிகள் வழங்கப்படுகின்ற அளவுகோல்களை பரிசீலனை செய்கையில் அனைத்து மொடியூல்களையும் அபிவிருத்தி செய்யக்கூடிய மற்றும் அபிவிருத்தி செய்துள்ள நிறுவனங்களுக்கு வாய்ப்பினை வழங்குவதன் மூலமாக நிறுவனத்திற்கு அதிகளவான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்விதமாக செயலாற்றப்பட்டுள்ளது.

இ) தொழில்நுட்ப முன்மொழிவுகளை மதிப்பீடுசெய்கையில் நிதிசார் முன்மொழிவுகளை திறக்காதிருந்ததோடு தொழில்நுட்ப முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தபின்னர் தகைமைபெற்ற இரண்டு நிறுவனங்களின் முன்னிலையில் நிதிசார் முன்மொழிவுகள் திறக்கப்பட்டன. அதன்போது பெறுகை பதிவேடுகளில் 10 வருடங்கள் வரையான மேலதிக தகவல்களாக உட்புகுத்தவேண்டிய உருப்படிகளை நடைமுறைசார்ந்ததாக கேட்புவிலை சமர்ப்பித்துள்ள நிறுவனங்கள் மூலமாக அதிகபட்சமாக 5 வருடங்கள் மாத்திரம் அடிப்படையாகக்கொண்டு தயாரிக்க முடியுமென கேட்புவிலைக்கு முற்பட்ட கலந்துரையாடல்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப முன்மொழிவுகள் பெறப்பட்ட தகைமைபெற்ற நிறுவனங்களின் நிதிசார் முன்மொழிவுகள் பகுப்பாய்வின்போது இது ஏற்படையதாக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

ஈ) புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மூலமாக இந்த அளவுகோல்கள் தயாரிக்கப்படுகையில் மிகவும் இலாபகரமானதும் விளைவாற்றல் மிக்கதுமான மதிப்பீடுகள் அமுலாக்கப்பட்டுள்ளதோடு குறைந்தபட்சம் எமது பெறுகை செயற்பாங்கிற்காக முன்வருகின்ற நிறுவனங்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இது 30 – 50, 51 – 80, 80 என்றவகையில் காட்டப்பட்டுள்ளதோடு அதனூடாக குறைந்தபட்ச பெறுகைகளை மேற்கொண்டுள்ள நிறுவனங்களும் இந்த பெறுகைக்காக முன்வரக்கூடிய இயலுமை உள்ளதென்பதை அறிவிக்க இது பாவிக்கப்பட்டுள்ளது.

உ) உடன்படிக்கை காலத்தை நீடித்துக்கொள்ள இன்றளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஊ) கருத்திட்டம் ஊடாக எதிர்பார்த்த ERP முறைமை இன்றளவில் சபையில் இயங்கும் நிலையில் நிலவுகின்றதென்பதை சுட்டிக்காட்டுகிறேன். 2022.12.01 ஆந் திகதியளவில் சம்பந்தப்பட்ட தடைகளை நிறைவுசெய்துள்ள செலுத்துதல்களை மாத்திரம் மேற்கொண்டுள்ளதோடு 10% பிடித்துவைத்தல் பணத்தொகை மாத்திரம் இன்னமும் GIZ கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள கணக்கில் மீதியாக நிலவுகின்றது.

எ.) இது பெறுகைச் சபைக்கு வெளிவாரி நிறுவனமிடமிருந்து பெறப்பட்ட கொடையாக அமைவதோடு சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள் மூன்று வருடகால பெறுகைத் திட்டத்தை தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனம் மூலமாக நிதியங்களை வழங்குதல் பற்றிய திட்டவட்டமான உறுதிப்படுத்துதல் கிடைக்கவில்லை என்பதால் இந்த பெறுகைக் கிடைப்பனவுகள் பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறேன். கருத்திட்டத்தின் தொடக்கம் 2019/07/22 ஆந் திகதிய 499/03 ஆம்

இலக்கமுடைய பணிப்பாளர் சபைப் பத்திரம் மூலமாக அங்கீகாரம் பெறப்பட்டு இந்த அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.3 ஏனைய விடயங்கள்

அ) அநுராதபுரம் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் மேற்பார்வைப் பணிகளின்கீழ் சபை உத்தியோகத்தர்களுக்கான விடுமுறைகால விடுதியொன்றை நிர்மாணிக்க அவசியமான நடவடிக்கைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆ.) 2017/ 07 சுற்றிக்கை கமத்தொழில் அமைச்சு செயலாளரால் சில நிறுவனங்களுக்காக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையாகும். அதில் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள பிரதானமான காரணமாக அமைவது சபைக்கு கிடைக்கின்ற பயிர்ச்சேத இழப்பீட்டுப் பதிவேடுகளுக்காக இழப்பீட்டு கணிப்பீட்டு இணக்கஞ்செய்தலும் இழப்பீட்டுத் தொகைகளை விடுவித்தலுமாகும்.

கமக்காரர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான நடவடிக்கைகள் கமக்காரர்களுடன் மிகவும் நெருக்கமான கமநல சேவைகள் நிலையத்தினாலேயே மேற்கொள்ளப்படல் வேண்டியுள்ளது. பதில்களை அந்த நிறுவனத்திடமிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். ஆயினும் இயலுமான ஒவ்வொரு தருணத்திலும் சபை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எதிர்காலத்திலும் அவ்வாறு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இ) மாவட்டத்தில் போகத்துடன் தொடர்புடைய அனைத்து இறுதி அறிக்கைகள் அதாவது கமக்காரர்களின் பெயர்கள், ஏக்கரளவு, இழப்பீட்டுத்தொகை அமைச்சிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரே தடவையில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதால் அவ்விதமாக பணம் விடுவிக்கப்படுவதோடு இடைக்கிடையே செலுத்துதல் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில் இழப்பீட்டுத்தொகை தாமதமாகின்ற கமக்காரர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கின்ற காரணத்தினாலும் அவ்வவாறு செய்யப்படுகின்றது.

ஈ) இழப்பீடு கணிக்கின்ற உத்தியோகத்தர்களால் பூர்த்திசெய்யப்படவேண்டிய பகுதிகள் பூர்த்திசெய்யப்பட்டபோதிலும் ஒருசில சந்தர்ப்பங்களில் கையொப்பமிடுதல் தவறவிடப்பட்டுள்ளது. மீண்டும் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இன்றளவில் இந்த பலவீனங்களை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

உ) பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தங்கள், காப்பீடு வழங்கப்பட்டுள்ள ஏனைய பயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதங்கள் பற்றிய தகவல்களை திரட்டுதல் மற்றும் சபையினால் பயிர்ச்சேதம் உறுதிசெய்யப்படுதல் ஆகிய அலுவல்கள் AIMS தரவு முறைமையில் Damage Reporting, Crop Monitoring மற்றும் Map Engine மொடியூல் பாவனை மூலமாக மேற்கொள்ளப்படுவதற்கான இயலுமை ஏற்கெனவே நிலவுகின்றது.

திடீர்விபத்து காப்புறுதிக் காப்பீடு பெறுகின்ற கமக்காரர்களின் வாழ்க்கைக்கு ஏற்படுகின்ற அனர்த்தங்கள் மற்றும் ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றிய தகவல்களை திரட்டுதல், இழப்பீட்டுத் தொகைகளை வங்கியில் வைப்புச் செய்தல் ஆகிய அலுவல்கள் தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்ற ERP முறைமை மூலமாக எதிர்காலத்தில் உள்ளடக்கப்படும். திடீர்விபத்து காப்புறுதிக் காப்பீடுகள் மற்றும் ஓய்வூதியம் போன்ற கமக்காரர்களுக்கு வழங்கப்படுகின்ற நன்மைகள் பற்றி கமக்காரர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக சபையினால் தயாரிக்கப்பட்ட sms gateway முறைமை இன்றளவில் அமுலில் இருக்கின்றது.

பயிர்செய்கைக் காணிகள் பற்றிய தரவுகள் (காணியின் பெயர், காணி இலக்கம், அதன் தேசப்படம் மற்றும் புகைப்படம்) மற்றும் கமக்காரர்களின் உயிர்த்தரவுகளை உள்ளடக்கி ஒவ்வொரு கமக்காரருக்குமான தனித்தனியான தோற்றப்பாடுகளை (profile) பேணிவருதல் AIMS முறைமை ஊடாக மேற்கொள்ளப்படுவதற்கான இயலுமை ஏற்கெனவே மேற்படி முறைமையிடம் நிலவுவதோடு அந்த தரவுகளை உள்ளடக்கிய தரவு முறைமையொன்று AIMS முறைமையின்கீழ் சபையினால் ஏற்கெனவே பேணிவரப்படுகின்றது.

ஊ) Geo Goviya தகவல் முறைமை மூலமாக சேகரிக்கப்படுகின்ற தரவுகளும் தகவல்களும் இந்த முறைமையில் உள்ளீடு செய்வதற்கான இயலுமை நிலவுகின்றது. இது பற்றி கமநல சேவைகள் திணைக்களத்துடன் பல்வேறு கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளபோதிலும் Geo Goviya ஊடாக சேகரிக்கப்படுகின்ற தரவுகள் ஏனைய நிறுவனங்களுடன் பரிமாற்றிக்கொள்ளப்படுகின்ற விதம் பற்றி திட்டமிடப்பட்ட முறையியல் இற்றைவரை கமநல சேவைகள் திணைக்களத்தினால் அறிமுகஞ் செய்யப்படவில்லை. விவசாயத்துடன் தொடர்புடைய பல நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் பயிர்ச்சேத மதிப்பீட்டுக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். அந்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பிரவேசிப்பதற்கான இயலுமையை வழங்கி கமத்தொழில் அமைச்சின்கீழ் AIMS முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக இதற்கு முன்னர் பூர்வாங்க மட்டத்தில் இடையறாமல் இடம்பெறவில்லை என்பதோடு அதற்கான நிதியேற்பாடுகளும் கிடைக்கவில்லை.

இழப்பீடு செலுத்துவதற்காக மாத்திரமன்றி ஒட்டுமொத்த விவசாயத் துறையுடனும் ஏற்புடைய தரவுகளும் தகவல்களும் ஓர் ஒருமுகப்படுத்தப்பட்ட முறைமையுடன் இணைப்பதற்கான அவசியப்பாடு நிலவியதோடு அது அமைச்சு மட்டத்தில் நிலவவேண்டிய நடவடிக்கையாகும். கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் பேணிவரப்படுகின்ற இந்த தகவல் முறைமையின் தகவல்களை AIMS முறைமையுடன் இணைத்து சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இன்றளவில் பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை அறிவிக்கிறேன்.

எ) சபையின் செயற்பாடுகள் பற்றி நன்மைபெறுனர்களை விழிப்புணர்வூட்டுகையில் அவர்களால் அந்த நன்மைகளை பெற்றுக்கொள்ளக்கூடியவிதம் பற்றியும் விழிப்புணர்வூட்டப்படுவதோடு மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்களால் மாவட்டத்தில்

நடாத்தப்படுகின்ற விவசாயிகளின் கூட்டங்களில் போன்றே அவர்களுக்கு நேரடியாக நன்மைகள் வழங்கப்படுகின்ற கமநல சேவைகள் நிலையங்கள், அஞ்சல் அலுவலகங்கள் என்பவை ஊடாக கமக்காரர்களுக்கு சம்பந்தப்பட்ட விழிப்புணர்வூட்டல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் 1918 தொலைபேசி அழைப்பு நிலையத்தின் ஊடாகவும் கமக்காரர்களால் சம்பந்தப்பட்ட தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான இயலுமை நிலவுகின்றது.

ஏ) இந்த நிர்மாணிப்புகளை மேற்கொண்ட கடைச்சொந்தக்காரர்களுக்கு இந்த நிறுவனங்களை அகற்றிக்கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதோடு இந்த நிர்மாணிப்புகள் மாவட்ட அலுவலகத்தின் முன்னால் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள காணித்துண்டிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு (Reservation) வருங்காலத்தில் அது பற்றி நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விழிப்புணர்வூட்ட எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த காணித்துண்டு சபையுடன் தொடர்புடைய காணித்துண்டு அல்லவென்பதோடு சபையினால் இது சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாதென்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

ஐ) மூன்றாந் தரப்பு காப்புறுதி நடவடிக்கைளை மேற்கொண்டு வருவதற்காக மாவட்ட அலுவலகங்களால் இன்றளவில் Access செயலி முறைமையை பயன்படுத்தி தரவு முறைமை பேணிவரப்படுகின்றது. இந்த முறைமைக்குள் பகுப்பாய்வதன் மூலமாக சம்பந்தபட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ள இயலுமென்பதோடு தரவு முறைமைக்குள் சம்பந்தப்பட்ட தகவல்களை சரிவர உள்ளடக்குமாறு மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளார்கள் என்பதை சுட்டிக்காட்டுகிறேன். சபையினால் சில மாவட்ட அலுவலகங்களில் மூன்றாந்தரப்பு காப்புறுதி நடவடிக்கைகளை அமுலாக்குவதற்காக ERP முறைமை அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளதோடு இந்த தரவு முறைமையைப் பாவித்து சம்பந்தப்பட்ட தகவல்களை சரியாக பெற்றுக்கொள்வதற்கான இயலுமை நிலவுகின்றதென்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

ஒ) நேர்முகப் பரீட்சையில் உயர்வான புள்ளிகளைப்பெற்ற விண்ணப்பதாரிகளை சேவைக்காக அழைப்புவிடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு அந்த விண்ணப்பதாரிகள் சேவைக்கு சமுகமளியாமை பற்றி சபையினால் விடயங்களை எடுத்தியம்ப முடியாது.

ஓ) சபையினால் ஒவ்வோராண்டிலும் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் இறுதிக்கணக்கு தயாரிக்கப்படுவதோடு அத்தருணமாகும்வேளையில் மாவட்ட அலுவலகங்கள் மூலமாக அறவிடப்படுகின்ற தவணைப் பணத்திற்காக காசோலைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதோடு அந்த பெறுமதி வருமதியான தவணைப்பணமாக இனங்காணப்பட்டுள்ளது.

ஔ) மாவட்ட அலுவலகங்களால் செலவுகளை மேற்கொள்கையில் சம்பந்தப்பட்ட செலவுகளுக்கான பணம் தலைமை அலுவலகத்தினால் மாவட்ட அலுவலகங்களுக்கு

அனுப்பிவைக்கப்படுகின்றது. சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலகங்களுக்கு ஏற்புடைய செலவுகளுக்காக பணம் செலுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்திலேயே ஒரு செலவினமாக ஏற்பிசைவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட அலுவலகங்களால் செலவுகள் செய்யப்படுகையில் சம்பந்தப்பட்ட செலவுகளின் பெறுமதிக்கிணங்க மாத்திரம் தலைமை அலுவலகத்தினால் பணம் மாற்றியனுப்பப்படுவதால் அந்த செலவுகளை நேரடியான செலவுகளாக ஏற்பிசைவு செய்தல் தவறுகள் நிறைந்ததாக அமையமாட்டாதென சுட்டிக்காட்டுகிறேன்.

க) நிதிக்கூற்றுகளில் முன்கொண்டு வரப்படுகின்ற இந்த மீதிகளை நிதிக்கூற்றுகளிலிருந்து அகற்றுவதற்காக இந்த வருடத்தில் பல தடவைகள் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவிற்கும் பணிப்பாளர் சபைக்கும் பணிப்பாளர் சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதோடு இற்றைவரை ஏற்புடைய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதோடு அந்த மீதிகளை இந்த கணக்காண்டுக்குள் நீக்கிவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

ங) இந்த மீதி நீண்டகாலமாக நிலவிவருகின்ற மீதியாக அமைவதாலும் சம்பந்தப்பட்ட தரப்புகள் இந்த பணத்தொகையை மீண்டும் கோராமையாலும் அந்த பணத்தை வருமானத்திற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கலாநிதி டபிள்யு.எம். எம். பீ. வீரசேகர,
தலைவர்,
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள், பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுகள்

1.1 அபிப்பிராயம்

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

அ) சபையின் கமக்காரர் ஓய்வூதிய உதவுதொகை செலுத்துனர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற தவணைப்பணம் அவர்களின் வயது 60 வருடங்கள் நிறைவடைகையில் அவர்களுக்கு நன்மைகளாக செலுத்தப்படவேண்டுமென்பதால் அறவிடப்பட்ட தவணைப்பணம் மற்றும் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட வட்டியின் கூட்டுத்தொகை சபையின் நிதியக் கணக்கில் சீராக்கப்பட்டுள்ளதோடு அதனூடாக எதிர்காலத்தில் செலுத்தவேண்டிய பொறுப்பிற்காக நிதியத்தை பலப்படுத்துதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆ) 1) மேலே (அ) பிரகாரம் உதவுதொகை செலுத்துனர்களிடமிருந்து அறிவிடப்பட்ட தவணைப்பண வருமானம் நிதியக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளமையால் காசுப்பாய்வுக் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின்கீழ் காட்டப்பட்டுள்ளது.

ii.) இறப்புப் பணிக்கொடை செலுத்துகையில் கமக்காரர் ஓய்வூதிய திட்டத்துடன் தொடர்புடையதாக செலுத்தப்படுகின்ற பணிக்கொடைத் தொகையான 10,585,145/- பணத்தொகை இதன்கீழ் சீராக்கப்பட்டுள்ளது.

iii) 2023 ஆம் ஆண்டில் சபையில் காணப்பட்ட பண்டங்கள் கையுதிர்க்கப்பட்டதோடு அதன்போது ஓய்வூதிய செயற்றிட்டத்துடன் தொடர்புடைய பண்டங்களை கையுதிர்த்தல் ஊடாக அறவிடப்பட்ட பணத்தொகை முதலீட்டுச் செயற்பாடுகளின்கீழ் காட்டப்பட்டுள்ளது.

iv.) கமக்காரர் ஓய்வூதிய திட்டத்தின் நிருவாகச் செலவுகளுக்காக கிடைக்கின்ற பணத்தொகை மற்றும் நிருவாகச் செலவுகளை ஏற்றல் ஒர தொழிற்பாட்டு நடவடிக்கையாக அமைவதால் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளில் சரியாக காட்டப்பட்டுள்ளது.

v.) பிற சென்மதியான தொகைகளை உள்ளிட்ட மாற்றங்கள் காசுப் காசுப்பாய்வில் தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களின்கீழ் சீராக்கப்பட்டுள்ளது.

vi.vii) சபையின் திட்டங்களுக்கிடையில் நிலவுகின்ற கடன் மீதிகள் மற்றும் சென்மதியான வட்டியின் கூட்டுத்தொகை மொத்த கடன் மீதி மற்றும் சென்மதியாக வட்டிக் கூட்டுத்தொகை மொத்த கடன் மீதி முதலீடு செய்யப்படுவதால் மேற்படி மீதி வேறு செலுத்துதல்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அந்த கடனையும் வட்டியையம் செலுத்துகையில் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளில் உள்ளடங்கிய தொழிற்படு மூலதன மாற்றங்களில் சீராக்கல் இடம்பெறுவதால் தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் பிறப்பித்த காசுப்பாய்வில் எற்கெனவே சீராக்கப்பட்டுள்ளமையால் தொழிற்பாட்டு பாசுப்பாய்வு குறைவாக மதிப்பிடப்படவில்லை.

இ) கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தினதும் சபையின் ஏனைய ஓய்வூதியத் திட்டங்களுக்காகவும் 2024 வரவுசெலவின்படி ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினை பெற்றுக்கொள்வதற்காக இவ்வருடத்தில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஈ)1. பணக் கிடைப்பனவுகளுடன் தொடர்புடைய தகவல்களுக்காக முறைப்படி பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டு வருகின்றன. மாதாந்தம் இற்றைப்படுத்தப்படுகின்ற ஓய்வூதிய பெயர்ப்பட்டியலை கணினி முறைமையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். திட்டத்தின் உறுப்புரிமையைப் பெற்றுள்ள உதவுதொகை செலுத்துனர்களின் தகவல்களை கணினி முறைமையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். பிந்திய தவணைகளை கணினிமயப்படுத்துவதிலான தாமதங்கள் ஏற்பட்டுள்ளமையால் செல்லுபடியற்றதாகிய மற்றும் இயங்காத உதவுதொகை செலுத்துனர்கள் பற்றிய தகவல்களை கணினிஊடாக பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் நிலவுகின்றன. இந்த நிலைமையின் மத்தியில் பிந்திய தவனைகளை தன்னியக்கமாக கணினிமயப்படுத்துவதற்காக அரச வணிக வங்கிகள் மூலமாக பிந்திய தவணைகளை அறவிட்டு மேற்படி தவணைகளை எமது தரவு முறைமையுடன் தொடர்புடுத்திக் கொள்ளக்கூடிய விசேட வேலைத்திட்டமொன்றை தொடங்குவதற்காக அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

II.கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்துடன் தொடர்புடையதாக தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கின்ற அனைத்து ஆவணங்களையும் பரிசீலனைசெய்து முறைப்படி தலைமை அலுவலகத்தின் ஓரிடத்தில் அல்லது ஆவணக் காப்பகத்தில் களஞ்சியப்படுத்துகின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென்பதை மேலும் அறிவிக்கிறேன். பிராந்திய கணக்காளர்களால் செலுத்தப்பட்டிராத ஓய்வூதிய பதிவேடுகள் இணையத்தளம் ஊடாக எமக்கு வழங்கப்படுவதோடு அதனை ஒழுங்கமைத்து மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

உ) 2010 ஆம் ஆண்டில் பொது திறைசேரி செயலாளரின் தலைமையில் நடைபெற்ற குழுக்கூட்டத்தின் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துவதற்கான அவசியப்பாட்டினை உறுதிசெய்துகொள்வதற்காக திறைசேரியிடமிருந்து கிடைத்த பணத்தையும் நிலுவைப் பணத்தொகையையும் அப்போது சபையிடமிருந்த கடற்றொழிலாளர் ஓய்வூதியம் / கமத்தொழில் காப்புறுதி நிதியத்தையும் பயன்படுத்திக் கொள்ளுமாறும் பின்னர் மேற்படி நிதியத்தை செலுத்தித் தீர்த்துக்கொள்ளமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் சபையின் ஏனைய மிகையான நிதியங்கள் கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்டன. அவ்விதமாக பெறப்பட்ட பணத்தை மீண்டும் கமத்தொழில் காப்புறுதித் திட்டத்திற்கும் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்திற்கும் செலுத்தவேண்டி உள்ளது. அவ்விதமாக பெறப்பட்ட நிதியங்களை படிப்படியாக செலுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

ஊ) கமக்காரர் ஓய்வூதியப் பொறுப்பு வருடாந்தம் அதிகரித்து வருவதோடு செயற்றிட்டத்தில் முதலீடுகள் இல்லாமையும் இந்த செயற்றிட்டத்தின் நன்மைகளை தவணைப்பணத்தை அதிகரிக்காமல் பலசந்தர்ப்பங்களில் அரச கொள்கை காரணமாக அதிகரித்தமை காரணமாகவும் இந்த நிலைமை தோன்றியுள்ளதோடு ஒவ்வோராண்டிலும் அரசாங்க வரவுசெலவு மூலமாக பணத்தை ஒதுக்கி கமக்காரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

எ) மீளாய்வாண்டில் முதலீட்டு வட்டி வருமானம் இனங்காணப்படுகையில் முழுமையான வட்டி வருமானத்தை இனங்கண்டு அது கணக்குப்பதியப்பட்டுள்ளது. ஆண்டில் கழிக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரி ஒரு செலவினமாக அமையமாட்டாதென்பதோடு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையின் ஒட்டுமொத்த கணக்குகளையும் தயாரிக்கையில் சபைக்கான வருமான வரி கணிக்கப்படுவதோடு அவ்விதமாக கணிக்கப்பட்ட வருமான வரிக்கான கழித்தல் என்றவகையில் இந்த பிடித்துவைத்தல் வரி கணக்குப் பதியப்பட்டுள்ளதோடு அதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினருக்காக உள்ள நடைமுறைக் கணக்குகள் ஊடாக சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏ) சபைக்கு கிடைக்கின்ற மூலதனக் கொடைகள் உரிமையென்றவகையில் சபையின் கணக்குகளில் செலுத்தப்பட்டுள்ளதோடு செயற்றிட்டத்துடன் தொடர்புடையதாக

பாவிக்கப்பட்டுள்ள அளவு பொறுப்பென்றவகையில் செயற்றிட்டத்தில் செலுத்தப்பட்டுள்ளதோடு இந்த சீராக்கல்கள் செயற்றிட்டங்களுக்கிடையில் உள்ள நடைமுறைக் கணக்குகள் ஊடாக சீராக்கப்பட்டுள்ளன.

ஐ) தேறிய தவணைப்பணத்தை செலுத்துதல், இறப்புப் பணிக்கொடை மற்றும் ஏலாமை நன்மை செலுத்துவதற்காக விநியோகிக்கப்பட்ட, எனினும் கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பியாத காசோலைகள் காலாவதியானவிடத்து அந்த காசோலைகளை வருமானத்திற்கு எடுத்தல் மேற்கொள்ளப்படுவதோடு மேற்படி காசோலைகளுக்காக மாவட்ட அலுவலகங்கள் ஊடாக எமக்கு கிடைக்கின்ற கோரிக்கைகளுக்கு அமைவாக மீண்டும் காசோலைகள் விநயோகிக்கப்படுகின்றன. காலாவதியாகின்ற காசோலைகளை முறைப்படி பதிவேட்டில் பதிந்து வைப்பதோடு எந்தவொரு தருணத்திலும் உதவுதொகை செலுத்துனர் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட மாவட்டத்திற்காக தேறிய தவைணைப்பணத்தைச் செலுத்துதல், இறப்புப் பணிக்கொடை மற்றும் ஏலாமை நன்மைகளை செலுத்துவதற்காக விநியோகிக்கப்பட்ட, கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பித்திராத காசோலைகள் காலாவதியானதும் மேற்படி காசோலைகளை வருமானத்திற்கு எடுத்தல் மேற்கொள்ளப்படுவதோடு மேற்படி காசோலைகளுக்காக மாவட்ட அலுவலகங்கள் ஊடாக எமக்கு முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்காக மீண்டும் காசோலைகள் விநியோகிக்கப்படும். காலாவதியான காசோலைகள் முறைப்படி பதிவேடுகளில் பதிந்து வைக்கப்படுவதோடு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உதவுதொகை செலுத்துனரால் உரித்துக்கோரல் மேற்கொள்ளப்படுகின்றவேளையில் சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலகத்தின் விதப்புரையின்படி மீண்டும் கணக்குடையோனுக்கு காசோலை விநியோகிக்கப்படுவதோடு அந்த காசோலைகளில் காசாக மாற்றப்படாத காசோலைகள் அடிக்கடி கணக்கிணக்கத்திற்கு இலக்காகின்றன.

ஒ) 2012 மற்றும் 2013 ஆகிய வருடங்களுக்காக செலுத்தவேண்டிய ஓய்வூதியமான ரூபா. 3,033,329,200 பெறுமதியை பதிவழிப்பதற்காக 535/04 ஆம் இலக்கமுடைய பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமைந்தொழுகாமை

அ) i,iii,iv வயது 60 வருடங்கள் நிறவடைந்தவிடத்து ஓய்வூதியம் பெறுனர்களின் விண்ணப்பப் பத்திரங்களையும் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் சரிவர தலைமை அலுவலகத்திற்கு துரிதமாக அனுப்பிவைக்குமாறு ஏற்கெனவே தொலைபேசி ஊடாக மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவித்துள்ளபோதிலும் இந்த பதில் அறிக்கையின் (2) (இ) இல் குறிப்பிட்டுள்ளவாறு மீண்டும் எழுத்திலான அறிவுறுத்தல்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். வயது 60 வருடங்களை பூர்த்திசெய்த பின்னர் கமக்காரர்கள் சம்பந்தப்பட்ட நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென கமக்காரர்களை சேர்த்துக்கொள்கின்ற தருணத்தைப்போலவே கமக்காரர்களின் ஓய்வூதியத்திற்கான தவணைப்பணம் அறவிடுகின்ற பதிவுப் புத்தகத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி கமக்காரர்கள் சம்பந்தப்பட்ட கமக்காரர் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளல் பற்றி விழிப்புணர்வூட்டப்பட்டிருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்டுகிறேன். இதற்கு மேலதிகமாக வயது 60 வருடங்களை பூர்த்திசெய்கின்ற கமக்காரர்களின் பெயர்ப்பட்டியல் மேற்படி மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு கமக்காரர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டிருக்கிறார்கள்.

V) வயது 60 வருடங்கள் நிறைவடைந்த இதுவரை கமக்காரர் ஓய்வூதியம் பெற்றிராத கமக்காரர்கள் ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு அனைத்து மாவட்ட அலுவலக உதவிப் பணிப்பாளர்களும் இந்த பணியை முதன்மைப் பணியாக கருதி செயலாற்றி உள்ளார்கள்.

ii12 (இ) பிரிவு

i. வயது 60 வருடங்கள் நிறைவடைந்த கமக்காரர்களை அறிவுறுத்துவதற்காக சபை எற்கெனவே நடவடிக்கைகளை எடுத்துள்ளதோடு மாவட்ட அலுவலகங்கள் ஊடாக சம்பந்தப்பட்ட கமக்காரர்களுக்கு கடிதம் மூலமாக அறிவிக்கப்பட்டும்

உள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தற்போது தாமதமின்றி சம்பந்தப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் கிடைத்து வருவதாகவும் அறிவிக்கிறேன். முறைப்படி பங்களிப்புத் தொகைகளை செலுத்தியிராத உதவுதொகை செலுத்துனர்களுக்கு தேறிய தவணைப்பணமும் வட்டியும் மீளச்செலுத்தப்படவேண்டுமென 2014 இன் 452/12 ஆம் இலக்கமுடைய வர்த்தமானப் பத்திரிகையின் 13 வது ஒழுங்குவிதியில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி சம்பந்தப்பட்ட கமக்காரர்களுக்கு தேறிய தவணைப்பணம் செலுத்தப்பட்டுள்ளதென்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

ii. முறைப்படி 06 மாதங்கள் ஓய்வூதியத்தைப் பெற்றக்கொள்ளாத கமக்காரர்களின் பெயர்களை ஓய்வூதிய பதிவேட்டிலிருந்து நீக்கிவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

iii. கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் 1987 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு செயற்றிட்டமாக அமைவதால் ஆரம்ப காலகட்டத்தில் கணினி முறைமையொன்று பேணிவரப்படவில்லை. தவணைப்பணக் குறிப்புப் புத்தகங்களை பதிதல் மூலமாக தவணைப்பணம் செலுத்துதலை இனங்காணக்கூடியவகையில் முறையியல்கள் வகுக்கப்பட்டுள்ளன. தவணைப்பணம் அறிவிடப்படுகின்ற எஃப்.எஸ்.பீ. 5 பற்றுச்சீட்டு அறிக்கைகளை மாவட்ட அலுவலகங்களில் பேணிவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த பலவீனங்களை தவிர்த்துக்கொள்வதற்காக புதிய கணினித் தொகுதியொன்றை நிறுவ அவசியமான நடவடிக்கைகள் தற்போது அமுலாக்கப்பட்டு வருகின்றன. GIZ நிறுவனத்தின் உதவியுடன் E.R.P மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதோடு சபைக்கு அவசியமானவகையில் முறைமை நவீனமயமாக்கப்பட்டுள்ளது. மேற்படி முறைமை நிறுவப்பட்டதால் வங்கி முறைமையுடன் நேரடியான தொடர்புகளைப் பேணிவந்து தரவுகளை உள்ளீடுசெய்ய இயலுமை உருவாகும்.

iv. நிலவிய ஊழியர் பற்றாக்குறையின்பேரில் பிந்திய தவணைகளை கணினிமயப்படுத்த இயலாமல் போனதோடு 2022 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் பிந்திய தவணைகளை கணினிமயப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(iii) முறைப்படி உதவுதொகையை செலுத்தாத உதவுதொகை செலுத்துனர்களுக்கு தேறிய தவணைப்பணமும் வட்டியும் மீளச்செலுத்தப்படுமென 1987 இன் 452 /12 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் 13 வது ஒழுங்குவிதி மூலமாக காட்டப்பட்டுள்ளது. மேற்படி கணிப்பீடு ஆயுட்கணிப்பாளரொருவரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

iv) 15,15(2),15(3),15(4) 15(5) பிரிவுகள்

i. உதவுதொகை செலுத்துனர்கள் தொடர்ச்சியாக 5 தவணைகளுக்கான தவணைப்பணத்தை செலுத்துவதை தவறவிட்டால் உறுப்பாண்மை அற்றுப்போய்விடுமென தவணைப்பணக் குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 5 தவணைகளுக்கான பணத்தை செலுத்தத் தவறினால் ஒப்பந்தச் சான்றிதழ் செல்லுபடியற்றதாகுமென 1987 இன் 12 ஆம் இலக்கமுடைய கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்

பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் 15(1) பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட கமக்காரர்கள் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற வேளையிலேயே கமக்காரர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ii. 1987 இன் 12 ஆம் இலக்கமுடைய கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் 15(1) பிரிவின் பிரகாரம் 5 தவணைகளுக்கான பணத்தை செலுத்தத் தவறிய கமக்காரர்கள் நன்மைகளை இழப்பர். தவணைப்பணம் செலுத்தப்படுதல் தொடர்பில் கவனம் செலுத்துகையில் அவர் செலுத்துகின்ற தவணைப்பணம் எப்போது செலுத்தப்படவேண்டிய தொகை என்பது கவனத்திற் கொள்ளப்படும். அதன்படி ஏதேனும் தவணையொன்றை 5 போகங்களுக்கு மேலாக அதாவது 2 1/2 வருடங்களுக்கு மேலாக செலுத்த தாமதித்தால் அவர்களின் ஒப்பந்தச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நன்மைகள் இல்லாதொழியும்.

v.) 27 (1) பிரிவு

2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கமக்கார்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்காக மேற்படி செயற்றிட்டத்திடம் பணம் தீர்ந்துபோனமையால் நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட விதப்புரையின் பிரகாரம் கமத்தொழில் காப்புறுதி மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய திட்டங்களிடமிருந்து பணத்தைப்பெற்று கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த கடன் தொகை படிப்படியாக செலவுமீளளிப்பு செய்யப்படும்.

ஆ. ஒப்பந்தச் சான்றிதழின் 6 வது பிரிவு

எந்தவொரு உதவுதொகை செலுத்துனரும் செல்லுபடியாகாமல் செலுத்தவேண்டிய மொத்த தவணைகளின் எண்ணிக்கையில் 75% இற்கு மேலாக செலுத்தியிருப்பின் அவருக்கு குறைக்கப்பட்ட ஓய்வூதியமொன்று தயாரிக்கப்படும். அவ்விதமாக குறைக்கப்பட்ட ஓய்வூதியத்தை தயாரிப்பதற்காக அங்கத்துவத்தை இழக்காமல் 75% இற்கு மேற்பட்ட தவணைப்பணத்தை செலுத்தியிருக்கவேண்டும்.

இ. 2014 மார்ச்சு 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் 5 (ஆ) பந்தி

தேறிய தவணைப்பணத்தை பெற்றுக்கொள்வதற்காக உரிய அனைத்து ஆவணங்களுடனும் கோரிக்கைக் கடிதத்தை சமர்ப்பிக்கவேண்டுமென்பதோடு தேறிய தவணைப் பணத்தை செலுத்துகின்ற செயற்பாங்கினை வினைத்திறன் கொண்டதாக்க அவசியமான நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளன.

(ஈ) 2017 இன் 24 ஆம் இலக்கமுடைய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 9 (1) பிரிவு

1987 இன் 12 ஆம் இலக்கமுடைய கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் மூலமாக ஆரம்பிக்கப்பட்டு கமக்காரர்களுக்கும் கடற்றொழிலாளர்களுக்கும் சேவையை வழங்குகின்ற நோக்கத்துடன் இந்த செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்றிட்டத்தின்கீழ் கமக்காரர்களிடமிருந்தும் கடற்றொழிலாளர்களிடமிருந்தும் தவணைகள் என்றவகையில் அறவிடப்படுகின்ற பணத்தொகை மூலமாக நிதியமொன்று கட்டியெழுப்பப்படுவதோடு

மேற்படி நிதியம் கொண்டுள்ள பணத்தின் மூலமாக மீண்டும் அவர்களுக்கு கமக்காரர் மற்றும் கடற்றொழிலாளர் ஒய்வூதியத்தை செலுத்துதல் வேண்டும். இது சமூகப்பாதுகாப்பு வலையமைப்பின் (Social Security Network) கீழ் அமுலாக்கப்படுகின்ற செயற்றிட்டமாக அமைவதோடு வருமான வரி செலுத்துவதற்காக இலாபம் ஈட்டல் இடம்பெறுவதில்லை.

இந்த திட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே அரசாங்கத்தின் கொள்கைரீதியான தீர்மானத்தின்பேரில் வரி அறவிடப்படுவதில்லை என்பதோடு 1979 இன் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டம் மூலமாகவும் 2006 இன் 10 ஆம் இலக்கமுடைய உள்நாட்டு வருமான வரி சட்டத்தின் மூலமாகவும் இந்த சபை வரி விலக்களித்த நிறுவனமொன்றாக பிரகடனஞ் செய்யப்பட்டிருந்ததோடு சமூகப் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் கமக்காரர்களுக்கும் கடற்றொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பினை வழங்குகின்ற இந்த நிறுவனம் 2017 இன் 24 ஆம் இலக்கமுடைய உள்நாட்டு வருமான வரிச்சட்டத்தீன்கீழ் வரிவிலக்கற்ற நிறுவனமாக பெயர்குறிக்கப்படாமையால் சம்பந்தப்பட்ட வரிவிலக்கினை பெற்றுக்கொள்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
சபையின் அனைத்து செயற்றிட்டங்களுடனும் தொடர்புடையதாக ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதோடு. சம்பந்தப்பட்ட அறிக்கைகள் பெறப்பட்ட பின்னர் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன

(உ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் (177(3)

மாவட்ட அலுவலகங்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மேற்படி சங்கங்களின்கீழ் இயங்கி வருகின்ற கிராமிய வங்கிகள் மூலமாக கமக்காரர்களின் பிந்திய தவணைகளுக்கான பணத்தை அறவிடுவதற்காக ரூ. 7.00 தரகு செலுத்தப்படுகின்றது. சம்பந்தப்பட்ட முகவர் நிலையங்களாலும் மாவட்ட அலுவலகங்களாலும் அறவிடப்பட்ட தவணைப் பணத்தை வங்கியில் இடுகையில் ஏற்புடைய வருமானம் மாத்திரம் வங்கியிலிடப்படுவதோடு பிந்திய தவணை வருமானத்தை கணக்குப் பதிகையில் சம்பந்தப்பட்ட முழுப்பணத்தொகையும் வருமானத்தில் கணக்குப் பதியப்பட்டுள்ளது. தரகுச் செலவு செலவினமாக கணக்குப்பதியப்பட்டுள்ளதோடு வருமானத்தை சரிவர கணக்குப் பதிவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஊ) வாகன மதிப்பீட்டினை செய்வதற்காக தொழில்சார் அனுபவம்வாய்ந்த Auto Mobile Association of Ceylon எனும் நிறுவனம் மூலமாக அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

3.2 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

அ) கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தில் பங்களிப்புச் செய்கின்ற கமக்காரர்களுக்கு கமக்காரர் ஓய்வூதிய சட்டத்தின் 4 ஆ, இ, மற்றும் ஈ பிரிவுகளின்படி ஓய்வூதியத்திற்கு மேலதிகமாக இறப்புப் பணிக்கொடையும் பூரணமான மற்றும் பகுதியளவிலான ஏலாமைக் கொடுப்பனவும் வழங்கப்படல் வேண்டும். வழங்கப்படுகின்ற காப்புறுதிக் காப்பீட்டுக்காக ஒரு போகத்திற்காக ரூபா 30/- காப்புறுதிக்கட்டணம் அறவிடப்படுகின்றது.

ஆ) ஒப்பந்தச் சான்றிதழில் குறிப்பிட்டுள்ளவாறு தவணைப்பணம் செலுத்தாத உதவுதொகை செலுத்துனர்களின் உறுப்பாண்மை செல்லுபடியற்றதாவதோடு அந்த உதவுதொகை செலுத்துனர்கள் 60 வயதினை பூர்த்திசெய்கின்றவேளையில் தேறிய தவணைப்பணமும் அதன்மீதான வட்டியும் செலுத்துதல் இடம்பெறுகின்றது.

3.3 செயலாற்றுகை

அ) சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகளை செய்தல் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு இன்றளவில் சம்பந்தப்பட்ட மாதத்தில் கிடைக்கின்ற விண்ணப்பங்களுக்காக அடுத்துறும் மாதத்தில் இருந்து ஒய்வூதியம் செலுத்தப்படுகின்றது.

ஆ) வருடத்தின் தொடக்கத்தில் கமக்காரர் ஒய்வூதியம் , ஏலாமை மாதாந்தக் கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்ற கமக்காரர்களின் உயிர்த்தரவுத் தகவல்கள் பெறப்படுவதன் மூலமாக கமக்காரர்களின் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இ) I,II,III,IV,v

கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் உறுப்பாண்மையைப் பெற்றுள்ள கமக்காரர்கள் 60 வயதினை நிறைவுசெய்வதற்கு முன்னராக விழிப்புணர்வூட்டுவதற்காக விசேட வேலைத்திட்டமொன்றை வகுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. அனைத்து மாவட்டங்களிலும் 60 வயதினை நிறைவுசெய்ய அண்மித்துள்ள கமக்காரர்களின் பெயர்ப்பட்டியலை மாவட்ட பிரதி/ உதவிப் பணிப்பாளர்களுக்கு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி அவர்கள் கமநலசேவைகள் நிலைய மட்டத்தில் விழிப்பூட்டப்பட அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

3.4 முகாமைத்துவ செயற்பாடுகள்

I. அ) கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் 1987 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு செயற்றிட்டமாக அமைவதால் ஆரம்ப காலகட்டத்தில் கணினி முறைமையொன்று பேணிவரப்படவில்லை. தவணைப்பணக் குறிப்புப் புத்தகங்களை பதிதல் மூலமாக தவணைப்பணம் செலுத்துதலை இனங்காணக்கூடியவகையில் முறையியல்கள் வகுக்கப்பட்டுள்ளன. தவணைப்பணம் அறவிடப்படுகின்ற எஃப்.எஸ்.பீ. 5 பற்றுச்சீட்டு அறிக்கைகளை மாவட்ட அலுவலகங்களில் பேணிவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த பலவீனங்களை தவிர்த்துக்கொள்வதற்காக புதிய கணினித் தொகுதியொன்றை நிறுவ அவசியமான நடவடிக்கைகள் தற்போது அமுலாக்கப்பட்டு வருகின்றன. GIZ நிறுவனத்தின் உதவியுடன் E.R.P மென்பொருள் கொள்வனவு செய்யப்படுவதற்கான பெறுகைச் செயற்பாடுகள் இன்றளவில் நிறைவுசெய்யப்பட்டு அந்த முறைமையை நிறுவுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி முறைமை நிறுவப்பட்டதால் வங்கி முறைமையுடன் நேரடியான தொடர்புகளைப் பேணிவந்து தரவுகளை உள்ளீடுசெய்ய இயலுமை உருவாகும்.

ஆ) I) புதிய கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் சம்பந்தமாக மாவட்ட மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தி விழிப்புணர்வூட்டல் மேற்கொள்ளப்பட்டதோடு மாவட்ட பிரதி /உதவிப் பணிப்பாளர்களை கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் விழிப்புணர்வூட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் கிடைக்கின்ற கேள்விக்கிணங்க சம்பந்தப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

II) உதவுதொகை செலுத்துனர்களின் பிந்திய தவணைகளின் அறவீடு பற்றி பரிசீலனை செய்வதற்காக கீழே குறிப்பிட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- வங்கி நிலையியற் கட்டளைகள் ஊடாக கிடைக்கின்ற பிந்திய தவணைகள் பற்றிய அறிக்கையை பேணி வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
- SMS மூலமாக தவணைகளை செலுத்துமாறு உதவுதொகை செலுத்துனர்களை விழிப்புணர்வூட்டுதல் தற்போது அமுலாக்கப்பட்டு வருகின்றது. அதன்படி 2023 ஒற்றோபர் முதலாவது போகத்தில் உங்களின் கமக்காரர் ஒய்வூதிய தவணையை நிலையியற் கட்டளை மூலமாக ஒப்பந்தச் சான்றிதழ் இலக்கத்தை சபைக்கு அனுப்பி வைப்பதை வங்கிகள் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு உதவுதொகை செலுத்துனர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளார்கள். இவ்விதமாக SMS செய்தி மூலமாக தவணைகளை செலுத்துவதை தவறவிடுதலை தடுப்பதற்கான விழிப்புணர்வூட்டல் தொடங்கப்பட்டது.
- எதிர்காலத்தில் 1918 சேவை மூலமாக உதவுதொகை செலுத்துனர்களுக்கு அறிவிக்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

III.) SMS மூலமாக தவணைப்பணம் செலுத்துதல் பற்றி அறிவிப்பதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய தொழில்நுட்ப அலுவல்கள் இன்றளவில் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தில் மாத்திரமன்றி சபையினால் அமுலாக்கப்பட்டு வருகின்ற ஏனைய காப்புறுதிச் செயற்றிட்டங்கள் சம்பந்தமாகவும் சேவைபெறுனர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக இந்த SMS முறையியலைப் பயன்படுத்த இயலும். தொழில்நுட்ப அலுவல்களை நிறைவுசெய்த பின்னர் தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கு கிடைக்கின்ற SMS செய்தியை உதவுதொகை செலுத்துனர்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

IV.) முகவர் வலையமைப்பு ஊடாக உதவுதொகை செலுத்துனர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கு மேலதிக கிரயத்தை ஏற்க நேரிடுவதால் SMS செய்தித்திட்டத்தை பிரயோகிக்க சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இ) 1987 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தின் தவணைப்பண அறவீட்டினை கமக்காரருக்கு வழங்கப்படுகின்ற தவணைப்பணக் குறிப்புப் புத்தகத்தில் குறிப்புப் பதிவதன் ஊடாக இனங்காணக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த தவணைப்பணக் குறிப்புப் புத்தகங்களில் தகவல்களை ஆய்வுமூலமாக ஒன்றுசேர்த்து பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் சம்பந்தப்பட்ட மதிப்பாய்வு மூலமாக தகவல்களைப் பெற்றுக்கொள்வது மிகவும் கடினமானதாக அமைந்தமையால் எதிர்பார்த்தவகையில் தகவல்களைப் பெற்றுக்கொள்ள இயலாமல் போயிற்று.

(உ) மாவட்ட அலுவலகங்களுக்கு ஆவணங்கள் கிடைத்த தினத்துடன் தொடர்புடைய திகதி முத்திரையைப் பொறித்தல் ஒருசில மாவட்டங்களில் நிலவிய உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாக ஒருசில சந்தர்ப்பங்களில் தவறவிடப்பட்டிருந்தபோதிலும் எதிர்காலத்தில் கிடைக்கின்ற அனைத்து ஆவணங்களிலும் திகதி முத்திரை பொறிக்கப்பட வேண்டுமென 06/07/2022 ஆந் திகதிய உள்ளக கணக்காய்வு அறிக்கையின் விதப்புரைகளை அமுலாக்குவதற்காக அனுப்பிவைக்கப்பட்ட அறிவுறுத்தல் கடிதம் மூலமாக 2023 ஆம் ஆண்டில் மாவட்ட அலுவலகங்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளன.

(ஊ) ஓய்வூதிய விண்ணப்ப மாதரிப் பத்திரங்கள் இடைக்கிடையே கமநல சேவை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவதோடு இந்த கணக்காய்வு அறிக்கையின் விதப்புரைகளை அமுலாக்குவதற்காக இனிமேல் மாதத்திற்கு (30 நாட்கள்) ஒருதடவை கமநல சேவைகள் நிலையத்திடமிருந்து மேற்படி மாதிரிப்படிவங்கள் உள்ளனவா என்பதை விசாரித்தறிந்து அவசியப்பாட்டின் பேரில் திட்டவட்டமான ஓர் அளவினை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(எ) கமக்காரர்களால் மாவட்ட அலுவலகங்களுக்கு விண்ணப்பங்கள் ஒப்படைக்கப்படுகையில் சம்பந்தப்பட்ட அறிக்கைளை சரியாக நிறைவாகவுவும் கையளிக்காத தருணங்களில் மேற்படி தகவல்களை சரிவர கையளிக்கும்வரை மாவட்ட அலுவலகங்களில் கமக்காரரொருவர் ஓய்வூதியம் பெறுவதற்காக விண்ணப்பிக்கின்றவேளையில் Google drive இற்றைப்படுத்தி தொடர்பு இலக்கமொன்றை (Reference Number) வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் அறிவுறுத்தல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏ.) I சபையுடன் தொடர்புடையதாக பிரதானமாக 3 செயற்றிட்டங்கள் நிலவுவதோடு காப்புறுதிச் செயற்றிட்டம் ஊடாக ஏனைய திட்டங்களைப்போன்றே ஆயுட்காப்புறுதியும் அமுலாக்கப்பட வேண்டுமென்பதால் இந்த காப்புறுதியை நடைமுறைப்படுத்துதல் அதாவது தவணைப்பணத்தை சேகரித்தல், நிதியங்களை கட்டியெழுப்புதல் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் கமத்தொழில் காப்புறுதித் திட்டம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ii.) இந்த நிதியம் கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துவதற்காகவன்றி இறப்பு மற்றும் ஏலாமை கொடுப்பனவுகளை செலுத்துவதற்காகவே என்பதால் கமக்காரர் ஓய்வூதியம் செலுத்துவதற்காக வழங்கிய பணத்தை முதலீட்டு வருமானத்தையும் கொண்டதாக பெற்றுக்கொள்வதற்காக கணக்குப் பதியப்படுகின்றது.

iii.) கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் தொடக்கத்தில் இந்த ஆயுள் காப்புறுதிக் காப்பீடு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறப்பட்டிருந்ததோடு ஒரு கமக்காருரக்காக ரூ. 60/- மேற்படி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டு காப்பீடு வழங்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டில் மேற்படி ஆயுட் காப்புறுதி அபாயநேர்வினை சபை பொறுப்பேற்றதோடு நிதியம் சபையினால் கட்டியெழுப்பப்பட்டது. அதன் உச்சமட்ட காப்பீடு ரூ. 50,000/- ஆக அமைந்தமையால் எதிர்பாராத நிலைமை தோன்றினால் பாரிய இழப்பீட்டுத் தொகையினை விடுவிக்கவேண்டிய நிகழ்தகவு காணப்படுகின்றது, ஆயுட்கணிப்பு தர அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு அதன்மூலமாக வழங்கப்படுகின்ற அறிக்கைக்கிணங்க செயலாற்றப்படும்.

iv.) ஆயுட் கணிப்பு மதிப்பீட்டு அறிக்கை பெறப்படுகையில் இந்த நிதியம் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட அறிக்கை கிடைத்த பின்னர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள், பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1 நிதிக் கூற்றுகள்

1.1 அபிப்பிராயம்

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) நீண்டகாலமாக தளபாடங்களும் பொருத்திகளும் கணினி துணைச்சாதனங்கள் மற்றும் அலுவலக சாதனங்கள் முதலியவை பாவிக்கப்பட்டபோதிலும் மேற்படி சாதனங்ககளின் பெறுமதியைக் கணித்து விளைவாற்றல்மிக்க ஆயுட்காலத்தை மதிப்பிட இயலாதுள்ளது. பெரும்பாலான சொத்துக்கள் அகற்றப்படவேண்டிய நிலையில் காணப்படுவதோடு கணினி போன்ற சாதனங்கள் இற்றைப்படுத்தக்கூடிய நிலையில் நிலவுவதில்லை. இந்த சொத்துக்கள் முழுமையான வினைத்திறனுடன் பாவிக்க முடியாத நிலையில் நிலவுவதால் எதிர்காலத்தில் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) i. முந்திய ஆண்டுடன் தொடர்புடைய சீராக்கலாக ரூ. 98000/- பணத்தொகை இவ்வாண்டில் சரி செய்தல் மேற்கொள்ளப்பட்டதால் காசுப்பாய்வுக் கூற்றிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ii. iii. iv தொழிற்பாட்டுச் செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் மற்றும் முதலீட்டு செயற்பாடுகள் ஊடாகவும் செய்யப்பட்டுள்ள சீராக்கல்களை சரிசெய்வததற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(இ) சபையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஏனைய சமூகப் பாதுகாப்புச் செயற்றிட்டங்களுடன் ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு அது 2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு இன்றளவில் ஏற்புடைய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

(ஈ) இந்த உத்தியோகத்தர்கள் இந்த செயற்றிட்டத்தின் கடமைப்பணிகளை ஈடேற்றிவருவதோடு நிகழ்காலத்தில் வேறு பணிகளை ஈடேற்றி வருகிறார்கள். செயற்றிட்டத்திற்குரிய கடமைகளை மறைமுகமாக வேறு உத்தியோகத்தர்களும் ஈடேற்றி வருவதால் இந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. போதியளவிலான ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் செயற்றிட்டத்துடன் தொடர்புடைய ஊழியர்களின் சம்பளம் செயற்றிட்டத்தில் உள்ளீர்க்கப்படவுள்ளது.

(உ) இந்த செயற்றிட்டம் சுயநிதியீட்டடல் அடிப்படையில் இயங்கிவருவதில்லை என்பதோடு தவணைக்கட்டணம் தீர்மானிக்கப்படுகையில் அரச மானியத்தில் உள்ளீர்க்கப்படுவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. அதன்படி வருடந்தோறும் செலுத்தவேண்டிய ஓய்வூதியப் பொறுப்பு அதிகரித்து வருவதோடு அதனால் நிகர சொத்துக்களின் பெறுமானமும் குறைவடைகின்றது. அதனால் இந்த செயற்றிட்டத்திற்கான புதிய சேர்த்துக்கொள்ளல் ஊக்கவிக்கப்படுவதில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் முதலீட்டு வட்டியையும் முதலீட்டு வட்டி வருமானத்தையும் ஏற்பிசைவு செய்கையில் முழுமையான வட்டி வருமானத்தை இனங்கண்டு அது கணக்குப் பதியப்பட்டுள்ளது. வருடத்தில் கழிக்கப்பட்ட தடுத்துவைத்தல் வரி ஒரு செலவு அல்லவென்பதோடு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஒட்டுமொத்த கணக்குகளைத் தயாரிக்கையில் சபைக்கான வருமான வரிக் கணப்பீடு மேற்கொள்ளப்படுவதோடு அவ்விதமாக கணிக்கப்பட்ட வருமானம் வரிக்கான கழித்தலாக தடுத்துவைக்கப்பட்டு வரித்தொகைகள் கணக்குப் பதியப்பட்டுள்ளதோடு அதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்காக இருக்கின்ற நடைமுறைக் கணக்கு ஊடாக சீராக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.

1.3 நிதிக்கூற்றுகள் தொடர்பிலான முகாமைத்துவத்தினதும் கட்டுப்படுத்துகின்ற தரப்பினரதும் பொறுப்பு.

1.4 நிதிக்கூற்றுகள் தொடர்பிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொறுப்பு.

2. பிற சட்டரீதியான ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை.

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் அமைந்தொழுகாமை

(அ) i பிரிவு 5

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் இன்றளவில் நிதிசார் சாத்தியநிலை கொண்டதாக அமுலாக்கப்பட நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அந்த அலுவல்களை கணினிமயப்படுத்தப்பட்ட சூழலில் மேற்கொள்வதற்காக இன்றளவில் முழுமையாக கணினி தரவு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க இந்த செயற்றிட்டத்தின்பால் கடற்றொழிலாளர்களை கவர்ந்திழுப்பதற்காக 2024 ஆம் ஆண்டில் கடற்றொழில் அமைச்சுடன் ஒருங்கிணைந்து புதிய கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகஞ் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ii பிரிவு 7

வயது 60 வருடங்களை பூர்த்திசெய்கின்ற உதவுதொகை செலுத்துனர்களின் பட்டியல்களை மாவட்ட அலுவலக மட்டத்தில் பெற்றுக்கொண்டு அந்தந்த மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பிவைத்துள்ளதோடு அந்த பட்டியல்களை

அடிப்படையாகக்கொண்டு ஓய்வூதிய உரித்துடைய கடற்றொழிலாளர்களை விழிப்புணர்வூட்டுகின்ற நிகழ்ச்சியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்துடன் தொடர்புடைய நெறிப்படுத்தல் நடவடிக்கைகள் கடற்றொழில் மற்றும் நீரகவளத்துறை திணைக்களம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருவதால் இந்த நிலைமையை மேற்படி திணைக்களத்திற்கு அறிவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் மாவட்ட கடற்றொழில் அலுவலகங்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற விழிப்புணர்வூட்டல்களுக்கு மேலதிகமாக செய்தித்தாள் அறிவித்தல் மூலமாக மீனவர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தாமதித்து கிடைத்துள்ள விண்ணப்பப் பத்திரங்கள் தொடர்பில் தாமதித்தமைக்கான காரணங்கள் அறிவிக்கப்படும்வரை நிலுவை ஓய்வூதியம் செலுத்துதல் இடைநிறுத்தப்பட்டது. இன்றளவில் நிலுவை ஓய்வூதியம் சகிதம் ஓய்வூதியம் செலுத்தப்பட்டு வருகின்றது.

iii <u>பிரிவு 13 (ஈ)</u>

சபையினால் தற்போது உதவுதொகை செலுத்துனர் செலுத்திய தவணைகளை அடிப்படையாகக்கொண்டு மேற்படி தவணைகளுக்கான வட்டி வீதங்கள் செலுத்தப்பட்டு வருவதோடு மேற்படி தேறிய தவணகளை செலுத்துதல் ஆயுட்கணிப்பாளரொருவரின் அறிவுறுத்தலின் பேரில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

iv <u>பிரிவு 16</u>

இது பற்றி உதவுதொகை செலுத்துனர்கள் ஓய்வூதியத் திட்டத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படுகையில் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஓய்வூதியம் தெளிவாக ஒப்பந்தச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு மாவட்டக் கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர்கள் மூலமாகவே , உதவுதொகை செலுத்துனர்களிடமிருந்து தவணைப்பணம் அறவிடப்பட்டு வருவதோடு, மேற்படி உதவுதொகை செலுத்துனரின் உறுப்பாண்மை செல்லுபடியற்றதாக்கப்பட்டதா என்பதை விசாறித்தறிந்து தவணைப்பணத்தை அறவிட்டுக்கொள்ளல் சம்பந்தமாக முறையான அறிவுறுத்தல்களை தொடர்ச்சியாக வழங்க சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

<u>v பிரிவு 20</u>

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் புதிய சேர்த்துக்கொள்ளல் 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட உள்ளமையால் கடற்றொழிலாளர் ஓய்வூதியத்திட்ட மதியுரைக்குழுவினை இவ்வருடத்தில் அழைப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(ஆ) கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை சட்டத்தின்படி சேவையாற்றுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு கடற்றொழில் அமைச்சிற்குரிய கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் மேலதிக கடமைப் பங்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதன்படி

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் சபைக்கான இந்த செயற்பொறுப்பிற்காக தனிவேறான பணியாட்டொகுதி அங்கீகரிக்கப்படவில்லை என்பதால் இந்த பணிகளையும் உள்ளடக்கிப் புரிவதற்காக செலுத்தப்படுகின்ற இந்த கொடுப்பனவுகளுக்கான நிதி கடற்றொழில் அமைச்சினால் இந்த சபைக்கு வழங்கப்படுகின்றது. அது 1991 இல் கடற்றொழிலாளர் ஓய்வூதியம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்தே செலுத்தப்பட்டு வருகின்றது.

இந்த கொடுப்பனவிற்காக கீழ்க்காணும் அங்கீகாரங்கள் கிடைத்துள்ளன.

- கடற்றொழிலாளர் ஓய்வூதிய மதியுரை சபையின் அங்கீகாரம்.
- பணிப்பாளர் சபையின் அங்கீகாரம்.
- விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் இராஜாங்க செயலாளரின் அங்கீகாரம்.

3.2 <u>முகாமைத்துவ செயற்பாடுகள்</u>

2022 யூலை மாதத்தில் இருந்து இந்த நிதி கடற்றொழில் அமைச்சின்கீழ் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே கடற்றொழில் அமைச்சின் செயலாளரொருவர் பணிப்பாளர் சபையை பிரதிநிதித்துவம் செய்வதால், இற்றைவரை கடற்றொழில் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் இந்த நிதியம் பற்றிக் கவனஞ் செலுத்தப்படவில்லை.

டபிள்யு.எம். எம். பீ. வீரசேகர,
தலைவர்,
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.